


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:249 | 25-03-2026 | புதன்கிழமை | Free E- Paper | ●சென்னை ●மதுரை ●கோவை ●திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

25.03.2026 பங்குனி 11
புதன் கிழமை

சூரிய உதயம் 6.16

திதி:
இன்று மாலை 5.10 வரை சப்தமி பின்பு அஷ்டமி.

நட்சத்திரம்:
இன்று இரவு 8.34 வரை மிருகசீரிஷம் பின்பு திருவாதிரை.

யோகம் :
இன்று காலை 8.52 வரை ஆயுஷ்மான் பின்பு சௌபாக்யம்.

கரணம்
இன்று காலை 6.20 வரை கரசை பின்பு மாலை 5.10 வரை வணிசை பின்பு பத்திரை

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று இரவு 8.34 வரை விசாகம் பின்பு அனுஷம்.

நல்ல நேரம்
காலை 9.30 – 10.30.
மாலை 4.30 – 5.30

இராகு காலம்
பிற்பகல் 12.00 – 1.30

எமகண்டம்
காலை 7.30 – 9.00.

குளிகை
காலை 10.30 – 12.00.

இன்று சுபமுகூர்த்த நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# தேமுதிகவுக்கு 10 தொகுதிகள்!
# திமுகவுடன் ஒப்பந்தம் கையொப்பம்!

**மசன்னை, மார்ச் 25:**

சட்டப்பேரவைத் தேர்தலில் திமுகவுடன் புதிதாக கூட்டணி அமைத்துள்ள தேசிய முற்போக்கு திராவிட கழகத்திற்கு (தேமுதிக) 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இதற்கான ஒப்பந்தம் இருகட்சிகளுக்குமிடையே இன்று (மார்ச் 24) கையொப்பமானது.

ஏற்கெனவே ஒரு மாநிலங்களவை இடம் வழங்கப்பட்ட நிலையில், சட்டப்பேரவைத் தேர்தலில் 10 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

திமுக தொகுதியில் காங்கிரஸுக்கு அடுத்தபடியாக தேமுதிகவுக்கு அதிக தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

திமுக கூட்டணியில் இதுவரை காங்கிரஸ் கட்சிக்கு 28 தொகுதிகள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி 8, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 5, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 5, மதிமுக 4, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 2, மமகவுக்கு 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், மாநிலங்களவை உறுப்பினர் சுதீஷ், விஜய பிரபாகரன் உள்ளிட்டோர் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்த வருகைப்புரிந்தனர்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்னிலையில் தொகுதிப் பங்கீட்டு குழுவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், உடன்பாடு எட்டப்பட்டதைத் தொடர்ந்து, 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்ட ஒப்பந்தத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலினும் பிரேமலதா விஜயகாந்தும் கையொப்பமிட்டனர்.

பின்னர் செய்தியாளர்களுடன் பிரேமலதா பேசியதாவது:

"தேர்தல் கூட்டணிக்கு லேட்டாக வந்தாலும் லேட்டஸ்டாக வந்துள்ளோம். திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மொத்தம் 25 பேர் அடங்கிய பட்டியலை திமுகவிடம் வழங்கினோம். கூட்டணி நலனுக்காக குறைந்த தொகுதிகளைப் பெற்றுள்ளோம். நாங்களும் விட்டுக்கொடுத்துள்ளோம். நடைபெறவுள்ள தேர்தலில் திமுக கூட்டணி வெல்லும்.

மார்ச் 27ஆம் தேதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்படும். ஏப்ரல் 1 ஆம் தேதி வேட்புமனு தாக்கல் செய்யப்படும்.

நாளை அல்லது நாளை மறுநாள் எந்தெந்த தொகுதிகள் என்பது உறுதி செய்யப்படும். திமுகவிடம் வழங்கிய விருப்பப் பட்டியலில் விருதாச்சலம், ரிஷிவந்தியம் உள்ளிட்ட 25 தொகுதிகள் கேட்கப்பட்டுள்ளன" எனக் குறிப்பிட்டார்.

# தே.ஜ. கூட்டணியில் தமாகவுக்கு 5 தொகுதிகள்!



**சென்னை, மார்ச் 25:**

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தமிழ் மாநில காங்கிரஸுக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஒட்டன்சத்திரம், ஈரோடு மேற்கு, ராணிப்பேட்டை, கிள்ளியூர், கும்பகோணம் ஆகிய 5 தொகுதிகளில் போட்டியிடவுள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி தொகுதிப் பங்கீட்டுப்பேச்சுவார்த்தைக்காக எடப்பாடி பழனிசாமியை தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் இன்று (மார்ச் 24) சந்தித்தார்.

சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள எடப்பாடி பழனிசாமி இல்லத்தில், தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் உள்ளிட்ட தலைவர்கள் முகாமிட்டுள்ள நிலையில் ஜி.கே. வாசனும் வருகை புரிந்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதனையொட்டி தொகுதிப் பங்கீட்டுப்பேச்சுவார்த்தையில் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக (27), பாமக (அன்புமணி) (18), அமமுக (11) ஆகிய கட்சிகளுக்கு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. தென்னிந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சிக்கு ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இக்கூட்டணியில் உள்ள இதர கட்சிகளுக்கான இடங்கள் விரைவில் முடிவு செய்யப்படும் என எடப்பாடி பழனிசாமி அறிவித்திருந்தார்.

இந்நிலையில் தொகுதிப் பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த எடப்பாடி பழனிசாமி இல்லத்துக்கு ஜி.கே. வாசன் வருகை புரிந்தார். ஏற்கெனவே எடப்பாடி பழனிசாமி இல்லத்தில் பியூஷ் கோயல் இருந்த நிலையில், இந்த சந்திப்பில் தமாகவுக்கான தொகுதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

இந்த சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களுடன் ஜி.கே. வாசன் பேசியதாவது:

"ஒட்டன்சத்திரம், ஈரோடு மேற்கு, ராணிப்பேட்டை, கிள்ளியூர், கும்பகோணம் ஆகிய 5 தொகுதிகளில் தமிழ் மாநில காங்கிரஸ் போட்டியிடவுள்ளது. 5 தொகுதிகளிலும் வெற்றிபெற்று தமிழக மக்களின் மனநிலையை வேட்பாளர்கள் பிரதிபலிப்பார்கள். தேர்தல் ஆணையத்தால் சைக்கிள் சின்னத்தின் சில கோட்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாததால், தாமரை சின்னத்தில் போட்டியிடவுள்ளோம்" எனப் பேசினார்.

# குடும்ப தலைவிகளுக்கு விலையில்லா 'பிரிட்ஜ்'; அதிமுக தேர்தல் அறிக்கை

**சென்னை, மார்ச் 25:**

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அன்றே அறிவிக்கப்பட உள்ளன.

தேர்தலில் அதிமுக கூட்டணியில் பாஜக, பாமக, அமமுக, தமிழ்மாநில காங்கிரஸ், புதிய நீதிக்கட்சி, இந்திய ஜனநாயக கட்சி, புரட்சி பாரதம், தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், பெருந்தலைவர் மக்கள் கட்சி என பல்வேறு கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

இதனிடையே, தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அதிமுக ஏற்கனவே 3 கட்டங்களாக தேர்தல் அறிக்கை வெளியிட்டுள்ளது.



இந்நிலையில், அதிமுக முழுமையான தேர்தல் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது. சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்-அமைச்சருமான எடப்பாடி பழனிசாமி தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். அதிமுக தேர்தல் அறிக்கையில் 297 அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளன.

அதிமுக தேர்தல் அறிக்கை விவரம்:- குடும்ப தலைவிகளின் பணிச்சுமையை குறைக்க அனைத்து அரிசி குடும்ப அட்டைத்தாரர்களுக்கு (குடும்ப தலைவிகளுக்கு) விலையில்லா 'பிரிட்ஜ்' வழங்கப்படும். குடும்ப அட்டைதாரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் விலையில்லா அரிசியோடு, ஒரு கிலோ பருப்பு, ஒரு லிட்டர் சமையல் எண்ணெய் ஆகியவை விலையில்லாமல் வழங்கப்படும்ஆ ண்டுக்கு 3 சிலிண்டர் இலவசமாக வழங்கப்படும்.

மகளிர் உரிமைத் தொகை ரூ. 2,000 வழங்கப்படும்.

5 லட்சம் பேருக்கும் ஸ்கூட்டி வாங்க ரூ. 25,000 மானியம் வழங்கப்படும்

மாநிலம் முழுவதும் உள்ள குடும்பங்களுக்கு தலா ரூ. 10,000 வழங்கப்படும்.

கொத்தடிமை இல்லாத மாநிலமாக தமிழ்நாடு மாற்றப்படும்.

# மாலையில் உயர்ந்த தங்கம்



**சென்னை, மார்ச் 25:**

சென்னையில் நேற்று தங்கம் விலையில் 3 முறை மாற்றம் ஏற்பட்டது. நேற்று காலையில் கிராமுக்கு ரூ.670-ம், பிற்பகலில் ரூ.280-ம் குறைந்த நிலையில், மாலையில் அதிரடியாக கிராமுக்கு ரூ.670 உயர்ந்தது. நேற்று மாலை நிலவரப்படி தங்கம் விலை ஒரு சவரன் ரூ.1,06,720-க்கும், ஒரு கிராம் ரூ.13,640-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

நேற்று காலையில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.2,720 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,04,000-க்கும், கிராமுக்கு ரூ.340 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,000-க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் இன்று மாலையில் தங்கம் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று மாலையில் சவரனுக்கு ரூ.2,000 ஆயிரம் உயர்ந்து, ஒரு சவரன் ரூ.1,06,000-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.250 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.13,250-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையை பொறுத்த வரையில் இன்று காலையில் கிராமுக்கு ரூ.10 குறைந்த நிலையில் மாலையில் அதிகரித்துள்ளது. அதன்படி வெள்ளி விலை மாலையில் கிராமுக்கு ரூ.10-ம், கிலோவுக்கு ரூ.10 ஆயிரமும் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.250-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் விற்பனையாகி வருகிறது.

# ரெயில் டிக்கெட் ரத்து நடைமுறையில் மாற்றம் - ஏப்ரல் 1 முதல் அமல்

**புதுடெல்லி, மார்ச் 25:**

ரெயில் டிக்கெட்டுகளை ரத்து செய்யும்போது பணம் திரும்பப் பெறுவது தொடர்பான நடைமுறையில் மாற்றம் செய்து இந்திய ரெயில்வே அறிவித்துள்ளது. மேலும் இந்த புதிய நடைமுறை வருகிற ஏப்ரல் மாதம் 1-ந்தேதி முதல் அமலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நடைமுறையின்படி, உறுதிசெய்யப்பட்ட ரெயில் டிக்கெட்டை (Confirm Ticket), ரெயில் புறப்படுவதற்கு 72 மணி நேரத்திற்கு முன்னதாக ரத்து செய்தால், குறைந்தபட்ச ரத்து கட்டணம் (Cancellation Charges) மட்டுமே பிடித்தம் செய்யப்படும். இதன் மூலம் அதிகபட்ச தொகையை திரும்ப பெறலாம்.



ரெயில் புறப்படுவதற்கு 72 மணி முதல் 24 மணி நேரத்திற்கு முன்னதாக டிக்கெட்டை ரத்து செய்தால், பயணக் கட்டணத்தில் 25 சதவீதம் பிடித்தம் செய்யப்படும். ரெயில் புறப்படுவதற்கு 24 மணி நேரம் முதல் 8 மணி நேரத்திற்கு முன்னதாக டிக்கெட்டை ரத்து செய்தால், பயணக் கட்டணத்தில் 50 சதவீதம் பிடித்தம் செய்யப்படும். ரெயில் புறப்படுவதற்கு 8 மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் டிக்கெட்டை ரத்து செய்தால், பணம் திரும்ப அளிக்கப்படமாட்டாது.

இந்த நடவடிக்கையின் மூலம் ரெயில்களில் காலியாகும் இருக்கைகளை குறைத்து, அவற்றை மற்ற பயணிகளுக்கு வழங்கும் வாய்ப்பை அதிகரிக்க முடியும் என்று ரெயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது. பயணிகள் முன்கூட்டியே தங்களது பயணத் திட்டங்களை உறுதிப்படுத்தினால், ரெயில் சேவையின் செயல்திறன் மேம்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ரெயில் புறப்படுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு வரை பயணிகள் தாங்கள் ஏறும் இடத்தை (Boarding Point) மாற்றிக்கொள்ளவும் ரெயில்வே அனுமதித்துள்ளது. பல ரெயில் நிலையங்களை கொண்ட நகரங்களில் உள்ள பயணிகள், தங்களுக்கு வசதியான எந்த ரெயில் நிலையத்திலிருந்தும் ஏற இந்த வசதி உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது, பயணப் பட்டியல் தயாரிக்கப்படுவதற்கு முன்பு வரை மட்டுமே ஏறும் இடத்தை மாற்ற அனுமதிக்கப்படுகிறது.






# திருக்குறள் குறள்-569

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்



முன்னமே தக்கவாறு அரண் செய்து கொள்ளாத அரசன் போர் வந்த காலத்தில் (தற்காப்பு இல்லாமல்) அஞ்சி விரைவில் அழிவான்.

## சிந்திக்க ஒரு நொடி



கொக்கு போல்
எதற்காகவும்
காத்திருக்காமல்..
சில இடங்களில்
மக்கு போல்
கடந்து செல்வது
புத்திசாலித்தனம்

**உஷா முத்துராமன்**

## தெருமுனை பிரச்சாரக் கூட்டம்



**திருவண்ணாமலை, மார்ச் 25:**
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம் கலசபாக்கம் சட்டமன்ற தொகுதி ஆதமங்கலம் புதூர், வெங்கட்டம்பாளையம், கெங்கவரம், தேவராயன்பாளையம், காந்தப்பாளையம், மேல்சோழங்குப்பம், வீரளூர், பட்டியந்தல் ஆகிய ஊராட்சிகளில் 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற பொது தேர்தல் வாக்குறுதி பிரசுரங்களை பொதுமக்களுக்கு போளூர் சட்டமன்ற உறுப்பினர் அக்ரி S. S. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பொது மக்களுக்கு வாக்குறுதி பிரசுரங்களை வழங்கி, தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சி ஏற்பாடு S.கோவிந்தராஜ் கலசபாக்கம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர், கூட்டணி கட்சி சார்ந்த நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தமிழக அரசு புதிய விரிவான கொள்கை



மாணவர்களின் மனநலத்தை பாதுகாக்கவும், தற்கொலை எண்ணங்களை குறைக்கவும் தமிழக அரசு புதிய விரிவான கொள்கையை அறிவித்துள்ளது. கல்வி வளாகங்களில் அதிகரிக்கும் மனஅழுத்த பிரச்சினைகளை எதிர்கொள்ள தடுப்பு மற்றும் ஆதரவு நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

## ஏப்ரல் மாதம் முதல் ரேஷன் அட்டைதாரர்களுக்கு ஒரு புதிய மாற்றம்



மத்திய அரசு 2026 ஏப்ரல் மாதம் முதல் ரேஷன் அட்டைதாரர்களுக்கு ஒரு புதிய மாற்றத்தை அறிவித்துள்ளது. அதன்படி, ஏப்ரல்ஜூன் மாதங்களுக்கு தேவையான அரிசி, கோதுமை போன்ற உணவுத்தானியங்கள் மூன்று மாதத்திற்கு ஒரே முறையில் வழங்கப்படும்.

# பராபவ வருஷ வசந்த நவராத்திரி 5 -ஆம் நாள் உற்சவம்





**சென்னை மார்ச்24:**
திருவள்ளூர் ஸ்ரீ வாசவி கன்யகாபரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் பராபவ வருஷ வசந்த நவராத்திரி உற்சவம் 5-ஆம் நாள் வாசவி அம்மன் மூலவர் குதிரை வாகன அலங்காரத்தில், உற்சவர் மாகசேவை அலங்காரமும் வெண்மை நிற மாலைகளால் அலங்கரித்து, மல்லிகைப் பூக்களால் அலங்கரித்து, தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுகள் பாடி, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு ஜெய் வாசவி ஜெய் ஜெய் வாசவி முழக்கமிட்டு நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# வசந்த நவராத்திரி 5-ஆம் நாள் உற்சவம்



**திருவண்ணாமலை, மார்ச்25:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் வசந்த நவராத்திரி உற்சவம் 5-ஆம் நாள்( துன்ப நீக்கம் ) ஸ்ரீ மீனாட்சி அம்மனுக்கு சிறப்பு பூஜை, அபிஷேகங்கள் ரோஜாப்பூ, சாமந்திப்பூ மாலைகளால் அலங்கரித்து, தாமரைப் பூக்களால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் வசந்த நவராத்திரி உற்சவத்தில் கலந்துகொண்டு மீனாட்சி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோவில் பிரம்மோற்சவ விழா கொடியேற்றம்..!



**வந்தவாசி, மார்ச் 25:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீரங்கநாயகி தாயார் சமேத ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவிலில் பங்குனி மாத பிரம்மோற்சவ விழா நேற்று கருடக் கொடியேற்றத்துடன் விமரிசையாக தொடங்கியது. முன்னதாக இந்த வைபவத்தில் மூல மூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது.

பிறகு புஷ்ப அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர். இதில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது. உற்சவ மூர்த்திகள் மேளதாளத் துடன் வீதியுலா வந்தனர்.

**பா.சீனிவாசன், வந்தவாசி.**

# விருது வழங்கல்




**மயிலாடுதுறை, மார்ச், 25:**
மயிலாடுதுறை கிங்ஸ் ரோட்டரி சங்கத்தின் முப்பெரும் விழாவில் பல்வேறு துறைகளில் சிறப்புடன் பணியாற்றிய வரும் ஆளுமைகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அந்த வகையில், நாதஸ்வர இசை பிரிவில் பிரபல நாதஸ்வர விதவான் திருக்கடையூர் பாலசுப்பிரமணியனின் மனைவி கார்த்திகா பாலசுப்ரமணியனுக்கு விருது வழங்கப்பட்டது.

## பங்குனி மாதம் கிருத்திகையை முன்னிட்டு சிறப்பு வழிபாடு



**கடலூர் , மார்ச் 25**
கடலூர் மாவட்டம் மார்ச் 24 மேல்புவனகிரி அருள்மிகு மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோவிலில் பங்குனி மாத கிருத்திகையை முன்னிட்டு அருள்மிகு வள்ளி தேவசேனை ஆறுமுக பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் முருகப்பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங் களும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## வாக்குப்பதிவு இயந்திரங்கள் போலீஸ் பாதுகாப்புடன் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது



**திருவண்ணாமலை மார்ச் 25:**
கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு கிடங்கில் இருந்து அனைத்து சட்டமன்றத் தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் போலீஸ் பாதுகாப்புடன் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# கோவில்பட்டி பசுமை - தூய்மை இயக்கம் விழிப்புணர்வு கருத்தரங்கம்




**கோவில்பட்டி, மார்ச் 25:**
கோவில்பட்டியை தூய்மையாகவும், பசுமையாகவும் மாற்றுவதற்கான விழிப்புணர்வு கருத்தரங்கம் கோவில்பட்டி சௌபாக்யா மஹாலில் நடைபெற்றது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கிய நிகழ்ச்சியில் கோவில்பட்டி பசுமை- தூய்மை இயக்கத்தின் தலைவர் I ரவி மாணிக்கம் கருத்தரங்கத்திற்கு தலைமை வகித்தார், கௌரவ தலைவர் விநாயகா G ரமேஷ், செயலாளர் ஆசியா ஃபார்ம்ஸ் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இணை செயலாளர் அபிராமி P முருகன் வரவேற்புரை நிகழ்த்தினார். நிகழ்ச்சியில் ஒருங்கிணைப்பாளர் C. சுப்பிரமணியன் அறிமுகவுரை நிகழ்த்தினார். திண்டுக்கல் வாஷ் இன்ஸ்டிடியூட் இயக்குனர் Dr. ஆறுமுகம் காளிமுத்து கருத்துரை வழங்கினார். வழக்கறிஞர் ஜெயஸ்ரீ கிறிஸ்டோபர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். துணைத் தலைவர் க தமிழரசன் நன்றி உரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் பொருளாளர் Er. ராகவன், புனித ஓம் கல்வி நிறுவனங்களின் தாளாளர் லட்சுமண பெருமாள், ரோட்டரி சங்க தலைவர் ராஜ்குமார் , உலக திருக்குறள் கூட்டமைப்பு முத்துச்செல்வம், VSS வெங்கடேஷ், MSSV பாபு, எழுத்தாளர் முருகேஸ்வரி, தமிழ்நாடு பெண்கள் இணைப்பு குழு மேரி ஷீலா, இசை ஆசிரியர் அமலபுஷ்பம், முருக சரஸ்வதி, ராமலட்சுமி, BSNL துரைராஜ், LIC லெனின், PGB பாலாஜி, இந்திய கலாச்சார நட்புறவு கழகம் கருத்துரிமை பாதுகாப்பு கூட்டமைப்பு நிர்வாகிகள், வணிகர் சங்க தலைவர் ராதாகிருஷ்ணன், மருத்துவர்கள், தொழில் முனைவோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள், உள்ளிட்டு 100க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர், தேசிய கீதம் பாடப்பட்டு நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

# தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் கோவை மாவட்ட சங்க கட்டிடத்தில் கோவை மண்டல கருத்தரங்கம்



**கோவை, மார்ச் 25:**
கோவை மண்டல கருத்தரங்கம் நேற்று தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் கோவை மாவட்ட சங்க கட்டிடத்தில் மாவட்ட தலைவர் மதன் தலைமையில் நடைபெற்றது.

ஈரோடு பன்னீர் செல்வம் நீலகிரி குமார் முன்னிலை வகித்தனர். கோவை மாவட்ட செயலாளர் அருணகிரி வரவேற்பு நிகழ்த்தினார்.

மாநில துணைத் தலைவர் அரங்கநாதன் துவக்கவுரையாற்றினார். மாநில பொருளாளர் செந்தமிழ் செல்வன் அரசும் நாமும் என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார்.

மாநில செயலாளர் முனைவர் சு கிருஷ்ணன் அமைப்பும் நமது கோரிக்கைகளும் என்ற தலைப்பில் உரையாற்றினார் ஈரோடு மாவட்ட செயலாளர் பாலகிருஷ்ணன் நன்றியுரையாற்றினார்.

கோவை ஈரோடு திருப்பூர் நீலகிரி மாவட்டங்களிலிருந்து 160 பேர் பங்கேற்றனர்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### “பழனிசாமி, அண்ணாமலை போல எங்களுக்கு பேசத் தெரியாது” - செல்வப்பெருந்தகை சொல்கிறார்



தமிழகத்தில் நடக்கும் அனைத்து பிரச்சினைகள் தொடர்பாகவும் தமிழக காங்கிரஸ் சட்டப் பேரவையிலும், மக்கள் மன்றத்திலும் கண்டித்து வருகிறது. தமிழக அரசைக் கண்டித்து எதற்காக போராட்டம் நடத்த வேண்டும்? எல்லாவற்றுக்கும் போராட்டமே தீர்வாகிவிடாது. கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்காத பட்சத்தில்தான் போராட்டக்களத்தை நோக்கி நகர வேண்டும். தூத்துக்குடி விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு உறுதியளித்த பிறகு, நான் போராட்டம் நடத்தினால் அதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்?

யாரோ சொல்வது போல் எல்லாம் எங்களால் இயங்க முடியாது. 140 ஆண்டு காலப் பாரம்பரியம் கொண்ட பேரியக்கம் காங்கிரஸ். எனவே, எப்போது போராட வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். எங்களிடம், ‘இதைச் செய்யவில்லையா, அதைச் செய்யவில்லையா’ எனக் கேள்வி எழுப்ப வேண்டிய அவசியமில்லை. பழனிசாமி அல்லது அண்ணாமலை போல எங்களுக்கு பேசத் தெரியாது. தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான காங்கிரஸின் தேர்தல் அறிக்கை விரைவில் வெளியிடப்படும். 2014-ல் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்த மோடிக்கு, 2019-ல் சரிவு தொடங்கியது. 2024-ல் 400 இடங்களில் வெற்றி பெறுவோம் என்றார்கள். ஆனால், தனிப் பெரும்பான்மை கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. சந்திரபாபு நாயுடு, நிதிஷ்குமார் ஆகியோரது ஆதரவு இல்லையென்றால் அந்த ஆட்சி கீழே விழுந்துவிடும். எனவே, பாஜக தங்களைச் சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும். பாஜக கூட்டணியில் இணையும் கட்சிகள், மூழ்கும் கப்பலில் ஏறுவதற்குச் சமம். தமிழக மக்கள் ஒருபோதும் பாஜக-வை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; ஏனெனில் அது தமிழ் மண்ணுக்கு எதிரான கட்சி.

தேர்தல் வரும் மாநிலங்களுக்கு மட்டுமே பட்ஜெட்டில் திட்டங்களை அறிவிப்பார்கள். ஆனால், தமிழகத்திற்கு அத்தகைய திட்டங்களைக் கூட அவர்கள் அறிவிக்கவில்லை. தமிழகத்தில் தோற்றுவிடுவோம் என்பதால் தான் ஆளுநர் ரவியை மேற்கு வங்கத்தில் போய் தொந்தரவு செய்யுங்கள் என அனுப்பிவிட்டார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### “திமுக ஒதுக்கும் அனைத்து இடங்களிலும் நாம் கட்டாயம் வெற்றிபெற வேண்டும்” - பிரேமலதா



“திமுக ஒதுக்கும் அனைத்து இடங்களிலும் நாம் கட்டாயம் வெற்றிபெற வேண்டும்” என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமையகத்தில் பிரேமலதா தலைமையில் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதுகுறித்து மாவட்ட செயலாளர்கள் கூறுகையில், “கூட்டத்தில் பேசிய பிரேமலதா, ‘திமுக ஒதுக்கும் அனைத்து இடங்களிலும் நாம் கட்டாயம் வெற்றிபெற வேண்டும்.

சீட் கிடைக்காதவர்கள் சோர்வடையாமல், 234 தொகுதிகளிலும் தேமுதிகவே போட்டியிடுவதாகக் கருதிப் பணியாற்ற வேண்டும். உள்ளாட்சித் தேர்தலில் நமக்குக் கூடுதல் இடங்கள் கிடைக்கும்’ என அறிவுறுத்தினார்” என்றனர்.

மேலும், ரிஷிவந்தியம் அல்லது விருத்தாச்சலத்தில் பிரேமலதாவும், விருதுநகரில் விஜய பிரபாகரனும் போட்டியிட வேண்டும் என்றும், கடலூர், விழுப்புரம், விக்கிரவாண்டி உள்ளிட்ட குறிப்பிட்ட தொகுதிகளைப் பெற்றால் வெற்றி எளிது என்றும் நிர்வாகிகள் கோரிக்கை விடுத்தனர். அதற்குப் பதிலளித்த பிரேமலதா, “நமது கோரிக்கைகளை திமுகவிடம் முன்வைப்போம், அவர்கள் நல்ல தொகுதிகளை ஒதுக்குவார்கள்” என உறுதியளித்தார்” என்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பிரேமலதா கூறியதாவது: மாவட்ட செயலாளர்களுடன் தேர்தல் வியூகங்கள் குறித்து ஆலோசித்தோம். திமுகவுடன் பேச்சுவார்த்தை நடத்த நாளை ஐந்து பேர் கொண்ட குழு அறிவிக்கப்படும். அவர்கள் தொகுதிகளை இறுதி செய்தவுடன் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும்.

## திமுக அணியில் மார்க்சிஸ்ட்டுக்கு 5 தொகுதிகள்

திமுக, மார்க்சிஸ்ட் தொகுதி பங்கீட்டில் நீடித்து வந்த இழுபறி முடிவுக்கு வந்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஒப்பந்தம் நேற்று கையெழுத்தானது.



தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெற உள்ளது. திமுக சார்பில் கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை கடந்த பிப்ரவரி 22-ம் தேதி தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. இதில் காங்கிரசுக்கு 28, இந்திய கம்யூ. 5, மதிமுக 4, முஸ்லிம் லீக், மமக-க்கு தலா 2 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதர கட்சிகளுடன் திமுக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

மார்க்சிஸ்ட் கடந்த முறை போட்டியிட்ட 6 தொகுதிகளை கேட்டது. ஆனால், கூட்டணிக்கு புதிய கட்சிகள் வந்துள்ளதால் 5 தொகுதிகள் மட்டுமே வழங்க முடியும் என்று திமுக தெரிவித்தது. இதனால் உடன்பாடு ஏற்படாமல் இரு தரப்பிலும் இழுபறி நீடித்து வந்தது.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலினை, மார்க்சிஸ்ட் குழுவினர் நேற்று முன்தினம் சந்தித்து பேசினர். முடிவு எட்டப்படாத சூழலில் நேற்றும் மார்க்சிஸ்ட் குழுவினர் ஸ்டாலினை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போதும், 5 தொகுதிகள் மட்டும் ஒதுக்க முடியும் என்று ஸ்டாலின் உறுதியாக தெரிவித்தார்.

இது தொடர்பாக ஆலோசனை நடத்திய மார்க்சிஸ்ட் கட்சியினர் 5 தொகுதிகளை ஏற்றுக் கொள்ள முடிவு செய்தனர்.

இதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் இரவு மார்க்சிஸ்ட் கட்சியினர் திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் சென்றனர்.

அப்போது, சட்டப்பேரவைத் தேர்தலில் மார்க்சிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின், மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. இதைத் தொடர்ந்து திமுக - மார்க்சிஸ்ட் இடையே பல நாட்களாக நீடித்து வந்த இழுபறி முடிவுக்கு வந்துள்ளது.

## மகனுக்கு வழிவிடுகிறாரா பொன்முடி? சொல்லாமல் சொல்லும் சுவர் விளம்பரங்கள்

தேர்தல் பேச்சு ஆரம்பித்த நாளில் இருந்தே, ‘இம்முறை திமுக-வில் சீனியர்கள் சிலருக்கு வாய்ப்பு இருக்காது’ என்ற செய்தியும் சேர்ந்தே றெக்கை கட்டியது. அந்த சீனியர்கள் வரிசையில், பொன்முடி, துரைமுருகனின் பெயர்கள் பலமாக அடிபட்டன.

இதை உறுதுப்படுத்தும் விதமாக இப்போது பொன்முடியின் திருக்கோவிலூர் தொகுதியில் எழுதப்பட்டுள்ள சுவர் விளம்பரங்களில் அவருக்குப் பதிலாக அவரது மகன் கவுதம சிகாமணியின் பெயரும் உதயசூரியனும் கறுப்பு சிவப்பில் கண்ணைப் பறிக்கின்றன.

திருக்கோவிலூரை தேமுதிக-வும் விருப்பப் பட்டியலில் வைத்துள்ள நிலையில், தொகுதி யாருக்கு என்று இன்னும் முடிவாகாத நிலையிலேயே கிட்டத்தட்ட கவுதமசிகாமணிதான் அங்கே வேட்பாளர் என்ற தோற்றம் உருவாக்கப்பட்டு வருகிறது. திமுக-வினரைக் கேட்டால், “இம்முறையும் திருக்கோவிலூர் தொகுதி திமுக-வுக்குத்தான். ஆனால், அமைச்சருக்குப் (பொன்முடி) பதிலாக அவரது பையன் போட்டியிடுவார் போலிருக்கிறது” என்று வெளிப்படையாகவே பேசுகிறார்கள். இது தொடர்பாக திருக்கோவிலூர் ஒன்றிய திமுக செயலாளர் முருகனிடம் கேட்டதற்கு, “கிடைக்கும் சுவர்களில், எங்கள் தலைவரின் படம், சின்னம், கூட்டணிக் கட்சிகளின் கொடி, தலைவர்களின் படத்தை மட்டுமே வரையச் சொல்லியிருந்தோம். சிலர் ஆர்வக் கோளாறில் இப்படி எழுதியுள்ளனர். கவுதம சிகாமணி வேட்பாளராக இருக்க வேண்டும் என்பது எங்களது விருப்பம். ஆனால், தலைமை அறிவிக்காமல் நாங்களாக எதையும் செய்ய மாட்டோம்” என்றார். இதே தொகுதிக்கு உட்பட்ட முகையூர் ஒன்றிய திமுக செயலாளர் ரவிசந்திரனிடம் கேட்டதற்கு, “கிராமப்புறங்களில் சிலர் தவறாக எழுதிவிட்டனர். உடனே அதை அழிக்கச் சொல்லி விட்டோம்” என்றார்.

பெயர் சொல்ல விரும்பாத திமுக நிர்வாகிகளோ, “திருக்கோவிலூர் தொகுதிக்கு விருப்ப மனு அளிக்க பொன்முடி அறிவாலயம் சென்றார். ‘இந்த முறை நீங்கள் போட்டியிட வேண்டாம்’ என்று தலைமையில் இருந்து சொன்னதாகத் தெரிகிறது. இருந்தாலும் அவரது மகனுக்கு சீட் உறுதியாகி இருக்கிறது. அதனால் தான் இந்த சுவர் விளம்பரங்கள்” என்றனர்.

## திமுகவில் வேட்பாளர் நேர்காணல் நிறைவு: ஏப்ரல் முதல் வாரத்தில் பட்டியல் வெளியீடு?



திமுகவில் கடந்த 5 நாட்களாக நடைபெற்ற வேட்பாளர் நேர்காணல் நிறைவு பெற்றது. ஏப்ரல் முதல் வாரத்தில் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என்று தகவல் வெளியாகி உள்ளது.

திமுகவில் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட விருப்பமனு அளித்தவர்களுக்கான நேர்காணல் சென்னை அறிவாலயத்தில் கடந்த மார்ச் 17-ம் தேதி தொடங்கி நேற்றுடன் முடிந்தது. இறுதி நாளில் திருச்சி, தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, மயிலாடுதுறை, நாகை, திருவாரூர் ஆகிய மாவட்டங்களின் தொகுதிகளுக்கான நேர்காணல் நடைபெற்றது.

முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தலைமையிலான குழு விருப்பமனு அளித்தவர்களிடம் விரிவாக நேர்காணல் நடத்தியது. இதில் அமைச்சர்கள் கே.என் நேரு, அன்பில் மகேஸ், கோவி. செழியன், சிவசங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர். அவர்களிடம் தொகுதி நிலவரம், மற்ற கட்சிகளின் வாக்கு விகிதம், அரசின் நலத்திட்டங்களால் பலனடைந்தவர்கள் விவரம், எஸ்ஐஆர் தாக்கம் உட்பட பல்வேறு கேள்விளை முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டறிந்தார்.

மேலும், தலைமை எடுக்கும் முடிவுக்கு கட்டுப்பட வேண்டும் என்றும் முதல்வர் அறிவுறுத்தியதாக கூறப்படுகிறது. தொடர்ந்து திமுக வேட்பாளர் பட்டியல் ஏப்ரல் முதல் வாரத்தில் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 6 தொகுதிகள் கிடைக்காததால் அதிமுக கூட்டணியில் ஜி.கே.வாசன் அதிருப்தி

அதிமுக தலைமயிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நேற்று நடந்தது.



இதற்காக, நேற்று டெல்லியில் இருந்து மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் சென்னை வந்தார். கிண்டியில் உள்ள ஐடிசி கிராண்ட் சோழா ஓட்டலில் பியூஷ் கோயலை சந்தித்த, தமாகா தலைவர் ஜி.கே.வாசன் தங்களுக்கான தொகுதிகளின் எண்ணிக்கை குறித்து பேசினார்.

பின்னர், ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் பியூஷ் கோயல் முன்னிலையில், பாஜக 27, பாமக 18, அமமுக 11 தொகுதிகள் என ஒப்பந்தம் கையெழுத்தானது. ஜி.கே. வாசன் கேட்ட தொகுதிகள் கிடைக்காததால், அந்த நிகழ்வில் அவர் பங்கேற்காமல் புறக்கணித்தார்.

இதுதொடர்பாக தமாகா மூத்த நிர்வாகிகளிடம் கேட்டபோது, “தமிழகத்தில் கடந்த 2021-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலை அதிமுக, பாஜக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுடன் இணைந்து தமாகா சந்தித்தது. அந்த தேர்தலில் தமாகா 6 இடங்களில் போட்டியிட்டது. அடுத்து 2024-ல் நடைபெற்ற மக்களவை தேர்தலில் 3 இடங்களில் தமாகா நின்றது.

தமிழகத்தில் வரவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் தமாகாவுக்கு 8 இடங்கள் கேட்கப்பட்டது. அதற்காக தான் மாநிலங்களவை எம்.பி. பதவி வேண்டாம் என்று தெரிவித்தோம். ஆனால், 4 தொகுதிகள் மட்டுமே கொடுப்பதாக தெரிவித்தனர்.

கடைசியாக 6 தொகுதிகள் கண்டிப்பாக வேண்டும் என்று கேட்டோம். ஆனால், அவர்கள் அதே 4 தொகுதிகளில் இருக்கின்றனர்.

அதனால் தான் தொகுதி பங்கீடு நிகழ்வில் வாசன் பங்கேற்கவில்லை. 6 தொகுதிகளுக்கு குறைவாக பெற்று கொள்ள மாட்டோம். நாங்கள் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுவோம்” என்றனர்.

## பாமகவுக்கு 18 தொகுதிகள்: அன்புமணிக்கு காத்திருக்கும் சம்பவங்கள், சவால்கள்!

அன்புமணி தரப்பு, ராமதாஸ் தரப்பு என இரண்டாக உடைந்து கிடக்கும் நிலையில், பாமகவுக்கு 18 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. அன்புமணியின் இந்த ‘தொகுதி உடன்பாடு வியூகம்’ குறித்து சுருக்கமாகப் பார்ப்போம்.



பாமக கட்சி தொடங்கியது முதலே 20 தொகுதிகளுக்கு குறைவாக போட்டியிடும் தேர்தல் இதுதான். 1991 சட்டப்பேரவைத் தேர்தலில் தனித்துக் களமிறங்கிய பாமக ஓர் இடத்தில் மட்டும் வென்றது. 1996 தேர்தலிலும் தனித்து போட்டியிட்டு 4 இடங்களில் வாகை சூடியது.

அதன்பின்னர் 2001-ல் அதிமுக கூட்டணியில் 27 இடங்களில் போட்டியிட்டு 20 தொகுதிகளிலும், 2006-ல் திமுக கூட்டணியில் 31 இடங்களில் போட்டியிட்டு 18 தொகுதிகளையும் வென்றது பாட்டாளி மக்கள் கட்சி.

2011 தேர்தலில் திமுக கூட்டணியில் 30 தொகுதிகளில் போட்டியிட்ட பாமக 3 இடங்களில் மட்டுமே வென்ற நிலையில், 2016-ல் தனித்துப் போட்டியிட்டு அனைத்து தொகுதிகளிலும் தோல்வியடைந்தது. அதன் பின்னர் 2021-ல் அதிமுக அணியில் 5 தொகுதிகளில் பாமக வென்று மீண்டும் சட்டப்பேரவைக்குள் நுழைந்தது. இப்படி பாமக தொடங்கியது முதலே 20-க்கும் குறைவான தொகுதிகளில் போட்டியிடும் முதல் தேர்தல் இதுதான். அதுமட்டுமின்றி பாமக இரு அணிகளாக உடைந்த பின்னர் போட்டியிடும் முதல் தேர்தலும் இதுதான். 2024 மக்களவைத் தேர்தலில் கூட்டணி குறித்து ராமதாஸ் - அன்புமணி இடையே உருவான கசப்பு நாளுக்கு நாள் வளர்ந்து, பிரிவினை அளவுக்குச் சென்றது. இதனால் அன்புமணியின் வசம் அதிகாரப்பூர்வ பாமகவும், சின்னமும் உள்ளது. அதே நேரத்தில் பாமக தனிக்கட்சியாக செயல்பட்டு வருகிறார் ராமதாஸ். இம்முறை ராமதாஸும், சசிகலாவும் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திப்பதாக அறிவித்துள்ளனர்.

வட மாவட்டங்களில் இன்னமும் பாமக பலமாகவே உள்ளது. ராமதாஸின் பிரிவு பலவீனம் என்றாலும், கட்சியின் 80 சதவீதத்துக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் அன்புமணி பக்கமே உள்ளனர். அதுபோல ராமதாஸ் திமுகவுடன் கூட்டணி அமைப்பார் என சில நிர்வாகிகள் நம்பியிருந்தனர். அவர் சசிகலாவோடு கூட்டணி அமைத்ததால், இன்னும் சில முக்கிய நிர்வாகிகளும் அதிருப்தியில் உள்ளதாக சொல்லப்படுகிறது. எனவே பலரும் மீண்டும் அன்புமணி நோக்கி படையெடுக்க வாய்ப்புள்ளதாக சொல்லப்படுகிறது.

கடந்த முறை அதிமுக அணியில் 23 தொகுதிகள் மற்றும் ஒரு ராஜ்யசபா சீட் பாமகவுக்கு ஒதுக்கப்பட்டது. இம்முறை ராமதாஸின் பிரிவை காரணம் காட்டி 5 தொகுதிகளை அதிமுக குறைத்துவிட்டது. ஆனாலும், ராஜ்யசபா சீட் கொடுக்கப்பட்டதால், 18 இடங்களை மனமுவந்து ஏற்றிருக்கிறார் அன்புமணி.

குறைவான இடங்களை பெற்றாலும், அதில் துல்லியமான கவனம் செலுத்தி வெற்றி பெற அன்புமணி முடிவு செய்துள்ளதாக பாமக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதெல்லாம் தாண்டி வட மாவட்டங்கள் தனது கோட்டை என்பதை அன்புமணி நிரூபிப்பாரா என பார்ப்போம்.

## திருச்சி வழியாக செல்லும் ரெயில் சேவைகளில் மாற்றம்

**திருச்சி, மார்ச் 25:**

பராமரிப்பு பணி காரணமாக திருச்சி வழியாக செல்லும் ரெயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**திருச்சி-மயிலாடுதுறை பயணிகள் ரெயில்:** திருச்சி ஜங்ஷனில் இருந்து காலை 6.05 மணிக்கு புறப்படும் திருச்சி மயிலாடுதுறை பயணிகள் ரெயில் (வண்டி எண்: 56700) வருகிற 25, 27, 30 மற்றும் ஏப்ரல் 1 ஆகிய தேதிகளில் பகுதியாக ரத்து செய்யப்படுகிறது. இந்த ரெயிலானது திருச்சியில் இருந்து கும்பகோணம் வரை மட்டுமே இயங்கும். இதேபோல் மயிலாடுதுறை - செங்கோட்டை எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்: 16847) மேற்கண்ட தேதிகளில் மயிலாடுதுறை - கும்பகோணம் இடையே பகுதியாக ரத்து செய்யப்படுகிறது. இந்த ரெயிலானது கும்பகோணத்தில் இருந்து மதியம் 1.08 மணிக்கு புறப்பட்டு செங்கோட்டை செல்லும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

### குருவாயூர்–சென்னை

செங்கோட்டை -மயிலாடுதுறை எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்:16848) வருகிற 26-ந்தேதி முதல் 31-ந்தேதி வரையிலும், மும்பை சி.எஸ்.டி.எம். எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்: 16352) வருகிற 26-ந்தேதி மற்றும் 29-ந்தேதிகளிலும், கன்னியாகுமரி-ஹவுரா அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்:12666) வருகிற 28-ந்தேதியிலும், குருவாயூர்-சென்னை எழும்பூர் எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்:16128) வருகிற 25-ந்தேதி முதல் 29-ந்தேதி வரையிலும், கன்னியாகுமரி-ஐதராபாத் சிறப்பு ரெயில் (வண்டி எண்: 07229) வருகிற 27-ந்தேதியிலும் மதுரை, மானாமதுரை, காரைக்குடி வழியாக திருச்சி வந்து செல்லும். இந்த தகவலை திருச்சி கோட்ட ரெயில்வே மக்கள் தொடர்பு அதிகாரி வினோத் தெரிவித்துள்ளார்.

## உயர் ரத்த அழுத்தம், காய்ச்சல், சளி பிரச்சினைகளுக்கான 198 மருந்துகள் தரமற்றவை: ஆய்வில் உறுதி

**சென்னை, மார்ச் 25:**

நாடு முழுவதும் விற்பனை செய்யப்படும் அனைத்து மாத்திரை, மருந்துகளையும் மத்திய, மாநில மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியங்கள் மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன. அப்போது, தரமற்ற, போலி மருந்துகள் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட உற்பத்தி நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதன்படி, கடந்த மாதத்தில் மட்டும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்து மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அதில், உயர் ரத்த அழுத்தம், காய்ச்சல், சளி, கிருமி தொற்று, அஜீரண பிரச்சினைகள் உள்ளிட்ட பாதிப்புகளுக்கு பயன்படுத்தப்படும் 198 மருந்துகள் தரமற்றவையாகவும், 4 மருந்துகள் போலியானதாகவும் இருந்தது கண்டறியப்பட்டது.

அந்த விவரங்கள், பொதுமக்களின் விழிப்புணர்வுக்காக மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியத்தின் HTTPS://CDSCO.GOV.IN/ என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட உற்பத்தி நிறுவனங்களிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. அதன் பின்னர், அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்க மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு வாரியம் முடிவு செய்துள்ளது.

## மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் பங்குனி விழா கொடியேற்றத்துடன் தொடக்கம்

**சென்னை, மார்ச் 25:**



மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் பங்குனிப் பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் கோலாகலமாகத் தொடங்கியது. சென்னை, மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் இந்த ஆண்டுக்கான வருடாந்திர பங்குனிப் பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் கோலாகலமாகத் தொடங்கியது.

இத்திருவிழா ஏப்.1-ம் தேதி வரை நடைபெற உள்ளது. நேற்று காலை 5.45 மணிக்கு கபாலீஸ்வரர், கற்பகாம்பாள், விநாயகர், சிங்காரவேலர், சண்டிகேஸ்வரர் மண்டபத்தில் எழுந்தருளல் நிகழ்ச்சி நடந்தது. அதைத் தொடர்ந்து, காலை 6.20 மணி முதல் 6.50 மணி வரை கொடியேற்றம் நடந்தது.

இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர். பின்னர், விமான சேவை நடந்தது. நேற்று இரவு அம்பாள், மயில் வடிவத்தில் சிவபூஜை காட்சியும், புன்னை, கற்பக, வேங்கை மர வாகனங்கள் புறப்பாடும் நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சிகளில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர். மேலும், நாளை அதிகாரநந்திக் காட்சி நடக்கிறது. அதைத் தொடர்ந்து, கந்தர்வன், கந்தர்வி, மூஷிகம், வெள்ளிவிடை வாகனங்கள் புறப்பாடும், திருஞான சம்பந்தர் திருமுலைப்பால் விழாவும் நடக்கிறது.

மார்ச் 27-ம் தேதி வெள்ளி ரிஷப வாகனக் காட்சியும், பங்குனிப் பெருவிழாவின் பிரதான நிகழ்வான திருத்தேரோட்டம் மார்ச் 29-ம் தேதி காலையும் நடைபெறவுள்ளன.

எட்டாம் நாள் விழாவாக மார்ச் 30-ம் தேதி அறுபத்து மூவர் வீதியுலா நடைபெறும். மார்ச் 31-ம் தேதி ஐந்திருமேனிகள் விழாவும், ஏப். 1-ம் தேதி தீர்த்தவாரியும் நடைபெற உள்ளன.

தொடர்ந்து, இரவு 8 மணிக்கு திருக்கல்யாண உற்சவத்தோடு கொடி இறக்கப்பட்டு பங்குனி விழா நிறைவு பெறுகிறது.

## பழநியில் மார்ச் 26-ல் பங்குனி உத்திர திருவிழா தொடக்கம்

**பழநி, மார்ச் 25:**



பழநி திரு ஆவினன் குடியில் பங்குனி உத்திரத் திருவிழா மார்ச் 26-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

விழாவின் 10 நாட்களும் பல்வேறு வாகனங்களில் சுவாமி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

ஆறாம் நாளான 31-ம் தேதி இரவு 7 மணிக்கு மேல் திருக்கல்யாணமும், இரவு 9 மணிக்கு மேல் சுவாமி மணக் கோலத்தில் வெள்ளித் தேரோட்டமும் நடைபெற உள்ளது. ஏப்.1-ம் தேதி முக்கிய நிகழ்வான தேரோட்டம் நடைபெறுகிறது. ஏப்.4-ம் தேதி காலை 9 மணிக்கு திருவூடல் நிகழ்ச்சியும், இரவு 9 மணிக்கு மேல் கொடியிறக்குதலுடன் விழா நிறைவடைகிறது.

## திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் பங்குனி திருவிழா தொடங்கியது... 28-ம் தேதி கைப்பாரம்

**திருப்பரங்குன்றம், மார்ச் 25:**

முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி திருவிழா 15 நாட்கள் விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் இந்த ஆண்டுக்கான பங்குனி திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதையொட்டி இன்று அதிகாலையில் கொடிப்பட்டம் வீதிகளில் கொண்டு செல்லப்பட்டது. கொடிப்பட்ட ஊர்வலம் கோவிலை அடைந்ததும், கொடிமரத்தில் கட்டப்பட்டு சிறப்பு பூஜை செய்யப்பட்டது.



அதேசமயம், உற்சவர் சன்னதியில் உற்சவர் சுப்பிரமணிய சுவாமி, தெய்வானைக்கு 16 வகை அபிஷேகங்கள் நடைபெற்றன.

பின்னர் சிறப்பு அலங்காரத்தில் தெய்வானை சமேதமாய் சுப்பிரமணிய சுவாமி கம்பத்தடி மண்டபத்தில் எழுந்தருளினார். இவர்களது முன்னிலையில் காலை 8.35 மணியளவில் கொடிக்கம்பத்தில் கொடியேற்றப்பட்டது.

பின்பு கொடிமரத்திற்கு தீபாராதனை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

பங்குனி திருவிழா நாட்களில் தினமும் காலையிலும் இரவிலும் வாகன வீதி உலா நடைபெறுகிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனத்தில் முருகப்பெருமான் தெய்வானையுடன் எழுந்தருளி நகரின் முக்கிய வீதியில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.




வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை
பூமியில் இல்லாமல்
ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

## கண்களுக்கு ஏன் சத்தான உணவு அவசியம்? (2)

**நேற்றைய தொடர்ச்சி..**

பாதாம் மற்றும் பருப்பு வகைகள்

பாதாம் பருப்பில் வைட்டமின் ஈ அதிகளவில் உள்ளது, இது நம் உடலில் உள்ள ஆரோக்கியமான திசுக்களை சேதப்படுத்தும் தேவையற்ற மூலக்கூறுகளிடம் இருந்து கண்களை பாதுகாக்கும் ஒரு கவசமாக செயல்படுகிறது. தினமும் ஒரு குறிப்பிட்ட அளவு பாதாம் பருப்பை சாப்பிட்டு வருவதன் மூலம், பிற்காலத்தில் ஏற்படும் கண்புரை நோயை தவிர்க்க முடியும்.

பாதாமை அப்படியே சாப்பிடலாம் அல்லது தயிர், சாலட் போன்ற உணவுகளுடன் சேர்த்தும் உட்கொள்ளலாம். இதில் அதிக கலோரிகள் இருப்பதால், ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு முறை சிறிய அளவில் சாப்பிடுவது உடலுக்கும் கண்களுக்கும் போதுமான பலனை தரும்.

பால் மற்றும் பால் பொருட்கள்

பால், தயிர் போன்ற பால் பொருட்கள் நம்முடைய பார்வை திறனை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவற்றில் உள்ள வைட்டமின் ஏ கண்களின் மேற்பரப்பை பாதுகாக்கிறது, அதே சமயம் துத்தநாக சத்து கல்லீரலில் இருந்து வைட்டமின் ஏ-வை கண்களுக்கு கொண்டு செல்ல உதவுகிறது. புல்வெளி மேய்ச்சலில் வளரும் பசுக்களின் பால் அதிக நன்மைகளை தரும் என்பதால், அத்தகைய பால் பொருட்களை தேர்ந்தெடுப்பது சிறந்தது. காலை உணவிலோ அல்லது சிற்றுண்டியிலோ தயிர் அல்லது பாலை சேர்த்து கொள்வது கண்களுக்குத் தேவையான தாதுக்களை தடையின்றி வழங்கும்.

கேரட்: பார்வைத் திறனைப் பற்றிப் பேசும்போது கேரட்டைத் தவிர்க்கவே முடியாது, ஏனெனில் இதில் பீட்டா-கரோட்டின் மற்றும் வைட்டமின் ஏ மிக அதிகமாக உள்ளது. இந்தச் சத்துக்கள் கண்களின் மேற்பரப்பைப் பாதுகாப்பதுடன், கண்களில் தொற்று ஏற்படாமல் தடுக்கவும் உதவுகின்றன. கேரட்டை பச்சையாகவோ அல்லது சமைத்தோ சாப்பிடலாம், மேலும் சூப் மற்றும் சாலட்களில் இதை சேர்த்துக்கொள்வது உணவின் சுவையை கூட்டுவதோடு கண்களுக்கும் வலிமை சேர்க்கும். கேரட்டில் உள்ள ஊட்டச்சத்துக்கள் கடுமையான கண் நோய்கள் வராமல் தடுப்பதில் பெரும் பங்காற்றுகின்றன.

ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற சிட்ரஸ் வகை பழங்களில் வைட்டமின் சி அதிகளவில் காணப்படுகிறது, இது கண்களில் உள்ள ரத்த நாளங்களின் ஆரோக்கியத்தை பராமரிக்க மிகவும் அவசியம். வைட்டமின் சி சத்தானது கண்களில் ஏற்படும் வீக்கத்தைக் குறைப்பதோடு, வயது முதிர்வால் ஏற்படும் பார்வை இழப்பைத் தள்ளிப்போடவும் உதவுகிறது. **முடிவுற்றது**

## உங்க ரெஸ்யூமை பார்த்து ரிஜெக்ட் பண்றாங்களா..? கம்பெனிகளை வியக்க வைக்கும் ஏஐ வெப்சைட்டுகள்!

வேலை தேடுவது என்பது பலருக்கும் ஒரு பெரிய போராட்டமாகவே இருக்கிறது. ஒரு கம்பெனியில் நாம் காலடி எடுத்து வைப்பதற்கு முன்பாகவே, நம்மைப் பற்றி அங்குள்ளவர்களுக்குத் தெளிவாகச் சொல்வது நமது பயோடேட்டா எனப்படும் ரெஸ்யூம் மட்டுமே. அது பார்ப்பதற்கு ரொம்பவும் சுமாராக இருந்தால், நம்மிடம் எவ்வளவு திறமை இருந்தாலும் நமக்கு வேலை கிடைப்பதில் தேவையற்ற சிக்கல் ஏற்படும்.

ஆனால், இன்றைய நவீன தொழில்நுட்ப காலத்தில் பல மணி நேரம் உட்கார்ந்து கஷ்டப்பட்டு ரெஸ்யூமைடைப் செய்துகொண்டிருக்க வேண்டிய அவசியம் கொஞ்சமும் இல்லை. ரொம்பவே சுலபமாக, அதே சமயம் பக்கா புரொபஷனலாக நமது வேலைவாய்ப்பு ஆவணத்தை உருவாக்க சில சூப்பரான ஏஐ டூல்கள் இப்போது வந்துவிட்டன. உங்களின் கேரியரை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்ல உதவும் அந்த 5 அட்டகாசமான ஏஐ தளங்களைப் பற்றி பார்க்கலாம் வாங்க.

1. ரெஸ்யூம் ஜீனியஸ் (RESUME GENIUS)!

ரொம்பவே பிரபலமான மற்றும் பலரால் நம்பிப் பயன்படுத்தப்படும் ஒரு அருமையான தளம் இது. நீங்கள் எந்த வேலைக்கு அப்ளை செய்கிறீர்களோ அதற்கு ஏற்றபடி எப்படி ரெஸ்யூம் ரெடி செய்யவேண்டும் என்ற முன்வடிவங்களை அதாவது ரெடிமேட் டெம்ப்ளேட்களை இது கொட்டிக் கொடுக்கிறது. நமது துறைக்குத் தகுந்தபடி கச்சிதமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து, நமது முந்தைய வேலை



அனுபவங்களை மிக நேர்த்தியாக எடுத்துரைக்க இந்தத் தளம் ரொம்பவே உதவியாக இருக்கிறது.

ஜெட்டி (ZETY)!

இந்த ஏஐ டூல் பார்ப்பதற்கு ரொம்பவே மாடர்னான மற்றும் கவரும் வகையிலான டிசைன்களை நமக்கு அள்ளித் தருகிறது. எந்தெந்த இடங்களில் என்னென்ன தகவல்களைப் பதிவு செய்யவேண்டும், எந்த மாதிரியான வார்த்தைகளைப் போட்டால் கம்பெனிகளுக்குப் பிடிக்கும் என்று அதுவே ஒரு சிறந்த வழிகாட்டி போல நமக்குச் சொல்லிக்கொடுக்கும். இதன் மூலம் நமது பயோடேட்டா பார்ப்பதற்கு ரொம்பவே ஈர்ப்புடையதாக மாறிவிடும். இதை நாம் எந்த ஒரு காசும் கொடுக்காமல் தொடக்கத்தில் இலவசமாகவே பயன்படுத்திப் பார்த்துக்கொள்ள முடியும் என்பது இதன் கூடுதல் சிறப்பாகும்.

3. கேன்வா (CANVA)!

பொதுவாக இது ஒரு அருமையான டிசைனிங் தளம் என்பது பலருக்கும் நன்கு தெரியும். ஆனால், இதில் இருக்கும் ரெஸ்யூம் டெம்ப்ளேட்கள் எல்லாமே வேற லெவலில் இருக்கும். நமக்குத் தகுந்தபடி கலர்கள், எழுத்து வடிவங்கள் மற்றும் புகைப்படங்களை மிக எளிதாக இதில் நாமே மாற்றி அமைத்துக்கொள்ளலாம். ரொம்பவும் சிம்பிளான டிசைன் வேண்டும் என்று நினைப்பவர்கள் முதல், சற்று கலர்ஃபுல்லான மற்றும் வித்தியாசமான டிசைன் தேடுபவர்கள் வரை அனைவரின் தேவையையும் இந்த தளம் மிகச் சரியாகப் பூர்த்தி செய்துவிடும்.

4. ஜாப்ஸ்கேன் (JOBSCAN)!

இது மற்ற டூல்களை விட கொஞ்சம் வித்தியாசமான மற்றும் ரொம்பவே நுட்பமான தளம். நாம் எந்த கம்பெனியில் வேலைக்கு அப்ளை செய்கிறோமோ, அந்த கம்பெனியின் வேலைவாய்ப்பு விளம்பரத்தையும் நமது ரெஸ்யூமையும் இது மிகத்துல்லியமாக ஒப்பிட்டுப் பார்க்கும். அவர்கள் எதிர்பார்க்கும் முக்கியமான வார்த்தைகள் நமது ஆவணத்தில் சரியான அளவில் இருக்கிறதா என்பதை ஸ்கேன் செய்து அலசி ஆராய்ந்து சொல்லிவிடும். இது இன்டர்வியூ தேர்வில் நாம் எளிதாக வெற்றிபெற ஒரு பெரிய துருப்புச்சீட்டாக அமையும்.

5. ரெஸி (REZI)!

இன்றைய கார்ப்பரேட் கம்பெனிகள் சாப்ட்வேர் மூலம் ரெஸ்யூம்களை வடிகட்டும் சிஸ்டத்தை வைத்துள்ளன. அந்த தடையை ஈசியாகக் கடந்து செல்ல இந்த டூல் ஒரு மாபெரும் வரப்பிரசாதம் ஆகும். நமது கல்வி மற்றும் இதர அடிப்படைத் தகவல்களை மட்டும் இதில் கொடுத்தால் போதும், பெரிய கம்பெனிகள் எதிர்பார்க்கும் உலகத்தரம் வாய்ந்த ஒரு பக்காவான டாக்குமெண்டை இது ரெடி செய்து கொடுத்துவிடும். இதை மிக சுலபமாக நாம் இலவசமாகவே டவுன்லோட் செய்துகொள்ளலாம்.

காலம் ரொம்பவே வேகமாக மாறிக்கொண்டு வருகிறது. கையில் ஒரு சாதாரண பேப்பரை வைத்துக்கொண்டு ஒவ்வொரு கம்பெனியாக வேலை தேடி அலையும் காலம் எல்லாம் என்றோ முடிந்துவிட்டது. ஏஐ டெக்னாலஜி நமக்குக் கொடுக்கும் இந்த மாதிரியான ஸ்மார்ட்டான வசதிகளை நாம் சரியாகப் பயன்படுத்திக்கொண்டால், நமக்கான கனவு வேலையை மிக விரைவாகவே பிடித்துவிடலாம்.

# "எல்லோரையும் சிரிக்க வைப்பான்"

சர்க்கஸின் நடுவில் நெருப்புக் வளையம். அதன் உள்ளே மூன்று சிங்கங்கள். மூன்றின் கண்களிலும் பசி, உடலில் அசுர பலம். அவற்றின் முன்னால் நின்று கைத்தடி சுழற்றும் மனிதன்தான் ரிங் மாஸ்டர் ரகுராம்.

ஒரு கணம் தவறினால், அவனுடைய உயிர் அவற்றின் பல்லில்.

ஆனால் என்றும் திடமாயிருக்கும் அவனுடைய மனம் இன்று நடுங்கியது.

அவனுடைய அம்மாவுக்கு இதய ஆபரேஷன்.

"'இன்றே செய்யாவிட்டால் ஆபத்து" என்ற டாக்டரின் வார்த்தை சிங்கத்தின் கர்ஜனைக்கு மேலாக அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

சர்க்கஸ் முடிந்ததும் ரகுராம் கைத்தடியை கீழே வைத்தான்.

முதல் முறையாக தைரியம் இல்லாமல் கையை நீட்டினான்.

மேனேஜரிடம் கேட்டான். "அம்மாவின் உயிர் உங்க கையில்... கொஞ்சம் கடனாகக் கொடுத்து உதவுங்கள் சார்"

"இல்ல ரகு... இப்போ ரொம்ப கஷ்டம்" என்ற பதில் வந்தது.

வெட்கத்தை விட்டு சக ஊழியர்களிடம் கேட்டான். யானை நடத்துனர் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

அக்ரோபாட் சிரித்து "டிரை பண்றேன்... ஆனா என்னை முழுசா நம்ப வேண்டாம்" என்றான்.

டிக்கெட் விற்பவன் காது கேளாதவன் போல்



கணக்குப் புத்தகத்துக்குள் முகத்தை புதைத்துக் கொண்டான். ஷோ முடிந்த பின் மேக்கப் கலைத்து விட்டு, ஒரு மூலையில் உட்கார்ந்து ரகுராம் அழுதான்.

அப்போது அவன் முன் வந்து நின்றான் குள்ளக் கோமாளி.

எப்போதும் சிரிப்பு. மூக்கில் சிவப்பு குண்டு. கையில் சின்னக் குடை.

"என்ன சார்... சிங்கத்துக்குக் கூட பயப்படாத ஆள் நீங்க இப்ப அழறீங்களே...ஏன்?.. என்னாச்சு?" கேட்டான்.

ரகுராம் பேசவில்லை. ஆனால் தழுதழுத்தான்.

சில நிமிட அமைதிக்குப் பின்,பிறகு கோமாளி தன் கையில் இருந்த சிறிய பேக்கை நீட்டினான்.

"என்ன கோமாளி இதுல?." ரகுராம் கேட்க,

"உன் அம்மாவின் ஆபரேஷனுக்காக பணம்"

"உன் கிட்ட ... எப்படி?" குரல் நடுங்கக் கேட்டான் ரகுராம்.

கோமாளி மெதுவாகச் சொன்னான் "ரகு... எல்லோரையும் சிரிக்க வைக்கும் கோமாளி உன்னை அழ வைப்பேனா?"

ஒரு மேனேஜரிடம் இல்லாத, ஒரு அக்ரோபாட்டிடம் இல்லாத, ஒரு டிக்கெட் விற்பவனிடம் இல்லாத மனிதத்தன்மை ஒரு குள்ளக் கோமாளியிடம் தாராளமாய் இருந்தது.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# நாணயம்

"ஏங்க உங்க நண்பர் சத்திய மூர்த்தி வந்திருக்கார்"என்று முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கக் கூறிக் கொண்டே வந்தாள் அர்ச்சனா.

"இதோ வந்துடறேன். அவனை உட்காரச் சொல்லு" என்ற கணவன் ரமேஷை "ஆமா உட்கார சொல்றேன். அவர் வழக்கம் போல ஆயிரம் ரெண்டாயிரம்னு கேட்பார். கொடுத்துட்டு வாங்க"என்று கோபம் கொப்பளிக்கப் பேசினாள் அர்ச்சனா. "மெதுவா பேசுடி அவன் காதில் விழுந்திட போகுது " என்று அதட்டினான் ரமேஷ்.

சத்தியமூர்த்தியும் ரமேஷும் ஆரம்பத்தில் இருந்தே ஒன்றாகப் படித்தவர்கள். பக்கத்துப் பக்கத்து வீடு வேறு.ரமேஷ் நன்றாகப் படித்து வேலைக்கும் போனான். மனைவியின் திடீர் மரணம் அவனை உலுக்கி எடுத்து விட்டது. வேலையில் கவனம் செலுத்தாமல் அவள் நினைவாகவே இருந்ததால் இருந்த வேலையும் பறிபோயிற்று. ஒரு பெண் குழந்தையையும் வைத்துக்கொண்டு படாத பாடுபட்டான்.



"இப்போ நான் சொல்றதெல்லாம் உங்களுக்கு வேடிக்கையாகத்தான் தெரியும் .அவர் வந்து கேட்கும் போதெல்லாம் பணத்தைக் கொடுத்து அவரை சோம்பேறி ஆக்கிடறீங்க.எதையும் பார்த்து செய்யுங்க "என்றாள் அர்ச்சனா .

"படிக்கிற காலத்தில் அவன் எனக்கு எவ்வளவோ உதவி செஞ்சிருக்கான். அப்படிப்பட்டவனுக்கு இந்த கஷ்ட நேரத்தில் உதவலேன்னா நான் எல்லாம் என்ன மனுஷன்?பணத்தை எப்ப வேணும்னாலும் சம்பாதிக்கலாம். ஒரு நல்ல நட்பை இழந்தால் இழந்தது தான் "என்ற ரமேஷை கோபமாகப் பார்த்தாள் அர்ச்சனா.

ஹாலுக்கு வந்த அவர்கள் இருவரையும் பார்த்த சத்யமூர்த்தி "ரமேஷ் !உங்க ரெண்டு பேரையும் ரொம்ப சிரமப்படுத்தறேன். மன்னிச்சுக்கோங்க "என்றான்.

'பீடிகை எல்லாம் பலமா இருக்கு எவ்வளவு கேட்ட போகிறாரோ 'என்று மனதில் நினைத்தவாறு இருந்தாள் அர்ச்சனா.

"ரமேஷ்! நான் பணம் கேட்கும் போதெல்லாம் கணக்கே பார்க்காம எவ்வளவோ உதவி பண்ணியிருக்கே. உன்கிட்ட இருந்து வாங்கிட்டுப் போன பணத்தில் சிக்கனமா செலவு பண்ணி இந்தப் பணத்தை சேமித்து இருக்கேன். இதை வாங்கிக்கோ. அடுத்த வாரத்தில் இருந்து ஒரு இடத்துல வேலைக்கு வரச் சொல்லி இருக்காங்க. சம்பளம் வர ஆரம்பிச்சதும் கொஞ்சம் கொஞ்சமா திருப்பி கொடுத்துடறேன்"என்று சொன்ன சத்தியமூர்த்தியை பெருமையுடன் பார்த்தான் ரமேஷ். வெட்கித் தலை குனிந்தாள் அர்ச்சனா.



-மு.மதிவாணன்
குபேந்திரன் நகர்
அரூர்-636903



# ஊர்மிளையின் ஊமைமனம் 5



▪கே.பானுமதி நாச்சியார்
சிவகிரி

## சீதையின் பரிசு..

இந்த வாழ்க்கையைப் பெற என்னவெல்லாம் துறந்தோம் என்றது ஊர்மிளையின் மனது. இருந்த போதும் காலம் யாரையும் ஒரே மாதிரியாக வைத்துக் கொள்வதில்லை. இன்பம் என்று எதை விரும்புகிறோமோ அது கிடைக்காமல் துன்புறுவதும், கிடைத்த பின் அதனை விட முன்பிருந்தது சொர்க்கம் என்று சொல்ல வைப்பதும் காலம் தானே!

காலத்தின் அருமையை எண்ணிப் பார்க்க பார்க்க ஊர்மிளைக்கு, இயற்கையின் படைப்பில் காலம் மிகப்பெரிய பொக்கிஷமாகத் தெரிந்தது. காரணம் இதுதான், காலத்தினுள் அனைத்து உலக உயிர்களும் அடங்கும். இறந்த காலம், கடந்த காலம் என்றும் நிகழ்காலம் மட்டும் நிகழ்காலம் என்றும் எதிர்காலத்தை வருங்காலம் என்கிறோம். அதனினும் நல்ல, கெட்ட, துயர், பிரிவு, இன்பம் ஊடல், கூடல், பருவம் என எதிலும் தன்னைப் பொருத்திக் கொள்வதால், காலத்தின் சக்கரத்தைச் சுழல விட்டு, பிரபஞ்சம் நிம்மதியாகத் தன் வேலையைப் பார்க்கிறது. நம் உயிர்களின் இறப்பு காலம் கூட, இதுவே நிர்ணயிப்பதால் அதனைச் செய்பவனும் காலனென அழைக்கப் படுகிறானோ? எத்தனை விதமான எண்ணங்கள்!

இதோ! இவ்வாறு வீற்றிருக்கும் சீதையினை நாம் அன்று நம் நினைவுகளே வரவில்லையே என்றோம். ஆனால் இப்பொழுது அவள் இடத்தில் ஏற்பட்டிருக்கும் அந்த அன்பிற்கு எது காரணம்? காலம் தான் பொறுப்பு ஏற்கிறதே தவிர சீதையின் மனம் அல்லது குணம் அல்ல. இதனைத் தெளிவு பெறுவதற்கு நாமும்தான் 14 வருடங்களைக் கடந்து இருக்கிறோம்.

சீதை அழைந்ததாக ஊர்மிளையை அழைத்து வர இரு தாதியர்கள் வந்தனர்.

சீதை ஊர்மிளைக்காகக் காத்திருந்தாள். ஒவ்வொரு நாழிகையும் ஒரு யுகமாகக் கழிந்தன.

இதோ தாதியர் சூழ ஊர்மிளை வந்து கொண்டிருந்தாள். அவளை அருகில் பார்த்த மாத்திரத்தில் சீதை "வா வா!" என அவசரப்படுத்தினாள். "இலக்குவனுடன் உன் வாழ்க்கை எப்படி?" என்றாள்.

"ஆஹா! இதுதான் சீதை!" என்று எண்ணியவள் "சீத்தாக்கா ஏன் திடீரென்று இந்தக் கேள்வி? " என்கிறாள்.

"இல்லை! நான் இந் நாட்டு அரசி!"

"ஆமாம்! அதற்காக?"

"இந்நாட்டில் உள்ள எல்லா பிரஜைகளும் சந்தோஷமாக இருக்க வேண்டும்."

"ஓ! அப்படியானால் நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன்!"

"இல்லை ஊர்மிளா! உன் தமக்கையாகத் தவற விட்ட உன் உள்ளத்தை, அரசியாகக் கடைசியாகக் கண்டு கொண்டு விட்டேன். உண்மை சொல்! என்ன நடந்தது அன்று இங்கு?" என்றாள்.

சீதை அரசியாகத் தன்னைக் கண்டு கொண்டு விட்டாள். "உண்மையை மறைக்காமல் சொல்!" என்றவுடன் அன்றைய நிகழ்வை விவரித்தாள்.

"ஊர்மிளா! இலக்குவனன் எப்பொழுதுமே தனது தமையனுக்காகவே வாழ்வை வாழ்கின்றவன்! என்று தந்தையும் அன்றே சொன்னார் அல்லவா உன்னிடத்தில்! ஆனாலும் நீ ஏன் அவ்வாறு நடந்து கொண்டாய். நீ சாதாரணமாய் இருந்திருந்தாலும் கூட, இலக்குவனன் இவ்வாறு தான் இருந்திருப்பான்!" என்றாள்.

"ஆமாம் அதனைத் தெரிந்து கொள்வதற்கு எனக்கும் 14 ஆண்டுகள் தேவைப் பட்டிருந்தது அக்கா!" என்று சொன்னவள் கலகலவென்று சிரித்தாள்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"ஏதோ ஒரு காட்சி என்கண் முன் வந்து போகிறது! அது சரி வேறு ஏதாவது விஷயம் உண்டா?" என்றாள்.

"ஆம்! உனக்கு ஒரு பரிசு கொடுக்கலாம் என்று வரவழைத்தேன்!"



"அப்படியா! என்ன பரிசு அது?"அவளிடம் தன் கால் கொலுசுகளைக் கழற்றி கொடுத்தவள், பின்னும் அதனை அவளுக்கு அணிவிக்க முற்பட, மகிழ்வுடன் தன் கால்களை நீட்டினாள் ஊர்மிளை.

பின்னும் முத்துமாலை ஒன்றையும் அணிவித்தாள்.

"சரி நான் வரட்டுமா?" என்றாள் ஊர்மிளை.

" ஆம்! இனிது உன் மனம் போல் நடப்பான் லக்குவனன் கவலைப்படாதே!" என்று சொல்லி "ராம ராஜ்ஜியத்தில் துன்பப்படுபவர்கள் யாரும் இருக்கக்கூடாது ஊர்மிளை! உன்னையும் சேர்த்துதான் சொல்கிறேன்!" என்றாள்.

"சரி அக்கா! உன்னிடம் பேச வேண்டியது நிறைய இருக்கிறது நாளை வருகிறேன்!" என்றவள் தன் அரண்மனை நோக்கி நடந்தாள்.

" ஐயோ! அன்பர் கண் விழித்திருப்பாரோ இல்லை உறங்கிக் கொண்டுதான் இருப்பாரோ என நினைவு சஞ்சலிக்க ஒரு பெருமூச்சு அவளை அறியாமல் வந்தது.

ஆனால் லக்குவனன் விழிப்புற்று தன் ஆடை திருத்தி அழகாய்ச் சாரளத்தின் வழியே இயற்கை அழகை ரசித்து நின்றான். ஊர்மிளையின் வருகை அவனைத் திரும்பி பார்க்க வைத்தது.

அது என்ன ஜல் ஜல் ஜல் ஒலி.

இதுநாள் வரை ஊர்மிளா கொலுசு அணிந்ததில்லை. "இன்று என்ன புதிதாய்" என்று நினைத்தவன் ஊர்மிளையின் காலில் கிடந்த கொலுசுவை நோக்கினான். உடனே அவளது பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்தான்.

பதறிப் போன ஊர்மிளை "அன்பரே! என்ன காரியம் செய்கிறீர்கள்? இதென்ன நிகழ்வு! ஏனென்று புரியவில்லையே! சீக்கிரமாக எழுந்து, எழுந்து விடுங்கள்!" என்று பதறினாள்.

ஆனால் வார்த்தைகள் எதுவும் வரவில்லை. மெதுவாக "அன்பரே!" என்றாள்.

அவளது வார்த்தைகளால் தெளிவு பெற்ற லக்குவனன் "இது என்ன விளையாட்டு! சீதாப்பிராட்டி அன்னையின் கொலுசல்லவா இது! இதனை நீ ஏன்அணிந்திருக்கிறாய்!" என்றான்.

இதுவரை தன் முகம் பார்த்து பேசாத லக்குவனன் இவ்வளவு பேசியதைக் கேட்டு வியந்து நின்றாள் ஊர்மிளை.

இதனால் உள்ளம் பூரித்து உடல் பருத்து விட்டதாக நினைக்கிறாள்.

திரும்பவும் இலக்குவன் "என் கேள்விக்கு இன்னும் பதில் வரவில்லை!" என்றான்.

"ஆமாம் அன்பரே! இதனை இப்பொழுதுதான் சீதா அக்கா எனக்குப் பரிசாகக் கொடுத்து அணிவித்து விட்டார்கள்!"

ஊர்மிளா என்று தன்னை அழைக்கும் சொல்லைத் தவறவிட்டான் என்பதைக் காட்டுவதற்காக "அன்பரே!" என்று அழுத்தம் கொடுத்து ஊர்மிளை பேசினாள்.

"ஏன் நீ நம்மைப் பற்றி அவரிடத்தில் சொன்னாயோ?"

"தன் நினைவு மறந்தது சரி! தன் பெயரைக் கூட மறந்து விட்டாரோ அன்பர்!" இதனை நினைத்து சிறு புன்னகை செய்து கொண்டு "அன்பரே! உறக்கத்தில் நீங்கள் பேசிய போது கிளியைப் பற்றி பேசினீர்கள் என்று சம்பந்தம் சம்பந்தமில்லாமல் பேசினாள்!" ஊர்மிளை.

கிளியின் நினைவு வந்தவுடன் இலக்குவனுக்கு ஊர்மிளையிடம் தான் காதல் பொங்க, பேசிய பேச்சுகள் நினைவு வர, வெட்கப்பட்டான்.

இதனையே சாதகமாக வைத்துக் கொண்டு ஊர்மிளையும் "அன்பரே! அக்கிளிக்குப் பெயர் வைக்கவில்லை!"..என இழுத்தாள்.

ஊர்மிளையின் முகத்தை ஏறிட்டு பார்த்த இலக்குவன், அன்று படகில் சென்று வந்த பின் நடந்த நிகழ்வுகள், மறுநாள் கிளியிடம் சொல்வது போல் ஊர்மிளையின் அழகை வர்ணித்தது. அதைத் தொடர்ந்து நடந்த சம்பாஷனைகள் இவையெல்லாம் ஞாபகம் வர, ஊர்மிளையின் அருகில் வந்தான்.

"அன்பரே! அக்கிளி பேசாமல் இருந்தது. அதனால் ஏன் பேச மாட்டேன் என்கிறது என்று அருகில் வந்தேன். அப்போது என்று நிறுத்தி, அவனை, அவனுடைய நினைவுகளைத் தட்டி எழுப்பினாள்.

புதிதாய் மணந்து கொண்ட ஊர்மிளாவின்பால் அதிபெரும் காதல் பொங்க அன்னவன் சொன்ன வார்த்தைகள் மனதில் ஒலிக்க மனத்தொடு பொருத்தி இன்பம் கண்டு அன்றில் பறவை போல் வாழ நினைத்ததையும் நினைவு கூறினாள்.

ஆம். அந்த நாளின் நினைவு இலக்குவனுக்கும் வந்தது. அன்று இருவரும் உறங்கிடும் முன் இலக்குவன் ஒரு பந்தயம் வைத்தான்.

"நாளை முன்னர் படுக்கையை விட்டு எழுபவர் வெற்றி பெற்றவர்!" என்றான்.

"இந்தப் பந்தயத்தில் யார் ஜெயிப்பார்கள் பார்க்கலாமா?" என்று உறங்கிப் போனான்.

ஊர்மிளா முன்னம் எழுந்தும் சதிபதி சமமே என்று (இருவரும் ஒன்றாய் எழுந்து) சான்றிதழ் வழங்கச் செய்த பாங்கினை இலக்குவன் நினைத்துச் சிரித்தான்.

தத்தை ஏன் பேசவில்லை என்பதற்குத் தான் கொடுத்த விளக்கம் நெஞ்சில் நடனமாட "ஆணும் காதல் கொள்ளும் அழகா! அழகார் கவிதை கற்றது எங்கே?" என்று கேட்ட ஊர்மிளையின் சொற்கள் திரும்ப திரும்பக் கேட்க, "வேறங்கு கற்க வேண்டும்? வாணி நீ இருப்ப!" என்ற நினைவுகள் எழுப்ப அதற்கு ஊர்மிளை சொன்ன பதிலோ

"இது என்ன கேலியோ அல்லது எல்லை இல்லாத புகழுரையோ!" என்று

உடனே கலகலவென்று சிரித்த. இலக்குவன் "மெய்யுரையே! மெய்யுரையே!" என்றனன்.

இப்படியாக இவர்களின் நினைவுகள் பின்னோக்கி செல்லச் செல்ல இருவரும் மெய்யோடு நெருங்கினர்.

ஊர்மிளையிடம் லக்குவனன் "ஊர்மிளை! இக்கொலுசுகளைக் கழற்றி யான் கொடுக்கும் கொலுசுகளை அணிந்து கொள்!" என்றான்.

"ஏன் அன்பரே!" என்றாள் புருவம் உயர்த்தி.

"ஊர்மிளை! அண்ணியாரின் பாதத்தைப் பார்த்தே வனத்தில் காலம் கழித்தவன். அதனால் உடனே வணங்க தோன்றி விடும்!" என்றான்.

"ஐயோ!" என்றவள் அன்பரின் மனதின் கருத்துக்குச் செவி சாய்த்து, அன்பரின் கொலுசை அணிந்து மகிழ்ந்தாள்.

(இந்த கற்பனையின் ஊற்று தி வெங்கடகிருஷ்ண ஐயங்கார் எழுதிய ராகவ காவியம் என்று ஹிந்தி விசாரத்தில் படித்தது) இருவரும் இணைந்து இருப்பார்கள் என்ற நினைவு சீதையின் மனதை நிறைத்தது. அப்பப்பா வாழ்க்கையின் ஓட்டத்தில் தவறவிட்டவை தான் எத்தனை! எத்தனை! அதனைச் சரி செய்யாவிட்டால் நரக வாழ்க்கையாய் ஆகிவிடுகிறது. இனி ஊர்மிளையிடம் வனத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் பகிர்ந்து கொண்டு அவளை நாமும் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாள் சீதை.

"உன் சந்தோஷமே நிரந்தரமா சீதா?" என்ற காலத்தின் கேள்வி சீதையின் செவியில் கேட்காமலேயே ஒலித்து காற்றில் பரவியது.

இதனை ஊர்மிளா கேட்டாள் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதா? ஆம்! ஊர்மிளைக்குத் தான் காலம் சரியான புரிதலைச் சொல்லும் தானே!

"பார்ப்போம்! காலத்தின் புரிதல் என்னவாக இருக்கும் என்று!"

- தொடரும்

# மாம்பழத்துறை புஷ்கலாதேவி திருக்கோவில்...

தர்ம சாஸ்தாவான ஐயப்பனுடன் ஐக்கியமான புஷ்கலாதேவி கேரள மாநிலம் ஆரியங்காவு அருகிலுள்ள மாம்பழத்துறையில் குடிகொண்டிருக்கிறாள். இவளை வழிபட்டால் விரைவில் திருமணம் கைகூடும்.

புஷ்கலாதேவியை திருமணம் புரிந்த தர்மசாஸ்தா ஆரியன்காவு வனப்பகுதியில் தங்கியிருந்தார். ஒரு நாள் இரவு தங்கியிருந்த இடத்திற்கு வெளியே பயமுறுத்தும் விதத்தில் சப்தம் கேட்டது. அச்சம் அடைந்த புஷ்கலாதேவியிடம்,"பயப்படாதே.

வனப்பகுதியில் வேட்டைக்காக புலி செல்கிறது" என்றார் சாஸ்தா. "அது எப்படி இங்கிருந்தே உங்களால் புலி செல்வதை தெரிந்து கொண்டீர்கள்" எனக் கேட்டாள். தான் ஒரு தெய்வப்பிறவி என்பதால் உணர்ந்ததாக தெரிவித்தார் சாஸ்தா. அப்போது அவரது மனதிற்குள் தன் அவதார நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

அதற்காக தந்திரியை அழைத்து, "நான் புஷ்கலாதேவியின் பக்தியை ஏற்று முக்தியளிக்க முடிவு செய்து விட்டேன். அதனால் அடர்ந்த வனப்பகுதியில் ஓரிடத்தை தேர்வு செய்து அவளை நிரந்தரமாக தங்க ஏற்பாடு செய்யும்படி கட்டளையிட்டார். மறுநாள் தந்திரி அடர்ந்த வனப்பகுதிக்குள் புஷ்கலாதேவியை அழைத்து சென்றார். செல்லும் வழியெங்கும் சாஸ்தாவின் அவதார நோக்கத்தையும், அவரது





பெருமைகளை விளக்கினார். தந்திரி முன் செல்ல அவரை பின்தொடர்ந்து மனம் மயங்கிய நிலையில் புஷ்கலாதேவியும் நடந்தார். மாம்பழத்துறையை அடைந்ததும் அங்குள்ள மண்டபத்திற்குள் புஷ்கலாதேவி உள்ளே சென்றதும் வெளியே கதவைத் தாழிட்டார். அதிர்ச்சியில் அவள் கூக்குரலிட்டாள். சிறிது நேரம் கழித்து கதவைத் திறந்த போது காளியின் வடிவில் உக்கிர கோலத்தில் புஷ்கலாதேவி இருப்பதைக் கண்டார்.

அவளிடம், "தெய்வப்பிறவியான சாஸ்தாவின் காவல் பணிக்கு உன்னால் தடை, தாமதம் ஏற்படக் கூடாது என்பதால் இங்கு அழைத்து வந்தேன், அவர் மனப்பூர்வமாக உன்னை ஏற்றுக் கொண்டதால், சூரியன், சந்திரன் உள்ள வரை ஆரியங்காவில் சாஸ்தாவுடன் திருமண வைபவம் நடக்கும்" என்று வாக்களித்தார். ஒவ்வொரு ஆண்டும் புஷ்கலா தேவிக்கு சவுராஷ்டிரா சமூகத்தினர் மரபுப்படி விழா நடக்கிறது.

கருவறையில் பகவதி அம்மனாக புஷ்கலாதேவி இருக்கிறாள். விநாயகர், நாகர், கருப்பசாமி, சிவபெருமான், இசக்கி அம்மன் சன்னதிகள் உள்ளன. கோயில் எதிரில் ஆயிரம் ஆண்டுகள் பழமையான மாமரம் உள்ளது. அருகில் கல்லடை ஆறு ஓடுகிறது. தர்மசாஸ்தாவின் படை வீடுகளான ஆரியங்காவு, அச்சன்கோயில், குளத்துப்புழை, சபரிமலை கோயில்கள் ஒரே நேர்கோட்டில் உள்ளன. இவற்றின் நடுவில் மாம்பழத்துறை உள்ளது.

ஆரியங்காவில் ஆண்டு தோறும் மார்கழியில் சவுராஷ்டிரா சமூகத்தினர், திருவிதாங்கூர் தேவசம் போர்டு சார்பில் சாஸ்தா புஷ்கலாதேவி திருமண நிகழ்ச்சி நடக்கிறது. இதற்காக மாம்பழத்துறை கோயிலில் கார்த்திகை1ல் அணையாதீபம் ஏற்றுவர். அத்தீபம் ஆரியங்காவுக்கு ஊர்வலமாக எடுத்து வரப்படும். இத்தீபம் புஷ்கலா தேவியாக கருதப்படுகிறது. ஆரியங்காவில் ஏற்றப்படும் அணையாதீபத்தில் அதனை சேர்ப்பர். அதன்பின் பாண்டியன் முடிப்பு என்னும் நிச்சயதார்த்தம், திருமண வைபவம் நடைபெறும்.

12 ஆண்டுக்கு ஒருமுறை இங்கு தேவ பிரசன்னம் பார்க்கப்படும். விழாவில் தேவிக்கு கலசாபிஷேகம், பொங்கலிட்டு வழிபடுவர். இவரை தரிசித்தால் நல்ல மணவாழ்வு கிடைக்கும்.

நேரம்: காலை 6:00 9:00 மணி,
மாலை 5:00
7:00 மணி

BALACHANDAR

தினம் ஒரு தலைவர்கள்

# சர்தார்சிங்ஜி ராவாஜி ராணா வரலாறு

சர்தார்சிங்ஜி ராணா, ஏப்ரல் 10, 1870 அன்று (இந்து நாட்காட்டியின்படி சைத்ரா சூட் 9) கத்தியவாரில் உள்ள காந்தரியா கிராமத்தில் இரண்டாம் ராவாஜி மற்றும் ஃபுலாஜிபா ஆகியோரின் ராஜபுத்திர குடும்பத்தில் பிறந்தார்.அவர் துலி பள்ளியில் பயின்றார், பின்னர் ராஜ்கோட்டில் உள்ள ஆல்ஃபிரட் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார், அங்கு அவர் மோகன்தாஸ் காந்தியின் வகுப்புத் தோழராக இருந்தார். 1891 இல் தனது மெட்ரிகுலேஷன் முடித்த பிறகு, அவர் எல்பின்ஸ்டன் கல்லூரியில் பயின்றார், 1898 இல் பம்பாய் பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டம் பெற்றார். அவர் புனேவில் உள்ள பெர்குசன் கல்லூரியிலும் பயின்றார், அங்கு அவர் லோக்மான்ய திலகர் மற்றும் சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோரைத் தொடர்பு கொண்டார். 1895 ஆம் ஆண்டு புனேவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் தன்னார்வத் தொண்டு செய்ததால், அவர் ஹோம் ரூல் இயக்கத்தில் சேரத் தூண்டப்பட்டார். படிப்பை முடித்த பிறகு, அவர் வழக்கறிஞர் பட்டம் படிக்க லண்டனுக்குச் சென்றார். அங்கு அவருக்கு ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா மற்றும் பிகாஜி காமா ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டது. லண்டனில் இந்தியா ஹவுஸ் நிறுவுவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். தனது ஆரம்ப காலத்தில் பிங்காடா கிராமத்தைச் சேர்ந்த சோன்பாவை மணந்தார், அவருக்கு ரஞ்சித்சிங் மற்றும் நட்வர்சிங் என்ற இரண்டு மகன்கள் இருந்தனர். 1899 ஆம் ஆண்டில், வழக்கறிஞர் பட்டம் பெற்ற பிறகு ராணா பாரிஸுக்குச் சென்றார். உலக வர்த்தக கண்காட்சிக்காக பாரிஸில் இருந்த காம்பேயைச் சேர்ந்த நகை வியாபாரி ஜீவன்சந்த் உத்தம்சந்தின் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். அவர் ஒரு நிபுணராகி, முத்துக்களை வர்த்தகம் செய்யும் நகை வணிகத்தைத் தொடங்கினார். அவர் பாரிஸில் உள்ள 56, ரூ லா ஃபாயெட் தெருவில் வசித்து வந்தார். இந்த நேரத்தில்தான் ராணா இந்திய தேசியவாத அரசியல்வாதிகளுடன் பழகத் தொடங்கினார், அவர்களில் பாரிஸுக்குச் சென்று ராணாவுடன் தங்கியதாக அறியப்படும் லாலா லஜபதி ராய் உட்பட. 1905 ஆம் ஆண்டில், ராணா இந்திய ஹோம் ரூல் சொசைட்டியின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவரானார், அதில் அவர் துணைத் தலைவராக இருந்தார்.

முன்செர்ஷா புர்ஜோர்ஜி கோத்ரேஜ் மற்றும் பிகாஜி காமாவுடன் சேர்ந்து, ஐரோப்பிய கண்டத்தில் இந்திய ஹோம் ரூல் சொசைட்டியின் விரிவாக்கமாக அதே ஆண்டு பாரிஸ் இந்தியன் சொசைட்டியை நிறுவினார். ஷ்யாம்ஜி கிருஷ்ண வர்மாவும் செய்தது போல், ராணா இந்திய மாணவர்களுக்கு மூன்று உதவித்தொகைகளை அறிவித்தார், ஒவ்வொன்றும் ரூ.2,000 [முழு மேற்கோள் தேவை] தி இந்தியன் சோஷியாலஜிஸ்ட் இதழில் டிசம்பர் 1905 இதழில். அவர் பல உதவித்தொகைகள் மற்றும் பயண உதவித்தொகைகளை அறிவித்திருந்தார். அவர் இந்திய சுதந்திர இயக்கத்திற்கு பல வழிகளில் உதவினார். 1909 ஆம் ஆண்டு கர்சன் வில்லியைக் கொல்ல மதன் லால் திங்ரா தனது துப்பாக்கியைப் பயன்படுத்தினார். விநாயக் தாமோதர் சாவர்க்கரின் தடைசெய்யப்பட்ட புத்தகமான "இந்திய சுதந்திரப் போர்" வெளியிட அவர் உதவினார். 1910 ஆம் ஆண்டு ஹேக்கில் உள்ள நிரந்தர நடுவர் நீதிமன்றத்தில் அவர் மார்சேயில் அடைக்கலம் கொடுத்த வழக்கிலும் அவருக்கு உதவினார். லாலா லஜபதி ராய் ஐந்து ஆண்டுகள் தனது வீட்டில் தங்கியிருந்தபோது "அன்ஹேபி இந்தியா" என்ற புத்தகத்தை எழுதினார். மாஸ்கோவில் குண்டுகள் தயாரிப்பது குறித்து ஆய்வு செய்ய சேனாபதி பாபட் பயணிக்க அவர் உதவினார். ஜெர்மன் வானொலியில் பார்வையாளர்களாக உரையாற்ற சுபாஷ் சந்திர போஸுக்கு உதவினார். பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கும் அவர் உதவினார்.

மேடம் காமா மற்றும் எஸ். ஆர். ராணா, 1907 காமாவுடன் சேர்ந்து அவர் பிரெஞ்சு மற்றும் ரஷ்ய சோசலிச இயக்கங்களுடன் நெருங்கிய தொடர்புகளை வளர்த்துக் கொண்டார் மேலும் அவருடன் ஆகஸ்ட் 18, 1907 அன்று ஸ்டட்கார்ட்டில் நடந்த இரண்டாவது சோசலிச மாநாட்டில் கலந்து கொண்டார், அங்கு காமாவால் "இந்திய சுதந்திரக் கொடி" வழங்கப்பட்டது. அப்போதிருந்து, அவர் பந்தே மாதரம் (பாரிஸைச் சேர்ந்த காமாவால் வெளியிடப்பட்டது) மற்றும் தி தல்வர் (பெர்லினிலிருந்து) ஆகியவற்றிற்கு தொடர்ந்து பங்களிப்பாளராக இருந்தார், பின்னர் அவை இந்தியாவிற்கு கடத்தப்பட்டன.



முதலாம் உலகப் போருக்கு முந்தைய ஆண்டுகள் ராணாவின் தனிப்பட்ட மற்றும் அரசியல் வாழ்க்கைக்கு திருப்புமுனையாக அமைந்தன. பாரிஸில், அவர் ரெசி என்ற ஜெர்மன் பெண்ணுடன் வாழ்ந்ததாக அறியப்படுகிறது, அவர் - அவர் அவரை மணக்கவில்லை என்றாலும் - திருமதி ராணா என்று அறியப்பட்டார். அவரது முதல் மனைவி சொன்னபோது அவர்கள் 1904 இல் திருமணம் செய்து கொண்டனர். அவரது இரண்டு மகன்களும் அவருடன் தங்க பாரிஸுக்கு குடிபெயர்ந்தனர். இறக்கும் நிலையில் இருந்த அவரது மகன் ரஞ்சித்சிங் மற்றும் அவரது ஜெர்மன் மனைவியுடன், அவர் 1911 இல் பிரெஞ்சு அரசாங்கத்தால் மார்டினிக்கிற்கு நாடுகடத்தப்பட்டார். பிரெஞ்சு சுரேட்டின் அழுத்தத்தின் கீழ் பாரிஸ் இந்திய சங்கத்தின் நடவடிக்கைகள் குறைக்கப்பட்டன, இறுதியாக 1914 இல் இடைநீக்கம் செய்யப்பட்டன. அவரது மகன் ரஞ்சித்சிங் 1914 இல் இறந்தார். புற்றுநோய் அறுவை சிகிச்சைக்காக பிரான்சுக்குள் நுழைய அவரது மனைவிக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. 1920 ஆம் ஆண்டு அவர் பிரான்சுக்குத் திரும்பினார். அவரது ஜெர்மன் மனைவி 1931 இல் புற்றுநோயால் இறந்தார். 1947 ஆம் ஆண்டு ஹரித்வாரில் தனது மகன் ரஞ்சித்சிங்கின் எலும்பு மூழ்கும் சடங்குகளைச் செய்ய அவர் இந்தியாவுக்கு வருகை தந்தார். அவர் 23 ஏப்ரல் 1948 அன்று திரும்பினார். அவர் தனது தொழிலை முடித்துக்கொண்டு 1955 இல் உடல்நலக் குறைவு ஏற்பட்டபோது இந்தியாவுக்குத் திரும்பினார். பின்னர் அவருக்கு பக்கவாதமும் ஏற்பட்டது. அவர் மே 25, 1957 அன்று வேராவலின் சர்க்யூட் ஹவுஸில் (தற்போது குஜராத்தில் உள்ளது) இறந்தார்.

மரபு மற்றும் அங்கீகாரம் 1951 ஆம் ஆண்டு பிரெஞ்சு அரசாங்கத்தால் அவருக்கு செவாலியர் விருது வழங்கப்பட்டது. அவரது உருவப்படங்கள் குஜராத் சட்டமன்றத்திலும், வேராவலில் உள்ள அவரது இறந்த இடத்திலும் வைக்கப்பட்டுள்ளன.

அவரது கொள்ளுப் பேரன் ராஜேந்திரசிங் ராணா 1996 முதல் 2014 வரை பாவ்நகரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்.

# 29 திரைப்படத்தின் 2-வது சிங்கிள்




2017-ஆம் ஆண்டு வெளியான 'மேயாத மான்' திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர் இயக்குநர் ரத்ன குமார். இதன்பின் இவர் 'ஆடை', 'குலுகுலு' போன்ற படங்களை இயக்கியும் உள்ளார். மேலும் 'மாஸ்டர்', 'விக்ரம்', 'லியோ' உள்ளிட்ட படங்களுக்கு திரைக்கதை மற்றும் வசனமும் எழுதியுள்ளார்.

இதனை தொடர்ந்து இயக்குநர் கார்த்திக் சுப்புராஜின் 'ஸ்டோன் பெஞ்ச்', லோகேஷ் கனகராஜின் 'ஜீ-ஸ்குவாட்' ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கும் புதிய படத்தை ரத்னகுமார் இயக்கி வருகிறார். இந்தப் படம் "29" என்ற தலைப்பில் உருவாகி வருகிறது. இந்தப் படத்தில் இடம்பெறும் "சீலே சீலே" பாடல் கடந்த மாதம் வெளியானது.

இந்த நிலையில் 29 படத்தின் 2-வது சிங்கிள் அப்டேட் நாளை வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. மறைந்த நடிகை சில்க் ஸ்மிதா புகைப்படம் அடங்கிய போஸ்டரை வெளியிட்டு இந்த பாடலுக்கான அப்டேட் வெளியாகி இருக்கிறது. இத்துடன் "Wake up Silk nation" என்ற வாசகமும் இடம்பெற்றுள்ளது.

29 திரைப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். இந்தப் படத்திற்கு மாதேஷ் மாணிக்கம் ஒளிப்பதிவு பணிகளை மேற்கொள்ள படத்தொகுப்பு பணிகளை ஆர்.எஸ். சதீஷ் குமார் மேற்கொண்டுள்ளார்.



இந்திய அளவில் பிரபலமான நடிகைகளில் ஒருவர் வாமிகா கேபி. இவர் கைவசம் தற்போது 12 திரைப்படங்கள் உள்ளன. இதில் தமிழில் DC, இரவாக்காலம், ஜீனி ஆகிய படங்களில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. நடிகை வாமிகா கேபி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிடும் புகைப்படங்கள் உடனடியாக ரசிகர்கள் மத்தியில் வைரலாகும். அந்த வகையில், தற்போது வெள்ளை நிற உடையில் எடுத்த கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை வாமிகா தனது இன்ஸ்டாவில் பதிவிட்டுள்ளார்.

# 'நூறுசாமி' படத்தின் First Single Promo வீடியோ வெளியீடு




தமிழ் திரையுலகில் இசையமைப்பாளராக வலம் வந்த விஜய் ஆண்டனிக்கு கதாநாயகனாக மிகப்பெரிய வெற்றியைக் கொடுத்த படம் 'பிச்சைக்காரன்'.

இயக்குநர் சசி இயக்கிய இப்படம் ரசிகர்களிடம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றதுடன் வசூலையும் குவித்தது. இதனை தொடர்ந்து விஜய் ஆண்டனி பல படங்களில் நடித்தாலும், அவர் இயக்குநர் சசியுடன் மீண்டும் எப்போது இணைவார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே நிலவி வந்தது. அதனை பூர்த்தி செய்யும் விதமாக இயக்குநர் சசியுடன் விஜய் ஆண்டனி மீண்டும் இணைந்துள்ளார்.

அந்த வகையில், இருவரும் இணைந்துள்ள படத்திற்கு 'நூறு சாமி' என தலைப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு படத்திற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

'நூறு சாமி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரை இயக்குநர் வெற்றிமாறன் அண்மையில் வெளியிட்டார். இதில் விஜய் ஆண்டனியுடன் லம்பர் பந்து புகழ் ஸ்வாசிகா நடித்துள்ளார்.

மேலும் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் லிஜோமோல், கருணாஸ், காவ்யா அனில் ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்நிலையில் இப்படத்தின் முதல் பாடலான 'மாய கனவோ' பாடலின் ப்ரோமோ வீடியோ வெளியாகியுள்ளது. இப்பாடல் வரும் 25ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

இந்த படம் மே 1, உழைப்பாளர் தினத்தன்று திரைக்கு வர உள்ளது குறிப்பிடத்தக்கது.

# யூத் படக்குழுவை நேரில் அழைத்து பாராட்டிய நடிகர் சிலம்பரசன்



'அசுரன்', 'விடுதலை 2' திரைப்படங்களின் மூலம் தமிழ் சினிமாவில் நடிகராக அறிமுகமானவர் கென் கருணாஸ். நடிப்பை கடந்து கென் கருணாஸ் "யூத்" திரைப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இந்தப் படம் மார்ச் 19-ஆம் தேதி வெளியானது.

யூத் திரைப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். 'யூத்' திரைப்படத்தை பார்வதா என்டர்மெய்ன்மென்ட் நிறுவனம் சார்பில் கருப்பையா சி. ராம் தயாரித்துள்ளார். தேவதர்ஷினி மற்றும் சுராஜ் வெஞ்சாரமூடு ஆகியோர் இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்தப் படம், பள்ளிக்கூட பின்னணியில் உருவாகியுள்ளது.

கடந்த வாரம் (மார்ச் 19) வெளியான நிலையில், யூத் திரைப்படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது. அந்த வகையில், யூத் படத்தை பார்த்த நடிகர் சிலம்பரசன் படக்குழுவை வாழ்த்தி எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையில், யூத் படக்குழுவினர் நடிகர் சிலம்பரசனை நேரில் சந்தித்த புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்படுகிறது. புகைப்படங்களில் யூத் படத்தின் நடிகர், நடிகைகள் மற்றும் படக்குழுவினர் நடிகர் சிலம்பரசனுடன் நிற்கின்றனர். இதனை யூத் படத்தின் தயாரிப்பாளர் கருப்பையா சி ராம் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

இதுகுறித்த பதிவில் அவர், "திரைத்துறைக்கு உங்களை போன்ற தயாரிப்பாளர்கள் தேவை, பிளாக்பஸ்டர் வெற்றிக்கு வாழ்த்துக்கள். இன்னும் நிறைய பண்ணுங்க - இந்த வார்த்தைகள் இன்னும் என் காதுகளில் கேட்டுக் கொண்டே இருக்கிறது. யூத் படக்குழுவை நேரில் சந்திக்க நேரம் ஒதுக்கி படத்தில் தொடர்புடைய அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்ததற்கு மிக்க நன்றி சிலம்பரசன் சார்.

இதுபோன்ற ஆதரவை தான் ஒவ்வொரு இளைஞரும் எதிர்பார்க்கின்றனர். இது உண்மையிலேயே வித்தியாசமாக உணர்கிறது. நீங்கள் படத்தை பார்த்து மகிழ்ச்சி அடைந்ததில் மிகவும் சந்தோஷமாக இருக்கிறது," என குறிப்பிட்டுள்ளார்.

# அயலான் இயக்குநருடன் இணையும் சூரி



இந்தியாவின் பல மொழிகளில் பிரம்மாண்டமான மற்றும் வித்தியாசமான படங்களை தயாரித்து வரும் முன்னணி தயாரிப்பு நிறுவனமான மைத்ரி மூவி மேக்கர்ஸ் "மைத்ரி தமிழ் 03" என்ற தனது மூன்றாவது தமிழ் திரைப்படத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இந்தப் படத்தில் நடிகர் சூரி கதாநாயகனாக நடிக்கிறார். இந்தப் படத்தை இயக்குநர் ஆர். ரவிகுமார் இயக்க, நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் ஆகியோர் இணைந்து தயாரிக்கின்றனர்.

தீவிரமான களத்துடன் அதே சமயம் கண்ணைக் கவரும் வகையில் படத்தின் அறிவிப்பு போஸ்டர் வெளியாகியுள்ளது. வெள்ள நீரில் இடுப்பு வரை நின்றிருக்கும் கதாநாயகனை பின்பிருந்து காட்டும் வகையில் இந்த போஸ்டர் வடிவமைக்கப்பட்டுள்ளது. நீரில் பிரதிபலிக்கும் அவரது உருவம் மர்மான முறையில் அமைந்திருப்பது ரசிகர்கள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

வலது கையில் கதாநாயகன் பிடித்திருக்கும் ஆயுதம் ஆபத்தையும் உயிர் தப்பி வாழ்வதற்கான போராட்டத்தையும் சுட்டிக்காட்டுகிறது. அவரைச் சுற்றி உடைந்த பாத்திரங்கள், சிதறிய பொருட்கள் மற்றும் கவிழ்ந்த கேஸ் சிலிண்டர் போன்றவை அழிவின் பின்னணியை உணர்த்துகின்றன. முன்புறம் கதவு வழியாக வரும் மங்கலான சிவப்பு ஒளி அச்சத்தையும் பதற்றத்தையும் அதிகரிக்கிறது.

நீரில் பிரதிபலிக்கும் உருவத்தின் மேல் இடம்பெற்றுள்ள 'BLOOD FOLLOWED THE FLOOD' என்ற டேக்லைன், பேரழிவிற்கான வன்முறையின் தீவிரத்தை உணர்த்தும் வகையில் உள்ளது. மொத்தத்தில் இருண்ட, மர்மமான மற்றும் பதற்றம் நிறைந்த கதையைக் குறிக்கும் வகையில் போஸ்டர் வடிவமைக்கப்பட்டுள்ளது.

'கொட்டுக்காளி', 'விடுதலை', 'மாமன்' உள்ளிட்ட படங்களின் வெற்றிக்கு பிறகு நடிகர் சூரி தற்போது முன்னணி கதாநாயகன் பட்டியலில் இடம்பிடித்துள்ளார். 'இன்று நேற்று நாளை' மற்றும் 'அயலான்' போன்ற வெற்றிப் படங்களைக் கொடுத்தவர் இயக்குநர் ஆர். ரவிகுமார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் இதற்கு முன்பு தமிழில் அஜித் நடித்த 'குட் பேட் அக்லி' மற்றும் பிரதீப் ரங்கநாதன் நடித்த 'டியூட்' ஆகிய படங்களை தயாரித்துள்ளது.

இந்த வெற்றி கூட்டணியும், ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கும் போஸ்டரும் சூரி 07 / மைத்ரி தமிழ் 03 திரைப்படம் மீது ரசிகர்களுக்கு அதீத எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. படம் குறித்த இதர தகவல்கள் விரைவில் வெளியாகும்.



நடிகை பிரக்யா ஜெய்ஸ்வால் தெலுங்கில் கவர்ச்சியாக நடித்து ரசிகர்களை தொடர்ந்து கவர்ந்து வருபவர்.

அவர் தற்போது மாலத்தீவுக்கு ட்ரிப் சென்று இருக்கிறார். அங்கு எடுத்த புகைப்படங்களை அவர் தொடர்ந்து வெளியிட்டு வரும் நிலையில் லைக்குகள் குவிந்து வருகிறது.

தற்போது அவர் பிகினி உடையில் இருக்கும் ஹாட் போட்டோக்களை வெளியிட்டுள்ளார். அந்த ஸ்டில்கள் இணையத்தில் படுவைரல் ஆகி உள்ளன.

# கர படத்தில் 'செல்லி'யாக நடிக்கும் மமிதா பைஜு கதாபாத்திர போஸ்டர் வெளியீடு



நடிகர் தனுஷ் நடிப்பில் கடைசியாக வெளியான படம் 'தேரே இஷ்க் மே'. இந்தியில் எடுக்கப்பட்ட இப்படம் தமிழில் வரவேற்பைப் பெறவில்லை என்றாலும், இந்தியில் ரூ.160 கோடிக்கும் அதிகமாக வசூலித்து வெற்றிப் படமானது. தற்போது, தனுஷ் போர் தொழில் இயக்குநர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் நடித்து முடித்துள்ளார்.

இந்தப் படத்தில் நாயகியாக மமிதா பைஜுவும், முக்கிய கதாபாத்திரங்களில் நடிகர்கள் சுராஜ் வெஞ்சரமூடு, ஜெயராம் ஆகியோர் நடித்துள்ளனர். 'கர' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைக்க தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்துள்ளார். இந்தப் படத்தை வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் சார்பில் ஐசரி கணேஷ் தயாரித்துள்ளார்.

இந்தப் படம் வருகிற ஏப்ரல் 30-ஆம் தேதி வெளியாகவுள்ளது. இந்நிலையில், இப்படத்தில் மமிதா பைஜு, 'செல்லி' என்ற கதாபத்திரத்தில் நடித்துள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

# வடசென்னை மாவட்ட முதலாவது சர்க்கிள் கூடுதல் பொறுப்பாளராக நியமித்த பின் காங்கிரஸ் பிரமுகர்களை சந்தித்து வாழ்த்து பெற்ற போது,

# M. மோகன் குமார்









## பென்சிலும்.. ரப்பரும்..!

பென்சில் ஒன்று வந்து
ரப்பரிடம் பேசும்..!
என்னை நீயும் மன்னிப்பாயா
என்று கேட்கும்.!

தப்பாய் நானும் எழுத
ரப்பரே நீ அழிப்பாய்..!
உந்தன் மேனி தேய தேய
உன்னை நீயே இழப்பாய்..!

கூர்மையான முனையில்..
குத்திக் குத்தி எழுத..
பொறுமையுடன் நீயோ
தப்புகளை அழிப்பாய்..!

வெள்ளைத் தாளில்
நானோ.. சீவிவைத்த
மையில்.. எழுதி வைத்தப்
போதும்.. ரப்பரே
நீ பொறுப்பாய்.!

உன்னை
மெல்லத்
தேய்த்து.. தேயத்
தேய குறைந்து..
ஒருநாள்
உருவின்றி
மறைந்திடுவாய்!

பென்சில் யாரு?
பிள்ளை.!
ரப்பர் தானே
பெற்றோர்!
பெற்ற மக்கள்
குறைகளையே..
திருத்துகின்றார்..!

தன்னைத்தானே
தந்து
ரப்பராகத் தேய்ந்து.. மெல்ல
மெல்ல கரைந்து.. ஒரு நாளில்
பெற்றோரும் மறைந்தாரே..!

பிள்ளைகளளை திருத்த..
பேரன்பில் கசிந்து..
ரப்பரைகளாய் தேய்ந்தும் வாழ
வைத்தாரே.!

பென்சில் போல நாமும்
ரப்பராக பெற்றோரும்..
காகிதமாம்
வாழ்வினில்
எழுத வந்தோம்..!
பெற்றவரின்
தியாகத்தைப்
போற்றிடுவோம்.!



**வே.கல்யாண்குமார்.**



## பத்துத் தலை ராசா..!

பத்துத் தலை ராசா..
பத்துத் தலை ராசா..
உன் பக்கம் நின்று பேச
ஆசைப் பட்டேன் ராசா.!
பத்துத் தலை பெருசா..
ஒத்தத் தலைப் பெருசா
பக்கம் நின்றுப் பேச..
ஆசைப் பட்டேன் ராசா.!

காம்போதி இராகம்..
வீணையினை மீட்டி..
கைலாய மலையை
உருக நீ செய்தாய்..
பூபாளம் பாடி.. பூமியைச்
சுற்றியே.. சிவநாமம் சொல்லி.
வணங்கி வழிபட்டாய்!

அறுபத்து நான்கு..
கலைகளில் தேர்ந்து..
ஆதிமுதல் ஈசனை அன்றாடம்
துதித்தாய்!
ஒரு பத்துத் தலையில்
உண்மையாய் அரசாண்டு
இலங்கேஸ்வரன் என்ற
பெயர் பெற்றாய்..!

தன் தங்கை மூக்கறுந்து
நிற்க..
தமைக்கை நினைத்தே
துடிதுடித்தாய்.. மங்கையை
மண்ணோடு சிறையே
எடுத்து.. மானமுடன்
தீண்டாது காவலிட்டாய்!

அண்ணனாக வாழ்வில் கும்ப
கர்ணன் விபீஷணன்..
அரவணைத்தே நீ பாசம்
வைத்தாய்..! அன்பான
மனைவி..
மனண்டோதரிக்கு..
அரணாக நின்றே
காதலித்தாய்.!

உயிர் கொடுத்து
நீதான் பழி
கொண்டாய் ராசா..
பாசமெனும்
மாயைக்கே
பலியானாய் ராசா..
தையலைக்
கவர்ந்தாய்
தங்கைக்காய் மன்னா.!
மையலில் விழுந்தும்..
கை தொடவும் மறுத்தாய்!

உடன் பிறந்தே கொன்றும்..
உயிர் கீதம் இசைத்தாய்..
உப்பிட்ட உன்னை மறந்தாலும்
சிரித்தாய்! களத்திலே
நின்றாய்.. கடைசிவரை
நின்றாய்..!
இராவணன் இல்லையேல்..
இராமகதை ஏது.?

எத்தனை ஆண்டுகள்
அசோகவனம் இருந்தும்
பத்திரமாய் சீதை
பவித்திரமாய் இருந்தாள்.!
பத்துத்தலை வீழ.. அவள்
தீயன்றோ மிதித்தாள்.!

வீணைக் கொடியுடையாய்..
விண்ணலந்தத்
திறனுடையாய்..
தென்னவனாகவே..
திசைகளை வென்றாய்!
உன்னைத் துதித்து..
உன்புகழ் பேச.. என்னுள்
ஆசை..
இதனையும் ஏற்பாய்.!

இராவணன் நீயே..
இமயமாய் எழுந்த வீரனும்
நீயே.. பத்துத் தலையுடன்..
பாரினை ஆண்ட மன்னவன்
நீயே! உன்புகழ் வாழும்!
உலகம் நினைக்கும்..!

**வே.கல்யாண்குமார்.**



## அழுகை எதிரொலி

" மாணவர்களின்
மாணவிகளின் அழுகை
பொதுத் தேர்வு...."

பாறையின் அழுகை
வடித்து கொடுத்த
சிலை...."

உழவனின் அழுகை
முற்றி தலை
சாயும் நெற்கதிர்...."

குழயவனின் அழுகை
ஓரங்கட்டப்பட்டு விட்ட
பானை ..."

" வானத்தின் அழுகை
மழைத்துளி பூமியின்
அழுகை பேரிடர் பூகம்பம்..."

மரத்தின் அழுகை
உதிரும் இலைகள் கடல்
நீரின் அழுகை
கிடைக்கும் உப்பு ....."

தனக்கு தானே அழுகை
வயது கடந்த முதுமை .... "

மலர்களின் அழுகை
ஒரு நாள் ராஜ வாழ்க்கை..."

நாவின் அழுகை சுவையை
இழந்த தருணம் ....."



நதியின்
அழுகை
வற்றிய
காய்ந்த
பாதைச்
சுவடுகள் .... "

**ஆர். சீதாராமன், சீர்காழி.**



## என் காதல்....

அனார் கலி
சலீமை கை விட்டிருப்பாள்

அமராவதி
அம்பிகாபதியை அலைய
வைத்திருப்பாள்

ஜூலியட்
ரோமியோவை
வெறுத்திருப்பாள்

லைலா
மஜ்னுவை துரத்திருப்பாள்

மும்தாஜ்
ஷாஜகானை
சாகடித்திருப்பாள்

இதயம்
இதுவரை சொல்லாத

என் காதலை
உணர்ந்திருந்தால்!!

## நிழல்

உன்னை விழி தேட வில்லை
உன் பெயரை உதடு
உச்சரிக்க வில்லை
உன் குரலை
செவி கேட்க வில்லை
உன் மூச்சுக் காற்றை
இதயம் சுவாசிக்க வில்லை
கனவுகளிலும்
நீ வர வில்லை
யாரடி நீ எனக்கு ???
என்ன செய்தாய் ?
என்ன மாயம் புரிந்தாய் ?
விடை தெரியாமல்
கடவுளை போல நான் !!!

சாவதற்குள் சத்தியமாக
சொல்கிறேன் கேள் ....
கர்வத்துடன் கேள்
என்னவளே என் உயிரை
மட்டும் மீதம் வைத்தவளே ,

ஏதும் சொல்லாமலே ,
எதுவும் செய்யாமலே
கொல்லாமல் கொல்கிறாய்??

ஏன் ?

எதற்கு ?

பித்து பிடித்தவன் போல



சித்தம்
தெளியாமல்–
உன்
நிழலாய்
ஏனடி அலைய
விட்டாய்!!!

காதல் பைத்தியமாய்!!!


**லி.நௌஷாத் கான்**

# நூல் விமர்சனம்

### சிந்தனைக் கவிஞர் கவிதாசனின் வெற்றி முழக்கம் – தொகுப்புகள் குறித்த விமர்சனங்கள் – கவிஞர் இரா. இரவி – ஒரு பார்வை – பொன். குமார்

படைப்புகள் வெளிவரும் அளவிற்கு விமர்சனங்கள் வருவதில்லை. விமர்சனங்கள் வந்தாலும் காயப்படுத்துவதாகவே உள்ளது. விமர்சகர்களும் இன்று தனியாக இல்லை. படைப்பாளர்களே மற்ற படைப்பாளர்களின் படைப்புகளை விமர்சிப்பவர் களாக உள்ளனர். ஒரு படைப்பாளியின் மொத்த தொகுப்புகளையும் விமர்சித்து தொகுப்பாக்குவது அரிது. இவ்வகையில் எழுத்தாளர் உமையவனின் சிறுவர் நூல்கள் குறித்த விமர்சனங்கள் மட்டும் எழுதி உமையவனின் சிறார் படைப்பிலக்கியம் என்னும் ஒரு தொகுப்பு பொன். குமாரால் கொண்டுவரப்பட்டது. இரண்டாவதாக கவிஞர் ஆரிசன் எழுதிய அனைத்து தொகுப்புகளுக்குமான விமர்சனங்கள் எழுதி கவிஞர் ஆரிசனின் கவிதை உலகம் என்றொரு தொகுப்பு பொன். குமாரால் கொண்டுவரப்பட்டது. மூன்றாவதாக கவிஞர் இரா. இரவி எழுதிய ஹைக்கூ தொகுப்புகளுக்கான விமர்சனங்கள் அடங்கிய தொகுப்பாக கவிஞர் இரா. இரவியின் ஹைக்கூ உலகம் என்னும் தொகுப்பும் பொன். குமாரால் கொண்டுவரப்பட்டது. தற்போது கவிஞர் இரா. இரவியே சிந்தனைக் கவிஞர் கவிதாசனின் இருபது தொகுப்புகள் குறித்த விமர்சனங்கள் எழுதி சிந்தனைக் கவிஞர் கவிதாசனின் வெற்றி முழக்கம் என்னுமொரு தொகுப்பைக் கொண்டு வந்துள்ளார். இறையன்பு கருவூலம், இலக்கிய இணையர் படைப்புலகம், ஏர்வாடியார் கருவூலம் என்னும் நூல்கள் இதற்கு முந்தையவையாகும்.

கவிஞர் இரா. இரவி ஒரு படைப்பாளி மட்டுமல்ல ஒரு நல்ல விமர்சகருமாவார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட விமர்சனங்களைச் செய்துள்ளார். செய்தும் வருகிறார். கவிதை, ஹைக்கூ, கட்டுரை, சிறுகதை என எல்லா வடிவங்களையும் பாரபட்சமின்றி செய்து வருகிறார். படைப்பாளிகளில் சிறியவர், பெரியவர், புதியவர், பழையவர் என பாகுபாடு பார்ப்பதில்லை.




முதல் முறையாக சிந்தனைக் கவிஞர் கவிதாசனின் இருபது தொகுப்புகளுக்கு விமர்சனங்கள் எழுதி ஒரு தொகுப்பாக்கித் தந்துள்ளார். இவை கவிதாசனின் தன்னம்பிக்கைக் கட்டுரைகள், முன்னேற்றக் கட்டுரைகள், வெற்றிக்கான கட்டுரைகள் அடங்கிய தொகுப்பாகும். கவிதைகளும் கருத்துகளும் உண்டு. ஒரு படைப்பாளியின் இருபது படைப்புகளையும் விமர்சித்து தொகுப்பாக்கியிருப்பது பாராட்டுக்குரிய செயல். ஒரு படைப்பாளியை ஒரு படைப்பாளியே உணர்வார் என்பதைக் காட்டுகிறது. "அவர் என் மீது கொண்டுள்ள எல்லையற்ற அன்பின் வெளிப்பாடாக எனது படைப்புகளை வாசித்து வாசித்துப் பொழிவில் என்னை எப்பொழுதும் நனைய வைத்து, மகிழ வைப்பதில் முந்திக் கொள்வார்" என கவிதாசனே இரா. இரவியைப் புகழ்ந்துள்ளார். கவிதாசனை மட்டுமல்ல கவிஞர்கள் அனைவரையும் கொண்டாடக்கூடிய ஒரு கவிஞர் இரா. இரவி. கொண்டாடப்பட வேண்டிய கவிஞருமாவார்.

கவிதாசனின் நூல்கள் கனிச்சாறாக வந்துள்ளன என்றும் பேச்சு, எழுத்து இரண்டிலும் தனிமுத்திரை பதித்து வருபவர் என்றும் பொதுவாக கவிதாசன் குறித்து எழுதித் தொடங்கியுள்ளார். கவிஞர் இரா. இரவி நுனிப்புல் மேய்ந்தவராக தெரியவில்லை. கவிதாசனின் தொகுப்புகளில் முன்னுரையில் இருந்து முடிவுரை வரைக்கும் வாசித்து அவையில் தனக்கு பிடித்தமானதை, மக்களுக்குத் தேவையானதைத் தேர்ந்தெடுத்துத் தந்துள்ளார். அட்டை அழகானதாக இருந்தால் ரசனையுடன் அதனையும் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக ஐயா அப்துல் கலாம் படத்தை ரசித்துள்ளது தெரிகிறது. ஒவ்வொரு விமர்சனத்தின் முடிவிலும் பதிப்பக முகவரியைத் தந்து வாங்கி வாசிக்கவும் வழிவகைச் செய்துள்ளார்.

" மகிழ்ச்சியாகவும் மனநிறைவோடும் இருந்தால்தான் வெற்றிபெற முடியும். ஒவ்வொரு கட்டுரையின் முடிவிலும் மனதில் பதியும் வண்ணம் கல்வெட்டு கவிதைகளை, பொன்னான வாசகங்களை எழுதி முடித்து உள்ளார் " என வானவில் வாழ்க்கை தொகுப்பு குறித்து எழுதியுள்ளார். சிந்தனைக் கவிஞர் கவிதாசனும் ஒரு கவிஞர் என்பதையும் ஒரு கவிதைப்பிரியர் என்பதையும் காட்டியுள்ளார். கவிஞர் இரா. இரவியும் அதே போல் பல விமர்சனங்களின் முடிவில் கவிஞர் கவிதாசனின் கவிதைகளை, கருத்துகளை, சிந்தனைகளை, பொன்மொழிகளை எடுத்துக்காட்டியுள்ளார். அவையில் ஒன்று பதவி ஒருவருக்கு அதிகாரத்தைத் தருகிறது பண்புதான் அவருக்கு மரியாதையைத் தருகிறது பணிவெனும் பண்பே பண்புகளின் தாய் என்பதாகும்.

கொரானா காலம் என்பது உலகத்தையே முடக்கி போட்டது. அனைவரையும் அடக்கி வைத்தது. வீட்டிலேயே இருக்கச் செய்தது. சிலர் எதுவும் செய்யாமல், எது செய்வதென தெரியாமல் சும்மா இருந்தனர். சிந்தனைக் கவிஞர் கவிதாசன் சும்மா இராமல் இந்த நாள் வெற்றித் திருநாள் என இணையம் மூலம் தன்னம்பிக்கைக் கட்டுரைகளை எழுதி இரண்டு பாகங்களாக வெளியிட்டுள்ளார் என்னும் தகவலும் உண்டு. இத்தொகுப்புகள் குறித்தும் விமர்சனங்கள் எழுதியுள்ளார். சமுதாயத்திற்கு பயனுள்ள வகையில் மக்கள் சோர்ந்து போகாத வகையில் அச்சத்திலிருந்து மீட்டெடுக்கும் வகையில் தன்னம்பிக்கை முழக்கம் செய்துள்ளார் என்கிறார். வெற்றிப் பெறுவதற்கு பாராட்டுவதும் ஒரு காரணம் என்கிறார். அதனாலே கவிஞர் இரா. இரவி அனைவரையும் பாராட்டுகிறார் என்று தோன்றுகிறது. சுவாசிப்பு மட்டுமல்ல வாசிப்பும் மனிதரை வாழச்செய்யும் என்பதை எடுத்துக்கூறி வாசிப்பைத் தூண்டுகிறார். தொடர்ந்து கற்க வேண்டும் என்கிறார். பட்டதாரிகள் பட்டம் பெற்ற பின்பும் வாசித்தாலே படித்து பட்டம் பெற்றதற்கு அர்த்தம் என்கிறார்.

மு. க. ஸ்டாலின் வளர்ச்சி குறித்து கேட்ட போது கலைஞர் மு. கருணாநிதி உழைப்பு உழைப்பு உழைப்பு என்று கூறினார். கவிஞர் இரா. இரவியும் வாழ்வை உயர்த்தும் பண்புகள் தொகுப்பு விமர்சனத்தில் உழைப்பு உழைப்பு உழைப்பு என்று கூறி உழைப்பால்தான் உலகமே உருவானது என்கிறார். உழைப்பே உயர்வு தரும் என்கிறார். உழைப்பு உழைப்பு உழைப்பு = உயர்வு எனவும் ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார். கவிஞர் இரா. இரவியின் உழைப்பும் கவிஞர் கவிதாசனின் உழைப்பும் இத்தொகுப்பாக உருவாகியுள்ளது.

கவிஞர் கவிதாசன் ஒரு படைப்பாளி மட்டுமல்ல ஒரு நல்ல வாசகருமாவார். கவிதாசன் வாசித்த வரிகளையும் எடுத்துக்காட்டியவர் ஓர் எடுத்துக்காட்டைத் தந்துள்ளார். அது சுடர் விட வேண்டுமா? சூடுபட வேண்டும். வலிமை பெற வேண்டுமா? வலி தாங்க வேண்டும். சுடுதல் இன்றி சுடர்விட்டவர் யாருமில்லை. வலியின்றி வலிமை பெற்றவர் யாருமில்லை. உயர்ந்த இலட்சியத்தோடு போராடுங்கள். வெற்றி நிச்சயம். இதை எழுதியவர் எம். ஜி. ராஜமாணிக்கம். கவிஞர் இரா. இரவியும் கவிதாசனின் பல கூற்றுகளை, பல கருத்துகளை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

முப்பது நாட்களில் முன்னேற்றம் என்னும் தொகுப்பில் முப்பது கட்டுரைகள் உள்ளதாகவும் முப்பது நாள்களில் தினசரி ஒன்றாக எழுதியது என்கிறார். இதுவே ஒரு முன்னேற்றமாக உள்ளது. முப்பது நாள்களில் தினசரி ஒன்றாக கடைப்பிடித்தால் முன்னேற்றம் நிச்சயம் என ஆத்திச்சூடி போல் கவிதாசன் கூறிய முப்பது கட்டளைகளைக் கூறி முன்னேற்றத்திற்கு முதல்படியமைக்கிறார். எழுத்தாளர்கள் பலரிருந்தாலும் பலவகையிருந்தாலும் தன்னம்பிக்கை, முன்னேற்றம் என்பதை மட்டுமே பொருண்மையாகக் கொண்டு தனிமுத்திரை பதித்து வெற்றிக்கொடி நாட்டி வருகிறார் கவிதாசன் என புகழாரம் சூட்டியுள்ளார். கவிஞர் கவிதாசனுக்கு முன் டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி, மெர்வின் போன்றவர்கள் இருந்தார்கள்.

முயன்று எழு முன்னேறு என்னும் நூல் குறித்து எழுதும் போது பிறந்தோம் சாதித்தோம் என்பதை உணர்த்தும் நூல் என்கிறார். பிடிவாதம் என்னும் குணத்தையும் ஆக்கச் செயலுக்காக பயன்படுத்தலாம் என்று கவிதாசன் அறிவுறுத்தியதைக் குறிப்பிட்டுள்ளார்.

வெற்றிப் பூக்கள் என்பது கவிதைகள் அடங்கிய தொகுப்பு என்றும் தொகுப்பிலுள்ள பல கவிதைகளை எடுத்துக்காட்டி கவிதை குறித்தும் எழுதியுள்ளார். உங்கள் பேச்சு வெட்டிக் கிழிக்கின்ற கத்திரிக்கோலாக இல்லாமல் கிழிசல்களைத் தைக்கிற ஊசியாக இருக்கட்டும் என மனைவியிடம் பேசுங்கள் என்று கவிதாசன் எழுதியதை மனைவியிடம் மட்டுமல்ல மற்றெல்லோரிடமும் அப்படியே பேசுங்கள் அப்போதே சமரசம் நிலவும் என்று கவிஞர் இரா. இரவி தன் கருத்தைக் கூறியுள்ளார்.

உலக உத்தமர் கலாம் என்னும் தலைப்பிலான தொகுப்பு கவிதாசன் எழுதியதல்ல. கலாம் குறித்த கட்டுரைகளை தொகுத்தது. கவிதாசன் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இரா. இரவியும் ஒரு கட்டுரை தந்துள்ளார். கட்டுரையாளர்களில் தான் மட்டுமே மிகச் சிறியவன் என தன்னடக்கத்துடன் தெரிவித்துள்ளார். உண்மையிலே இரா. இரவி மிகப் பெரியவர் என்பதை அப்துல் கலாமுடனான அவர் நட்பும் உறவும் காட்டும். இக்கட்டுரையில் அப்துல் கலாம் தொடர்பான பல நிகழ்வுகளைக் கூறியுள்ளார்.

தன்னம்பிக்கைச் சிந்தனைகள் என்னும் தொகுப்பு குறித்து வாசிக்கும் வாசகர்களுக்கு சுறுசுறுப்பைத் தரும் எழுத்துகள் அடங்கியவை என்கிறார். எழுத்து என்பது எப்போதும் வாசகனை உள்ளிழுத்துச் செல்ல வேண்டும், உடனழைத்துச் செல்ல வேண்டும். கவிஞர் இரா. இரவியின் எழுத்துகளும் வாசிப்பிற்கு சலிப்புத் தட்டாதவை.

திசைகளைத் திரும்பிப் பார்க்கிறேன் என்னும் தொகுப்பு குறித்த விமர்சனத்தில் கவிஞர் கவிதாசன் தன்முன்னேற்றம் குறித்து எழுதுவதற்குக் காரணமாக இருந்தவர் தன்முன்னேற்றம் மாத இதழின் ஆசிரியர் இல. செ. கந்தசாமி என்பதை நன்றி மறவாமல் குறிப்பிட்டு நன்றியைப் பாராட்டியுள்ளார். நன்றி மறவாதிருப்பதும் வெற்றிக்கு ஒரு வழி என்றும் ஒரு விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சிந்தனைக் கவிஞர் கவிதாசன் பல பட்டங்களை பெற்றிருந்தாலும் பல விருதுகளை பெற்றிருந்தாலும் தன் பெயருக்கு முன்னால் கவிஞர் என்று மட்டுமே போட்டுக்கொள்வார் என்று கூறியதுடன் தானும் அப்படியே என்று தன்னடக்கத்துடன் கூறியுள்ளார் கவிஞர் இரா. இரவி. எத்தனை பட்டங்கள் பெற்றாலும் விருதுகள் பெற்றாலும் கவிஞர் என்பதற்கு ஈடாகாது. கவிஞர் என்பவன் சமூகத்தில் மிக உயர்ந்தவன். இத்தகவலை தொட்டு விடும் தூரம்தான் வெற்றி என்னும் தொகுப்பு குறித்து எழுதும் போது எழுதியுள்ளார். வெற்றிப்படிக் கட்டுகள் என்னும் தொகுப்பு கேள்வி பதில்களாலானது. திருக்குறள் தங்கள் வாழ்க்கையை எவ்வாறு மேம்படுத்தி வருகிறது என்னும் கேள்விக்கு ஆசிரியர் தண்டனையாக திருக்குறள் ஒப்புவிக்கச் சொன்னதே திருக்குறளுடன் ஒரு பயணத்திற்கு காரணமானது என்னும் பதிலைத் தெரிவித்ததாக குறிப்பிடுகிறார். தொடர்ந்து திருக்குறளுக்கு ஒரு தன்னம்பிக்கை உரையும் கவிதாசன் எழுதி வருவதாகவும் ஒரு தகவலைத் தெரிவித்துள்ளார். விமர்சனங்களினூடாக கவிஞர் இரா. இரவியும் கவிதாசனின் பல கருத்துகளுக்கு திருக்குறளை ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். எப்பொழுதும் கவனமாகப் பேச வேண்டும் ஏனென்றால் எழுதியதைக் கூட திருத்தி எழுத முடியும் பேசியதை என நம்பிக்கை நாற்றுகள் 100இல் எழுதியதற்கு கனியிருப்பக் காய் கவர்ந்தற்று என்னும் குறள் நினைவிற்கு வருகிறது என்கிறார்.


" உங்களுக்கு இல்லாததை நினைத்துக் கவலைப்படுவதை விட உங்களிடம் உள்ள சிறப்புத் தன்மையை நினைத்து மகிழ்ச்சி அடையுங்கள். குறையே இல்லாத மனிதன் இல்லை. குறைகளை மட்டுமே பார்ப்பவன் மனிதன் இல்லை" என்பது கவிஞர் கவிதாசனின் ஒரு வெற்றி மொழி. வெற்றி மொழிகள் என்னும் தொகுப்பில் இடம்பெற்றது என்கிறார். கவிஞர் இரா. இரவியும் குறைகளைக் காணாமல் நிறைகளை மட்டுமே கண்டு நெஞ்சார பாராட்டியுள்ளார்.

விமர்சனங்களைக் கொண்டு நம்மை நாமே செதுக்கிக் கொள்ள வேண்டும் மனதைச் சிதைத்துக் கொள்ளக் கூடாது என்பது விமர்சனம் குறித்து வெற்றிச் சிந்தனைகள் 100இல் எழுதியுள்ளார் கவிதாசன். கவிஞர் இரா. இரவி எழுதிய விமர்சனங்கள் கவிதாசனை மேலும் செதுக்கி இருக்கும். விமர்சனங்களை கூர்ந்து கவனிக்க வேண்டும், அதில் உண்மை இருந்தால் கவனத்தில் கொண்டு நம்மைச் செதுக்கிக் கொள்ள வேண்டும் என்று கவிஞர் இரா. இரவியும் ஒரு விமர்சகராக எழுதியுள்ளார். ஒரு படைப்பாளராக செதுக்கிக் கொள்கிறார்.

இலட்சியவாதிகளை உருவாக்குவதே என் இலட்சியம் என்பது கவிஞர் கவிதாசனின் தாரக மந்திரம் என்கிறார். நல்ல இலட்சியம். இலட்சியம் இல்லாமலே பல மனிதர்கள் கயிறறுந்த பட்டமாக அலைகின்றனர். மனிதர்கள் இலட்சியத்துடனுடன் இருக்கும் போது வாழ்வில் வெற்றியடைய முடியும். கவிஞர் இரா. இரவி ஒரு விமர்சகராக மட்டுமில்லாமல் ஒரு படைப்பாளராக விமர்சனங்கள் மூலம் ஒரு படைப்பாளியான சிந்தனைக் கவிஞர் கவிதாசனின் படைப்புகள் குறித்து அறியச் செய்துள்ளார். முன்னேற்றக் கருத்துகளை முன்வைத்த கவிதாசனை முன்னேற்றச் செய்துள்ளார். தன்னம்பிக்கை விதைகளை விதைக்க முயன்றவருக்கு தன்னம்பிக்கையை ஊட்டியுள்ளார். கவிஞர் கவிதாசனின் போக்கும் கவிஞர் இரா. இரவியின் நோக்கமும் ஒரே நேர்க்கோட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது. சிந்தனைக் கவிஞர் கவிதாசனின் வெற்றி முழக்கத்தை பறைசாற்றியுள்ளார் கவிஞர் இரா. இரவி. தொடர் வெற்றிக்கும் வழிவகுத்துள்ளார். வெற்றிகள் தொடர இருவருக்கும் வாழ்த்துகள்.

**வெளியீடு வானதி பதிப்பகம் சென்னை 044 24342810 கவிஞர் இரா. இரவி 9842193103 கவிஞர் கவிதாசன் 9894683013 பொன். குமார் 9003344742**



## இதழ்கள்

படிக்கும் இதழ்களைப்
பார்த்தாலே பரவசமாகிக்
குதூகலத்தில் குதித்து
விடுகிறது உன் கண்கள்!
மாமா குட்டி என்று
செல்லம் கொஞ்சி
உன் பூங்கரத்தால்நீ
என்னைத்தொடுகையில்
உன் அழகு அந்தப்
பேரழகு இந்தக்
கோடையில் என்னை
உதகமண்டலத்திற்(குகே
அழைத்துச் சென்று
அங்கேயே என்னை
விட்டு விட்டு வருகிறது!
உன்னைப் போல் எனக்கும்
வாசிப்பது சுவாசிப்பது போல்
தான் என்றாலும்(கூட)
உன் அருகாமை என்னை
விளையாட அல்லவா
அழைக்கிறது!
கவிதையான உன்
சிரிப்பழகில் ரசித்து மயங்கவே
உன் இதழ்கள் காதல்
இதழ்களாக மாறாதா என்று
எனக்கோர் ஆசை!
நீ புத்தக இதழ்களைப்
பிரித்தாலும் சரி உன்
இதழ்களை விரித்துச்
சிரித்தாலும் சரி
அளவில்லாதோர்
ஆனந்தம்
என் இதயத்திலிருந்து
உதயமாகிறது!



முத்து ஆனந்த்
வேலூர்

## அக்கரை பச்சை ...

ராசா ....எப்படி இருக்க ?
என்னை பத்தி கவலைப்
படாதே, நீ வேலா வேலைக்கு
நல்லா சாப்பிடுய்யா
எனக்கு ஒரு குறைவும்
இல்லைம்மா ...நீ உடம்ப
பார்த்துக்கோ
டாக்டர் சொன்ன மாதிரி
உடனடியா ஆப்ரேசன்
பண்ணும்மா ...நாளைக்கு
அறுபதாயிரம் பணம்
வெஸ்டர்ன் யூனியன் மூலமா
அனுப்பி வைக்கிறேன் என்று
சொல்லி விட்டு கலங்கிய
கண்களோடு போனை
வைத்தான் ..இளைய ராஜா ...
வேலை செய்யும் ஆபிஸ்
மற்றும் உடன் வேலை செய்யும்
தோழர்களிடம் கடன்
வாங்கி தன் அம்மா
ஆப்ரேசனுக்காக பணம்
அனுப்பி வைத்தான் ...

ஏற்கனவே ஊரில் வாங்கிய
கடனுக்காகவும் ,இப்போ
வாங்கிய கடனுக்காகவும்
தனக்கு பிடிக்காத
,கஷ்டமான அந்த
வேலையை இளைய
ராஜா விரும்பி
செய்தான்..
தன் சொற்ப
வருமானத்தில் கடனை
விரைவில் அடைக்க முடியாது
என்ற காரணத்திற்காக ஓய்வு
நேரத்தில் கூட ஓவர் டைம்
பார்த்தான் ...ருசியாக
சாப்பிட்டால் காசு அதிகமாகும்
என்பதற்காக காய்ந்த
குபுசையும்(ரொட்டி),டீ–
யையும் தான் பெரும்பாலும்
சாபிட்டான் ...

தமிழ் நாட்டில் உள்ள ஒரு
ஊர்–ஒரு தனியார் மருத்துவ
மனையில் (இரண்டு
செவிலியர்களின் பேச்சு
வார்த்தைகள் )

இங்கே பாருடி இந்த டாக்டர்
ரொம்ப மோசம்டி ...அந்த
அம்மாவுக்கு கிட்னி–யில
இப்ப தான் ஸ்டோன்
உருவாகி இருக்கு ...நூறு
ரூவா மாத்திரையிலேயே
குணமாகிடும் ஆனா அந்த
டாக்டரு அந்தம்மா புள்ள
துபாய்ல வேலை
பார்க்குறதை
தெரிஞ்சுக்கிட்டு காசு
புடுங்குறதுக்காக
அநியாயமா ஆப்ரேசன்
செய்யணும்னு
சொல்லிட்டு அறுபதாயிரம்
வாங்கிட்டாரு....




நௌஷாத் கான் .லி

## அன்றலர்ந்த மலர்

ஆதவன் பார்க்க அழகான காலை மலர் மலர்ந்தது ,
பூக்களின் செவ்விதழ்கள் விரிந்து பனி படர்ந்தது
மழை அல்ல அது பனித்துளி தான் என பரிதி வந்து
நிரூபித்தது அன்றலர்ந்த மலர் மெல்லிய தென்றலில் ஆடி ஆடி
சிரித்தது மலர் சிரித்ததில் பரிதியும் சிரித்தது
அமைதியாக சுழலும் அகிலத்தை பரவசத்தில் ஆழ்த்தியது
அகிலத்தின் மக்கள் அழகான பரிபாஷையில்
பேசினர் பேசிய பேச்சில் பல காதல் மலர்கள்
மகிழ்ந்து மலர்ந்ததுஅன்றலர்ந்த மலரே உன்
வாசம் எனக்கு நேசமானதேநேசத்தில் தோற்றுப்
போனேன் அதனால் இன்பமே..



உஷா முத்துராமன்



## கண்தானம் செய்வோம்

உயிரினங்களின்
உண்மையான அழகு
கண்களில் மட்டுமே
காணப்படுகிறது,,,,!
அதனால்தான் கண்களில்
பட்டவுடன் இதயத்தில்
நுழைந்து~நம்மை இம்சை
செய்கிறது காலங்காலமாய்
காதல்,,,,

காதலியையும் மனைவியையும்
குழந்தைகளையும்கூட
கண்ணே மணியே
என்றுதானே கொஞ்சுகிறோம்
கண்கள் தூய்மை விரும்பிகள்
ஒரு சிறு தூசிப்பட்டால்கூட
தாங்கிக்கொள்ள முடியாமல்
கண்ணீர் வடிக்கிறது,,,

கண்களைவிட உயர்ந்த
நிழற்பட கருவியை
எந்த நிறுவனங்களும்
இதுவரை உருவாக்கவில்லை
அப்படியே உருவாக்க
நினைத்தாலும் அதையும் நம்
கண்களால் பார்த்தே
உருவாக்க வேண்டும்,,,


நல்லது,,,கெட்டது,,,
அத்தனையும் தீர்மானிப்பது
கண்களே,,, கண்களையும்
காதலையும் பாடாத
கவிஞர்களே இல்லை,,,,

ஏழையின் சிரிப்பில்
இறைவனையும்
கடைக்கண் பார்வையில்
காதலையும் உலகத்தை
உற்றுப்பார்க்க உதவும்
உன்னத கருவி கண்கள்,,,,

மனிதனுக்கு மறுப்பிறவி
உண்டோ,இல்லையோ
நிச்சயமாய் கண்கள்
மறுப்பிறவி எடுத்துக்
கொள்கிறது
கண்தானம் மூலமாக
கண்களை
பாதுக்காப்போம்
கண்தானம்
செய்வோம்,,,!



நாகைஆசைத்தம்பி
கோவை



## பெண்ணென பூமியில்..

வலிகளோடு ஒரு பயணம்
அது என் வாழ்க்கைப்
பயணமே சோர்ந்திடவில்லை
என்றும் தொடர்கிறேன் அதை
இன்றும்

ஒரு ஐம்பது
ஆண்டுகள் முன்பு..

உதிரத்துள் கருவாக
நுழைந்து விட்டேன்
போராடி... பெண்ணென்று
தெரிந்திருந்தால்... அன்றே
பெற்றிருப்பேன் பப்பாளி

பத்து மாதங்களில்
பட்டென விழுந்து விட்டேன்
மண்ணில்...புன்னகைத்தேன்..
பெண்ணா??? என்ற
வெறுப்புப் பார்வைகளுக்கு
நடுவே...

பள்ளிக் காலம் மறுப்பில்லை
கல்லூரி கல்வி தான்
கனவாகிப் போனது..
கடுமையான எதிர்ப்போடு
கடந்தேன் பதினெட்டை..

சுமக்க முடியா
கடனாம் நான்..
கட்டிக் கொடுத்து...
வீட்டை விட்டு
விரட்டி விட்டனர்...

கை கோர்த்த கணவனாவது
என் கனவை மதிப்பானா...
ஆவலோடு நான் இருக்க..
அவனோ அவன் கனவை
திணித்து விட்டான்
அவசரமாக..

இதோ.. கடனே என்றே
கடந்த வாழ்க்கை பயணத்தில்
பெற்று விட்டேன்
ஒரு பிள்ளை... அதுவும்
பெண் பிள்ளை

நான் கடக்கும் கரடு முரடு
பாதையை காட்டுவேனா
என்ன? என் கண்மணிக்கு??
கண்ணீர் சிந்த தான்
விட்டிடுவேனா??

போராடும் போராளியாகத்
துணிந்து விட்டேன்
போர்க் கொடியை
தூக்கிய படி...

ஆணவக்காரி
அடங்காப் பிடாரி..
இன்னும் பல பட்டங்கள்
இப்போது இந்த
பள்ளி தாண்டா
பாவை எனக்கு

பரவாயில்லை பயந்திட
போவதில்லை.. பதுங்கிடவோ
இது நேரமில்லை..

கண்மணியே...
உன் பயணத்தில்
பிச்சிப் பூக்களைத் தூவ...
உச்சி மீது... என் உச்சி மீது
வானிடிந்து வீழினும்
தாங்குவேனடி...

உயரப் பறந்து... நீ
உலகோடு சேர்த்து
வானையும் ஆள
ஆயத்தம் செய்யடி...
ஆயுதத்தோடு...
அரணாய் இருப்பேன் நானடி

இந்த.. வலிகளோடான
என்
வாழ்க்கைப்
பயணம்
முடியும் வரை....



இன்னிலா
போஸ்
நங்கநல்லூர்,
சென்னை

## முன்னேற்ற எண்ணம் கொள்

எண்ணம் உண்டு..
எண்ணம் உண்டு..
நில்லுத் தோழா..!
முன்னேற வேண்டும்
இங்கே ஓடு தோழா.!

தன்னை இங்கு அறிந்திடு
தேடு தோழா! முன்னேற
வேண்டும் இதைப் பாடு
தோழா!

நான் மட்டும் முன்னேற
எண்ணாதே நீ..! நம்மைச்
சுற்றி வாழுவோரும்
முன்னேறனும்..! ஏன்
என்று கேள்வியினை நீயும்
கேட்கனும்..!
எண்ணம் போல
வாழ்க்கையிலே
முன்னேறனும்.!

நல்லவரை நம்பாத உலகம்
இது.. இங்கு செய்ய
வேண்டியது நிறைய
உண்டு. ! உள்ளமதில்
உறுதியாய் நிமிர்ந்து நில்லு..!
உண்மையென்னில் ஊருக்கே
உரக்கச் சொல்லு.!

கட்டி வைத்த அடிமை
விலங்குகளை.... சுத்தி
வைத்து உடைத்திட உறுதி
கொள்ளு.! எட்டி நின்று
வேடிக்கைப் பார்க்காமலே..
ஏன் என்று கேட்கவே
துணிந்து நில்லு.!

வே.கல்யாண்குமார்.



## ஈசன் திருவடி போற்றி

ஆதியுமாய் அந்தமுமாய் அவனே––இந்த
அவனிதன்னை ஆள்கின்ற சிவனே

பிட்டுக்கு மண்சுமந்த பெருமான் ––அடியார்
குறைதீர்த்து அனைத்தருளும் தருவான்

பிறவிப்பிணி போக்குகின்ற நாதன் ––புவியில்
அனைத்துயிர்க்கும் கருணை செய்யும் வேதன்

கயிலையிலே குடிகொண்ட பித்தன் –––மாந்தர்
நோய் தீர்க்கும் மருத்துவனாம் அத்தன்

அவனை எண்ணி வாழ்ந்தாலே போதும் –––வாழ்வில்
துன்பமெல்லாம் தொலைதூரம் ஓடும்

அவன் பெருமை தன்னைப் பறை சாற்றி––
வாழ்வோம் ஐந்தெழுத்து மந்திரத்தைப் போற்றி!



தமிழ்ச்செம்மல் C K முருகன்
@ கவிஞர் அழகு சக்திகுமரன் கோவை.

## சித்திரை வெயில்

கண்ணகியைக்
கதிரவன் தான்
நினைவுபடுத்துகிறான்
அவள் தூக்கி எறிந்த
காற் சிலம்பிலிருந்து
அக்னி பரல்கள்
சிதறுகின்றன!

துரியோதனன் கட்டிய
அரக்கு மாளிகையாய்த்
தகிக்கிறது சித்திரை!
இங்கே கௌரவர்களெல்லாம்
குளிர்சாதன அறைக்குள்
ஒளிந்து கொள்கிறார்கள்
பாமர பாண்டவர்களெல்லாம்
வெந்து நோகிறார்கள்!

சோம்பலைப்பரிசாய்த்
தந்துவிட்டு சூரியன்
மட்டும் சுறுசுறுப்பாய்
இருப்பது சித்திரையில் தான்
உழைத்தவனுக்கும்
உழைக்காதவனுக்கும்
எப்படியோ வியர்வை
மட்டும் வந்துவிடுகிறது!

முற்றும் துறந்தவனும்
நிலா வெளிச்சம்
போதும் என்பான்
பொழுதெல்லாம்
இரவாகவே இருந்திடக்
கூடாதா என்று
தவமிருப்பான்!

மரங்கள்
நெருக்கமாகிவிட்டால்
ஊராட்சிகளும் ஊட்டி
கொடைக்கானல்களாய்
உருவெடுக்கும்!

மாந்தரெல்லாம்
வீட்டுக்கு இரு
மரங்கள் வளர்ப்பதாய்
உறுதி மொழிந்தால்
ஓசோன் கவசம்
வலிமை பெறும்!

பசுமைக்கொள்கையைப்
பறைசாற்றாவிட்டால்
பெருகி வரும் வாகனப்
புகையினால்
வருங்காலச்
சித்திரை
களெல்லாம்
நித்திரையைக்
கலைப்பதோடு
எரிமலையாய்
எச்சரிக்கும்!



கவிஞர் த.அனந்தராமன்
துறையூர்

தேநீர்
குவளை
நாற்காலி
ஒருநாள் அது உங்களுக்கு
மறுக்கப்பட்டால்
தெரிந்தே அது உங்களுக்கு
நிராகரிக்கப்பட்டால்
அப்போது புரியும்
எங்கள் வலியின்
அர்த்தமும் அடர்த்தியும்.

நாங்கள்
கேட்பதெல்லாம்
ஒன்றுதான்.
உங்களை
நாங்கள்
மதிப்பது
போல
நீங்களும் மதியுங்களென்றே.



துங்கன்

## கவிதை தினம்....

தனிமைகளை
நிறைவாக்கும்....தவம்...
ஆழ்மனதில் அலைபாயும்..
செபம்...

யாருமற்றத் தருணங்களில்...
பூத்துக் குலுங்கும்... பூமரம்..
தாய் தமிழுக்கு..கவிதையே...
வெண்சா மரம்...

மனிதர்கள் தரக்கூடும்...
பேச்சில்...நிந்தனை...
எப்போதும் கூர்தீட்டும்...
நற்சிந்தனை....

தனியொரு உலகில்... தனிப்
பெரும்... உறவு...
கல்மனதையும்
இளக்கும்..
இலக்கிய
உழவு....

கற்பனை
விதைகள்
மட்டுமே அல்ல...
நம்பிக்கை நாற்றுகள்...
கவிதைகள்...



தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி



## அவள்

'உம்'களில் ஒடித்துப்
போடுகிறாய் மனதை.

உயரும் புருவத்தில்
உயர்த்துகிறாய்
ஆகாயத்துக்கு.

அரை செ.மீ. அதர விரிப்பில்
அலற வைக்கிறாய்.

நெற்றிச் சுருக்கலில்
நிம்மதியைப் பறிக்கிறாய்.

கடைக்கோடிக்
கோடும்
கண்களில்
கதற
வைக்கிறாய்.

காத்திருக்கிறேன்,
எப்போது என்னை என்னிடம்
தரப் போகிறாய்?



கே. பி. ஜனார்த்தனன்



## நெகிழி

நெகிழி வந்தபோது
பற்பல வகைகளில்
நமக்குப் பயன்பட்டது
குறித்து மகிழ்ந்தோம்.
மளிகைப் பொருட்கள்,
ஈரட்டி, திண்பண்டங்கள்
அனைத்தையும் அதனுள்
அடக்கப் பயன்பட்டது.
மழை பொழிந்தாலும்
நனையாமல் பாதுகாத்தது.
மழைக்குக் குடையாகவும்
பயன்பட்டது. ஆனால்
நாளடைவில் அதன்
பயன்பாடு சுகாதாரத்திற்கும்,
உடல் ஆரோக்கியத்திற்கும்
தீங்காக அமைய
காரணமாவது குறித்து
தற்போது பெரிதும்
வருந்துகிறோம்.
கால்நடைகள் மற்றும்
பிற விலங்கினங்கள்
அதை உணவாகக்
கருதி உட்கொண்டு
கிலோ கணக்கில் அதன்
வயிற்றில் மாட்டிக்கொண்டு
உடல்நலக்குறைவால்
சிக்குண்டு தவிப்பதும்,
சில யானைகள் அதனால்
மாண்டு போவதையும் கண்டு
மீளாத் துயரில் ஆழ்த்துவது
இன்றன்றோ தெரிகிறது.
கடல்வாழ் உயிரினங்களும்
அழிந்து கொண்டிருப்பது
பாவமன்றோ....
ஆபத்தை உணர்ந்து
நெகிழியை முற்றிலும்
அழிக்க இயலவில்லை.
இன்னும் தெருக்களில்
அங்கங்கே நெகிழிகள்
பரவிக்கிடக்கின்றன.
ஆனால் அது மண்ணை
மாசாக்கும் விஷமாகி,
மரங்களும் மிருகங்களும்
துன்பம் அனுபவிக்கின்றன.
நதிகளிலும் கடலிலும்
அது சேர்ந்து, நீரின்
அழகை கெடுக்கும் நெகிழி
குப்பைகள்.
இயற்கை நம்மிடம்
கெஞ்சுகிறது "நெகிழியை
குறைத்து பூமியை காப்போம்"
என்று. இனிமேலாவது
நாம் மாற்றம் செய்தால்
நாளை நல்லது நடக்கும்.
நெகிழி இல்லா உலகம்
நம்மால்
உருவாகி
மகிழ்ச்சி
பொங்கும்.



உ.மு.ந.ராசன்
கலாமணி
கோயம்புத்தூர்.

## வானியல் அறிவோம்!

நேரிசை வெண்பா!

மனிதகுலப்பாதுகாப்பை
மாண்பாய் உணர்த்தும்!
புனிதநாள் வானியல்
போற்றும்.. இனியநாள்

முன்கூட்டும் எச்சரிக்கை
முன்வந்தே செய்திடுவார்
பின்கவனம்
காண்பதற்கே பீடு!

நீர்நிலம் காற்றுடன்
நேர்ந்த மூன்றிலும்
ஆராய்ந்து பார்த்தால்
அவைகளின்... கூரான

தாக்கமே தாங்கித்
தகுதியை மீறியே
ஆக்கமே உள்ள தறி!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.

## தளிர்

இரண்டு முழம் அளவே
யுள்ள தளிர் ஒன்று – மலரை
முழம் போட்டுத் தருகிறது!

அரிச் சுவடி பயிலும் பருவம்
ஆடிப் பாடி திரியும் உருவம்;
எழுத்துக் கூட்டிப் படிக்கும்
தருணம் ஏனோ இந்த
வயதில் துயரம் ?

பொருளாதாரப்
புனைதலுக்காக மருங்கும்
விழிகள் மயங்குவ தென்ன?

இருளும் சுழலும் ஒன்
றிணைந்து – இந்த ஈர
நெஞ்சை இயக்குவதென்ன?

அருளும்
பொருளும்
நிறைந்த
மாந்தர்
– இவை
அடைக்கலம்
தந்து
அணைத்தா லென்ன?



எஸ். சந்திரசேகரன்
அமுதா செஞ்சிக்கோட்டை.

## "நெஞ்சமெலாம் நெருஞ்சி"

மண் மணம் பூண்ட
மருதநிலம் என் மங்கை!
மாலை தென்றல் மந்தகாசம்
தரும் கங்கை!
பொன்னாய் விளையும் எழில்
மின்னும் கழனி!
காலம் சாட்சி நின்ற
காதலியாய் நீ!

வெயில் தழுவும் வேளையில்
வெண்பனி போல
வேரோடு என் உள்ளம்
விலகாது நின்றாய்!
நெய்தல் இசையாய்
நெஞ்சத்தில் ஊறும்
நெல்வயல் நீயேயென்
நினைவின் தேவி!

பணி நிமித்தம் பறந்தேன்
வெகு தூரம், பட்டணக்
காடென்னைப் பிடித்துக்
கொண்டது,பணிச்சுமை
அழுத்தம் பிணியாய்
ஒட்டிக்கொள்ள,
பாவியாய்க் கிடந்தேன் நரக
நகரத்தில்!

திரும்பி வந்தேன் தேடியுன்
முகத்தை, தென்றல் கூட
இன்றென்னைத் தெரியாத
போல, கழனியெங்கும்
கான்கிரீட் கட்டிடங்கள்
களையற்று, மண்ணின்
நறுமணம் மறைந்த தெங்கே?

பிரிந்த காதலியாய்ப்
பசுமை போனது...
பிடித்த கைதான்
பின்வாங்கி விட்டது...
இருந்த இடத்தில்
இரும்பு காடு நின்றது...
என் இருதயம் மட்டும்
எரிகிறது ஏக்கத்தீயில்!

மிச்சமாய் உள்ளதே
மௌன நினைவுகள்,
மீளாத காதலின்
மீதிச் சுவடுகள்... நெஞ்சின்
அடியில் நீ வாழ்ந்தாலும்,
நிலத்தில்
நீயில்லை
நெஞ்சமெலாம்
நெருஞ்சி!



முகில்
தினகரன்
கோயமுத்தூர்.







**WANTED**

Needed female staff
to look after
children, patients.

Contact

9150989424




**WANTED**

Retd, VRS, Home Makers,
NRIs, Business Person

Contact

8248951872

**WANTED**

Site Supervisor required
for construction work in Ambattur



Contact:
8428872887










தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E

**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE







FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889



ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We provide
Targeted Leads
to grow your
buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale
Residential / Commercial
Plots Flats House
Villa Bungalows
Farm Land Ware Houses
Factory Sites Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
We Build Perfection
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், பூந்துறை கிராமம்
தமிழ்நாடு அரசு இந்துசமய அறநிலையத்துறைக்கு உட்பட்ட
அருள்தரும் பாகம்பிரியாள் உடனமர்
அருள்மிகு புஷ்பவனேஸ்வர சுவாமி
ஸ்ரீ அலமேலு மங்கை லக்ஷ்மி சமேத
ஸ்ரீ தாமோதரப் பெருமாள்
அருள்தரும் அங்காளம்மன்
ஆகிய திருக்கோவில்களின்
ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன
மஹா கும்பாபிஷேகம், மஹா சம்ப்ரோக்ஷணம்
எனும் திருக்குட நன்னீராட்டு
பெருவிழா அழைப்பிதழ்
பங்குனி 11-ஆம் நாள் 25.03.2026 புதன்கிழமை
நேரம் : காலை 5.45 மணிக்குமேல் 10.00 மணிக்குள்


Bhoopathy Bakery
BAKED EVERYDAY
BISCUIT, CAKE, BUN VARIETIES
WHOLESALE & RETAIL
98845 15409
No:11/16, Gandhi Nagar, E.H Road,
Tondiarpet, Chennai - 600 081
NOW AVAILABLE IN
100Kgs.com


Supreme
Car Wash & Detailing
REDEFINING CAR CARE
PREMIUM SERVICE
638364389 9840882711
Your car... our SUPREME finish


விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்ஒலக்கூர்
பசுமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு விசுவாவசு வருஷத்திய
பிரமோற்சவப் பத்திரிக்கை
அன்புடையீர் வணக்கம்.
குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப் பெருமான், மகிமை நிறைந்ததும், சித்தர்களும், ஞானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் கோ கிரி என்னும் திருக்கோயில் ஆகும்.
எழிலும், அருளும் நிறைந்த பசுமலையில் முருகப்பெருமான் ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி என்னும் திருநாமத்தோடு வீற்றிருந்து பக்தர்களின் இன்னல்களை களைந்து வாழ்வில் அனைத்து செல்வங்களையும் தந்து மேன்மையடையச் செய்கிறார் என்பது பக்தர்கள் வாயிலாகக் கண்ட நிதர்சனமான உண்மை.


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009

ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மிக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US 9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY · LOVE
HEALTH · FAMILY
BUSINESS · CAREER
MARRIAGE

ARG CONSTRUCTIONS
We Build Your DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us 9710348377

VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
(FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI

PREMIUM LAND SALE
NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
Fast Developing Area
Near Upcoming Airport
Excellent Appreciation Value
Suitable for Residential & Investment
Easy Road Access
PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO BUY OR SELL PROPERTY OR LAND?
+91 9884417843

Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

S.R Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம்
கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை
செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Euro Kids Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary · Unilevel · Matrix · Board · Generation · ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com



# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்









# தாலி பாக்கியம்



சகுந்தலா தன்னுடைய மகளோடு கோவிலுக்கு நடந்து போனாள்,
மகள் லதா அங்குமிங்கும் வேடிக்கை பார்த்தபடியே நடந்து வந்துகொண்டிருந்தாள்,
"ஏய் !எருமைமாடு பிராக்பாத்துக்கிட்டே வராத, யாராவது வந்து மோதிடப் போறாங்க? என்றாள் சகுந்தலா"
கோவிலுக்கு போகும் சந்து குறுகலாக இருந்ததால் நல்ல கூட்ட நெரிசலில் இருவரும் நடந்து போனார்கள் "
எதிரே டு வீலரில் மாஸ்க் அணிந்த இருவரும், வேகமாய் வந்தார்கள்,
சகுந்தலா பக்கமாக வண்டி நெருக்கமாய் வந்ததை அவள்கவனிப்பதற்குள்!!ஒருவன் தாலி செயினை அறுத்துக்கொண்டபடியே ,கபாலி வண்டிய வேகமாஒட்டு என சொல்வதற்குள் மாயமாய் மறைந்தார்கள்,
சகுந்தலா கழுத்தில் ரத்தம் சொட்டியபடியே அய்யோ" அய்யோ"யாராவது அவனைப் புடிங்களேன்! தாலிய அறுத்துக்கிட்டு ஓடறானே! எனகதறினாள்"
லதாவுக்கு மயக்கமே வந்துவிட்டது, கூட்டம் கூடி விட்டது, அடுத்தபக்கம் கபாலியும், அவன் கூட்டாளியும் தாலிய அறுத்தஇடத்திலோ்ந்து அஞ்சு கிலோமீட்டர்ல வண்டிய ,நிறுத்தி கார்ப்பரேஷன் பம்பில,கைகால்களை கழுவிவிட்டு தாலி செயினையும் கழுவினார்கள்" ரத்தக்கறை போனது
அப்படியே பழக்கமான வாடிக்கையான திருட்டு நகையை வாங்கும் சேட்டு கடைக்குப் போய் நகையை அடகு வச்சுக்கிட்டு பணம் கேட்டார்கள்!"
அப்போது கபாலியின் கூட்டாளிக்கு போன்வந்தது , ஏங்க, ஏங்க, நாந்தாங்க, பொன்னம்மா பேசறேன் எங்கய்யா இருக்க?உடனே வெல்லமண்டி மார்க்கெட்டுக்கு வா நம்ப மாப்ள மீது டேங்கர்லாரி மோதி ஸ்பாட்லயே,காலியாகிட்டாராம் ,என பதட்டமாக பேசினாள் கபாலியின் கூட்டாளி சேட்டுகடைலேயே மயக்கமானான்,
சேட்டுக்கடைக்கு எதிரே இருந்த மசூதியில் பாங்கு ஓதும் சத்தம் கேட்டது



# விடுகதை

| | |
|---|---|
| வெள்ளை ராஜாவுக்கு கறுப்பு உடை அது என்ன? | உழுந்து |
| முத்துக் கோட்டையிலே மகாராணி சிறைபட்டிருக்கிறாள். அவள் யார்? | நாக்கு |
| கூரை வீட்டைப் பிரிச்சா ஓட்டுவீடு! ஓட்டு வீட்டுக்குள்ள வெள்ளை மாளிகை !வெள்ளை மாளிகைக்கு நடுவில் குளம் !அது என்ன? | தேங்காய் |
| பேச்சுக் கேட்குது பேசுபவர் தெரியவில்லை. அது என்ன? | வானொலி பெட்டி |
| கந்தல் துணிக்காரி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்? | சோளப்பொத்தி |
| வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கிறார். அவர் யார்? | பாம்பு |

# நான் கண்ட கனவு

ரோட்டோரம் கிடந்த பாறை மேல் உட்கார்ந்து செல்போனை பார்த்துகிட்டு இருந்தேன்.

"டேய் தம்பி! இங்கே உட்காந்து என்ன செஞ்சிகிட்டு இருக்க?" குரல் வந்த திக்கைப் பார்த்தேன்.

முகம் முழுவதும் கட்டிக் கட்டியாகவும் ஜடா முடியுடன் ஒரே அழுக்காகவும் பல திக்குகளை பார்த்துக் கொண்டும் இருக்க, அதை பார்க்கவே படுபயங்கரமாகவும், அருவருப்பாகவும் இருந்தது அந்த உருவம்.

"கிட்டே வராதே! அங்கேயே நில்!" என ஒரு அதட்டு அதட்டினேன். அந்த உருவம் அப்படியே நின்றது.

"ஊரே அடங்கியிருக்க நீ மட்டும் ஏன் தனியே உட்கார்ந்து இருக்கே?" என்றது அந்த உருவம்.

"அரசாங்கமே எல்லோரையும் தனியா இருங்கன்னு சொல்லிட்டிருக்கு, அதான்!" என்றேன் நான்.



"அதுக்காக இப்படியா! வீட்ல அடங்கி கிடக்காம வெளியல வந்து நிக்கறே.
"ஆத்தா செஞ்சி போட்டத தின்னோமா முடிஞ்ச வேலையை செஞ்சோமான்னு கெடக்காம வெளியே வந்து திரியறியா!" என்று என்னை நோக்கி வர ஆரம்பித்தது அந்த உருவம்.
'என்னடாயிது வம்பாப்போச்சு! இங்கேயும் நிம்மதி போச்சே' என்று வீட்டுக்கு போய் அறை கதவை தாளிட்டு படுத்தேன்.

அந்த உருவம் என் முகத்தருகே வந்து மோதாமல் மறைந்தது.

திடுக்கிட்டு எழுந்தவனுக்கு அம்மா நின்றிருந்தது கொஞ்சம் ஆறுதல் அளித்தது எனக்கு.
"என்னடா! கொரோனா பேய் பாத்த மாதிரி நடுங்குற நான் தான் "உன்னை எழுப்பினேன். சாப்பாட்டு நேரத்தல என்ன தூக்கம் வேண்டியிருக்கு!" என்றாள் அம்மா.
உடம்பெல்லாம் வியர்த்து போயிருந்தது. நன்றாக கை கால் முகம் கழுவி சாப்பிட உட்கார்ந்தேன்.

தேங்காய் துவையல் வத்த குழம்பு சிணுங்காமல் சாப்பிட்டு எழுந்ததைப் பார்த்து அம்மாவுக்கு ஒரே ஆச்சரியம். தனக்குள் சிரித்துக் கொண்டே நகர்ந்தாள்.
எனக்கல்லவா தெரியும் 'நான் கண்ட கனவு'ம் அந்த பயங்கர உருவமும்.



# ஜோக்ஸ்

அந்த டாக்டருக்கு சொந்தக்காரங்கன்னு சொல்லிக்க யாருமே கிடையாது !

ஏன் ?

எல்லாருக்கும் அவருதான் ஆபரேஷன் பண்ணினாரு !

——————————————

என்னங்க... செருப்பு காலை கடிக்குது!

அப்ப மாலைல போட்டுக்கங்க!

——————————————
——
சார்... ஆறு வருஷத்துல நீங்க போட்ட பணம் இரட்டிப்பாகும்னு சொன்னீங்களே... என்ன ஆச்சு?

நிதி நிறுவனம் : இரட்டிப்பாகும்னு தானே சொன்னோம்.. திருப்பித் தர்றதா சொல்லலையே!

——————————————

என் பொண்டாட்டிய என்ன தான் செய்றது?

ஏன் என்ன பண்றாங்க?

நான் எது செஞ்சாலும் என் பொண்டாட்டி குறுக்கே நிக்கிறா.

கார் ஓட்டி பாரேன்.

——————————————
——
தலைவர் எதுக்காக எடை பார்க்கும் மிஷினை பக்கத்துலயே வச்சிருக்காரு?”

“அவரைத் தேடி வர்றவங்க கிட்டே அவரோட ‘வெயிட்’டை காண்பிக்கவாம்!

-------------------------
----
அந்த கட்சிக்குள்ள ஏகப்பட்ட கோஷ்டிங்க இருக்குன்னு எப்படிச் சொல்றே..?

ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருந்த தலைவரை, சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கச் சொல்லி ஒரு கோஷ்டி போராடுதே...

-------------------
டிராபிக் கான்ஸ்டபிள்:

யோவ் நடுரோட்டை விட்டு ஓரமா போய்யா. வண்டிக்காரனுங்க வந்து மோதிடப் போறானுங்க.



குடிகாரன்: என்னை ஓரமா போகச் சொல்லிட்டு நீங்க மட்டும் நடுரோட்டிலே நின்னா எப்படி.

————————————
————

“நான் ஒரு முட்டாள். உன்னைப் போய் கல்யாணம் பண்ணிக்கிட்டேனே?”

“அது கல்யாணத்துக்கு முன்னாடியே தெரியும்... அதனால தான் சம்மதிச்சேன்...!”

——————————
“டைம் இஸ் கோல்டுன்னு சொன்னா, நீ ஏன் ஒத்துக்க மாட்டேங்குற?”

“அதை அடமானம் வைக்க முடியாதே”

——————————————
—— “வெளிநாட்டிலிருந்து உன் பையன் என்ன வாங்கி வந்தான்” “நாலு செண்ட் தான்”

“ஏன்..ஒரு ஏக்கர் வாங்கிட்டு வரச் சொல்லி இருக்கலாமே...”

——————————————
——
கிரிக்கெட்டில் ரன் எடுக்காமல் போனால்

டக் அவுட்

ரயிலில் டிக்கெட் எடுக்காமல் போனால்

வித் அவுட்
——————————————
——

வீட்டில் கொசுவை கொல்லுவதற்கு

ஆல் அவுட்நீங்க இதை படிச்சிட்டு லைக் / கமெண்ட் கொடுக்காம போன
நான் மூடு அவுட்

இப்படிக்கு
பாசக்கார பய புள்ளைங்க சங்கம்




# பொது அறிவுப் பூங்கா



1) "இன்னா நாற்பது " என்னும் நூலை இயற்றியவர். "கபிலர்"
"இனியவை நாற்பதை" இயற்றியவர் "பூதஞ்சேந் தனார் "

2). ஜப்பான் நாட்டின் சுதந்திரத் தினம் ஏப்ரல் 29ஆம் நாள்.

3) முதன்முதலாக மின்சார ரயில் 1881 ல் ஜேர்மனியில் இயக்கப்பட்டது.

4). ஆசியாவின் மிகப்பெரிய ரோஜாப்பூத் தோட்டம் சண்டிகாரில் உள்ளது.

5). பேருந்தைக் கண்டுபிடித்தவர் "ஹென்றி போர்

6.) இந்திய வரைபடத்தை வரைந்தவர் "டா ஆன் வில்" என்னும் பிரஞ்சுக் காரர்.

7). காவிரி ஆறு தர்மபுரி மாவட்டத்தில் தமிழ்நாட்டிற்குள் வருகிறது.

8) "தென்னாட்டு காந்தி" என அழைக்கப்படுபவர் பேரறிஞர் அண்ணா.

9). "திருவண்ணாமலை" "தீபநகரம்" என்று அழைக்கப் படுகிறது.

10). பரணிக்கோர் "ஜெயங்கொண்டான்" என்ற சிறப்பைப் பெற்றுக்கொண்ட நூல் "கலிங்கத்துப் பரணி"



குடந்தை
**பரிபூரணன்.**

# நாங்களும் நல்லவர்களே..!



ஒரு காட்டில் நரிகளும் மற்ற விலங்குகளும் வாழ்ந்து கொண்டிருந்தன. அந்த காட்டில் நரிகள் என்றாலே ஏமாற்றுப் பேர்வழிகள் என்று பெயர் பெற்றிருந்தன. அதனால் அந்தக் காட்டுக்குள் இருக்கும் நரிகளை எல்லா விலங்குகளும் அடித்து விரட்டின. அதனால் நரிகள் அந்தக் காட்டை விட்டு வெளியேறி அடுத்த காட்டிற்குச் சென்றுவிட்டன.

இரண்டு தலைமுறைகள் கடந்துவிட்டது. மூன்றாவது தலைமுறையில் பரதன் என்ற இளம் நரி இருந்தது. அந்த நரி அவமானத்தை துடைத்து திரும்பவும் சொந்த காட்டில் நாம் வாழ வேண்டும். நம் இனத்தையும் சொந்த காட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று எண்ணியது.

அதற்காக பழைய காட்டிற்கு சென்றது. பரதனைக் கண்ட வயதான விலங்குகள் நரியை அடையாளம் கண்டு கொண்டு, இவன் இங்கு எதற்கு வந்தான் என்று முறைத்து பார்த்தனர். அவனிடம் யாரும் பேச வேண்டாம்! என்று இளைய தலைமுறைக்கு உத்தரவிட்டன.

எங்கள் இனத்தை சகுனி குணம் படைத்தவர்கள், கூட இருந்தே குழி பறிப்பவர்கள். தந்திரசாலிகள் என்று யாரோ கட்டிவிட்ட கதையை நம்பாதீர்கள். நாங்கள் மட்டும்தான் கெட்டவர்களா? மலர்களில் எல்லாமே மணமிக்கதா? மணமற்றவையும் கலந்துதான் உள்ளன. எங்களிலும் நல்லவர் இருக்கிறோம் என்று வாதம் செய்து விலங்குகளிடம் நியாயம் கேட்டது.

ஆனால் எல்லா விலங்குகளும் அதை ஏற்பதாக இல்லை. நீ இங்கிருந்து ஓடிப் போய்விடு! என்று மற்ற விலங்குகள் பரதன் நரியை விரட்டின. மனம் உடைந்த நரி, மலை மீதேறி கீழே விழுந்து உயிரை விட்டுவிட முடிவெடுத்தது.

அப்போது அங்கிருந்த குயில், நரி அண்ணே உங்கள் இனத்தின் அவப்பெயரை துடைக்க தானே புறப்பட்டு வந்தீர்கள்? ஒரு லட்சியத்தை சுலபமாக அடைய முடியாது. விலங்குகள் போற்றும்படி செய்து அவைகளின் நம்பிக்கையைப் பெற்றால் உங்கள் குறிக்கோள் வெற்றி பெறும். முதலில் முயற்சி செய்யுங்கள்! என்று கூறியது.

இதைக் கேட்ட நரி, நீ கூறுவதும் சரிதான் என்று கூறி தன் தற்கொலை முடிவை கைவிட்டு, புத்திசாலித்தனமாக செயல்பட முடிவெடுத்தது. இதற்காக வேடர்கள் வலை விரித்திருப்பதை முன்பே அறிந்து, அதை பறவைகளிடம் கூறி நன்மதிப்பைப் பெற்றது நரி. அதேபோல காலுடைந்த முயலை பத்திரமாக அதன் இருப்பிடத்திற்கு அழைத்து வந்து விட்டது. ஒரு மரத்தில் இருந்து தவறி விழுந்த குருவி குஞ்சை, அதன் கூட்டில் எடுத்து வைத்தது. இதைக் கண்ட தாய்ப்பறவை நரியை வாழ்த்தியது.

இதுபோல சின்னச் சின்ன உதவிகளை செய்து நரி கொஞ்சம் கொஞ்சமாக நற்பெயர் பெற்று வந்தது. ஒரு நாள் வேட்டைக்காரர்கள், பெரிய பள்ளம் வெட்டி இலை தழைகளால் மூடி வைப்பதை நரி பார்த்தது. அந்தப் பக்கமாக வந்த யானைக் கூட்டத்தை எச்சரிக்கை செய்து யானைகளை காப்பாற்றியது.

யானைக்கூட்டம் காட்டுக்கு ராஜாவான சிங்கத்திடம் நரி செய்த உதவியை சொல்லின. அதேபோல முயல், புறாக்கள் என அனைத்து பறவைகளும் தங்களுக்கு நரி செய்த நன்மையைக் கூறினர். இதைக்கேட்ட சிங்கராஜா, நரிகளை தங்கள் காட்டில் சேர்த்துக் கொள்வதாக முடிவெடுத்தது. இதைக் கேட்டதும் பரதன் சந்தோஷமாக தங்கள் வசிப்பிடத்திற்குச் சென்று, மற்ற நரிக்கூட்டங்களை அழைத்து வந்து தனது சொந்தகாட்டில் மகிழ்ச்சியாக வாழத் தொடங்கியது.

தத்துவம் :
உலகில் நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக அனைவரையும் தீயவர்கள் என்று நினைக்கக்கூடாது. அது நாம் செய்யும் பெரும் தவறாகும்.

# நல்ல நல்ல நட்பு பாப்பா!

கதை கேளு கதை கேளு
பாப்பா...
கருத்தாய் கதை கேளு பாப்பா!
நல்ல நல்ல கதை கேட்டா
காலம் பூரா நல்லபடியா வாழலாம்
பாப்பா!
நம்ம சங்ககாலப் பாடல்ல
நட்புக்கு எடுத்துக் காட்டா
பிசிராந்தையார்
கோப்பெருஞ்சோழன்
ரெண்டு பேரையுந்தான்
பெருமையாச் சொல்லி
பேருவகை கொள்ளுவாங்க...!
பாண்டிய நாட்டுப் பெருங்கவிஞர்
ஆந்தையார்
பிசிரென்னும் ஊருல பிறந்தாரு
...அதனாலே
பிசிராந்தையாரா ஆனாரு...!
சோழ நாட்டுப் பேரரசன்
கோப்பெருஞ்சோழன்
பிசிராந்தையாரோட
பாட்டுப்பெருமையக் கேட்டு
பரவசமானாரு...! புலவரு
பெருமான்பிசிராந்தையாரை
நேருல பாராமலேயே
நெறையப் பாசத்த
நெஞ்சில ஏத்தி வச்சி
நேசமா வளர்த்தாரு...
அறிவியல் வளராத
அந்தக் காலத்துல
சாதா போனும் கெடையாது..
ஸ்மார்ட் போனும் கெடையாது...!
அதனால தூது ஓலைத்
துணையாலே
தூய நட்ப வளர்த்தாங்க..
இப்படியா ரெண்டு பேரும்
இதயத்தால
இணைஞ்சி நின்னு
இலக்கியக் காதலப் புரிஞ்சாங்க...
கண்ணோடு கண்ணு
நோக்காமலே கனிஞ்ச
காதல் கோட்டைப் படத்தின்
காவியக் காதல் கதைக்கு
காரண மூலமே இந்த
ரெண்டு பேரோட
இணைபிரியா நட்பாத் தான்
இருந்திருக்கோணும்..
கதை கேளு கதை கேளு பாப்பா.
கருத்தாக் கதை கேளு பாப்பா!
நட்புக்குப் பேரு பெற்ற
அந்தச் சோழ மன்னனுக்கு
ரெண்டே ரெண்டு
ஆம்பளப் புள்ளைங்க...
அப்பா எறந்த பிறகு
அரசப் பதவிக்கு வரலாம்னு
நெனைக்காம அவசரப்பட்டாங்க...!
பதவி ஆசை வெறியில
பாவிப்பய புள்ளைங்க
பயங்கரவாதிகளா மாறினாங்க...
மண்ணாசை மயக்கத்துல
பெத்த அப்பனையே
பகையாளா ஆக்கினாங்க...
பாசமா வளர்த்தப் புள்ளைங்க
பதவி மோகத்தால
பாவியாப் போனாங்களேன்னு
பதறித் துடிச்சி அழுதாரு
பழிவந்து சேந்திடுமோன்னு...!
எத்தனையோ தடவைங்க



யோசிச்சி யோசிச்சிப்
பார்த்தாலும்
புண்பட்டுப் போன மனசுக்கு
பிரயோஜனப் படுறாப்புல
ஒரு வழியும் தோணல
உயிரை மாய்ப்பது தான்
ஒரே வழியென தோணியது..
பெருமைக்குரிய பெரும் புலவர்
பிசிராந்தையாரை
எண்ணி யெண்ணி
ராப்பூராத் தூங்காம
ரத்தக் கண்ணீர்
வடிச்சழுதான்
வள நாட்டு வேந்தன்!
சோழமன்னன் சோகமறிஞ்சி
மாசக் கணக்கா மனம் கலங்கி
பித்துப் பிடித்தாற் போலானார்
புலவர் பெருமானார்
பிசிராந்தையார்!
கதை கேளு கதை கேளு பாப்பா
கருத்தாக் கதை கேளு பாப்பா!
சங்கடத்துல உயிரைப் போக்குதற்கு
சங்க காலத்துல ஒரு
சம்பிரதாயவழி உண்டு பாப்பா...
உசுரு போகும் வரை
உண்ணாம உறங்காம
வடக்கே வந்து உக்காந்திடுவாங்க!
கோனுயர சிறந்து
கொடையோடு வாழ்ந்த
கோப்பெருஞ்சோழன்
பாழாய்ப்போன புள்ளைகளின்
பகை சீற்றம் தாங்காது
பரமனிடமே போய்ச் சேந்து
விடுவோமென்று
உறுதியாய் எண்ணி
வடக்கு திசை வந்து
உக்காந்து விட்டான்...!
பெருந்துணையாய்
உடனிருந்த பெருநற் கிள்ளி
பொத்தியாரையும்
பார்த்துச் சொன்னான்
உயிரை விடப் பெருசா
நான் என்றும் விரும்பும்
நல்ல நண்பர்
பிசிராந்தையார் எப்படியும்
இங்கே வந்து என்னோடு
சேந்திடுவாரு...
எனக்குப் பக்கத்துல
அவருக்கும் சேர்த்து
இன்னொரு இடம்
போட்டு வையுங்க...
இகலோகத்தில் இல்லையாயினும்
பரலோகத்திலாவது
பார்த்து மகிழ்வோம் நாங்கள்...,!
அந்தச் சோழன் சொல்லியவாறே
எல்லாம் நடந்ததுவே...!
பாண்டிய நாட்டில் இருந்து
பதறி ஓடோடி வந்து
உயிர் நண்பன் பக்கம்
உட்கார்ந்து உயிரையே விட்டாரு
அந்த உத்தமப் புலவரு...!
இந்தப் பூமி இருக்கும் வரை
இவர்களின் நட்புமேன்மை
இமயமலை மாதிரி
வளர்ந்தோங்கி வாழும் பாப்பா!
நீயும் இப்படி
நல்ல நல்ல நட்பு கொண்டு
நானிலம் போற்ற வாழ்ந்து காட்ட
வேண்டும் பாப்பா!

# மயிலும் அன்னப்பறவையும்...

பசுமை எழில் சூழ்ந்தக் காட்டின் நடுவே ஓர் அழகான குளம் இருந்தது. பல வண்ணப் பூக்களுடன் அழகாகக் காட்சியளிக்கும் குளத்தைச் சுற்றிப் பலவிதமான உயிரினங்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன.

அங்கு வசிக்கும் உயிரினங்களில் மயிலும் அன்னப்பறவையும் நண்பர்களாகப் பழகி வந்தன.

ஒருநாள் மயில் ஓர் அழகிய முத்து மாலையை அணிந்து வந்து அன்னப்பறவையிடம் காட்டி..இது என் அம்மா கொடுத்தது எப்படி இருக்கிறது என்று கேட்டது. முத்து மாலை மிகவும் அழகாக இருந்தது அன்னப்பறவையும் அதைப் பாராட்டி மகிழ்ந்தது. இருவரும் பேசி மகிழ்ந்து விளையாடினார்கள். சிறிது நேரம் கழித்து மயில் சென்று விட்டது.

அன்னப் பறவையும் தன் வீட்டிற்கு செல்ல நினைக்கும் பொழுது கீழே முத்துமாலைக் கிடந்தது. இது மயிலின் முத்துமாலை என்பதை அறிந்து கொண்டது. ஆனால் முத்துமாலை மிகவும் அழகாக இருந்ததால் அதனை மயிலிடம் கொடுக்க மனம் வரவில்லை. தன் வீட்டிற்கு எடுத்துச் சென்று வைத்துக் கொண்டது.

மறுநாள் மயில் முத்துமாலை காணவில்லை என்ற செய்தியை அன்னப்பறவையிடம் கூறியது. ஆனால் அன்னப்பறவை எதுவும் தெரியாதது போல என்னிடமும் அது போல் ஒரு முத்து மாலை இருக்கிறது. நானும் போட்டு வரலாம் என்று நினைத்திருந்தேன் என்று கூறி ஏதேதோ பேசிச் சமாளித்தது.

சிறிது நாட்கள் சென்ற பின் அன்னப்பறவை அந்த முத்துமாலையுடன் தன் வீட்டில் இருந்த நகைகளையும் போட்டுக் கொண்டு வந்தது.



என்னுடைய முத்துமாலை போல் இருக்கிறதே என்று மயில் கூறியவுடன்...

அதற்கு அன்னப்பறவை கோபமாக உன்னிடம் மட்டும் தான் முத்துமாலை இருக்குமா? எங்களிடம் இருக்காதா? என்னிடம் உன்னை விட நிறைய நகைகள் இருக்கிறது என்று கூறிக் கோபப்பட்டது. உன்னை விட என்னிடம் அதிக நகைகள் இருக்கிறது என்ற பொறாமை உனக்கு என்று கோபப்பட்டுக் குளத்தில் நீந்தச் சென்றது.

குளத்தில் தன்னை மறந்து மகிழ்ச்சியாக நீந்திக் கொண்டிருந்தது. நீந்தி விட்டு வெளியே வரும் பொழுது தான் தன் கழுத்தில் இருந்த நகைகள் அனைத்தும் காணவில்லை என்பதை அறிந்துப் பதறியது. என்ன செய்வது என்று தெரியாமல் தேடிப் பார்த்தது ஆனால் கிடைக்கவில்லை. சோகமாக வீட்டிற்குச் செல்லும் வழியில் பள்ளியில் சிங்கராஜா பாடம் நடத்திக் கொண்டிருந்தது அன்னப்பறவையின் காதில் விழுந்தது.

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா பிற்பகல் தாமே வரும்.

பிறருக்குத் தீங்கு விளைவித்துவிட்டோம் என்று ஒருவர் மகிழ்ந்து கொண்டிருக்கும்போதே, அதேபோன்ற தீங்கு அவரையே தாக்கும்.

மயில் இந்தக் குறளின் அர்த்தத்தைப் புரிந்து வருந்தியது. நான் மயிலை ஏமாற்ற நினைத்தேன் எனக்கே அது தீங்காக முடிந்து விட்டது.இனி யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்யக்கூடாது. ஏன்... மனதால் கூட நினைக்கக் கூடாது என்று முடிவெடுத்து மனத் தெளிவுடன் நடந்து சென்றது. அன்னப்பறவியின் தோற்றத்திற்கு ஏற்றார் போல் மனமும் தூய்மையானது.



முனைவர்
**உமாதேவி பலராமன்**
திருவண்ணாமலை.

# ராமன் மற்றும் பேசும் கிளி



யார் எது சொன்னாலும் உடனே நம்பி விடுவான் ராமன். ஒரு நாள் சந்தைக்கு அவன் போன போது ஒரு வியாபாரி ஒரு கூண்டுக்குள். கிளி ஒன்றை வைத்து விற்றுக் கொண்டிருந்தான். இந்தக் கிளி பேசும் கிளி என்றான்.


ராமனும் நூறு ரூபாய் கொடுத்து அந்தக் கிளியை வாங்கினான். வீட்டில் அதற்கு பேசப் பழக்கினான். ஒரு மாதம் ஆகியும் அந்தக் கிளி பேசவில்லை. அதை அவன் எடுத்துக்கொண்டு. தான் அதை வாங்கிய வியாபாரியிடம் சென்றான்.

அந்த வியாபாரியோ, அந்தக் கிளியை வாங்கி பரிசோதிப்பது போல பாசங்கு செய்து இந்த கிளிக்கு காது கேட்காது. அதனால் நீங்கள் சொல்வதைக் கேட்டும் அந்த கிளியால் பேச இயலவில்லை என்று சொல்லி வேறு ஒரு கிளியைக் காட்டி இதை வாங்கிக் கொள்ளுங்கள் இது பேசும் என்றான்.

ராமன் மீண்டும் ஒரு நூறு ரூபாய் கொடுத்து அந்தக் கிளியை வாங்கினான். அதற்கும் பேசக் கற்றுக்கொடுத்தான். அதுவும் பேசவில்லை. அப்போது ராமனின் நண்பர் ஒருவர் வந்தார். அவரிடம் ராமன் நடந்ததைக் கூறினான்.

உடனே அந்த நண்பர் அடடா! என்னை முதலிலேயே கேட்டிருக்கலாமே! அந்த வியாபாரி ஒரு பொய்யன். பொய் சொல்லி வியாபாரம் செய்வதே அவன் பிழைப்பு என்றான். ராமன் தான் ஏமாற்றப்பட்டதை எண்ணி மனம் வருந்தினான். யார் என்ன சொன்னாலும் அதைக் கேட்காமல் நமது அறிவை உபயோகித்து அது சாத்தியமா. என யோசித்து செயல்படவேண்டும்.

# இறைவன் படைப்பு



ஒரு காட்டில் ஒரு முயல் ஓடி விளையாடிக் கொண்டிருந்தது. அதை பார்த்துக் கொண்டிருந்த ஆமை. நம்மால் ஏற்கனவே வேகமாக போக முடியாது இதில், முதுகில் வேறு பாரமாக ஓடும். முயலைப் பார்த்து பொறாமைப்படுவதில் பயன் இல்லை என்னை இப்படிப் படைத்ததற்காக ஆண்டவனைத்தான் நொந்து கொள்ளவேண்டும் என ஆமை எண்ணியது.

அப்போது அன்று இறை எதுவும் கிடைக்காததால் அலைந்து கொண்டிருந்த சிங்கம், விளையாடிக்கொண்டிருந்த முயலைப்பிடிக்க பாய்ந்தது. முயல் ஒரே ஓட்டமாக ஓடி ஒளிந்தது. ஆமையோ, தன் கூட்டுக்குள் முடங்கியது.

சிறிது நேரத்தில் சிங்கம் சென்றுவிட முயல் பயத்தில் அவ்விடம் வந்ததும், ஆமை தன் கூட்டிலிருந்து தலையை நீட்டிப் பார்த்தது. ஒவ்வொரு விநாடியும் மரணபயத்திலேயே முயல் வாழ்நாளை கழிக்க வேண்டியிருக்கையில், விலங்குகளிடமிருந்து காத்துக்கொள்ள தன் முதுகிலேயே தனக்கு கூட்டையும் கொடுத்த இறைவனை நிந்தித்தது எவ்வளவு தவறு என உணர்ந்தது.

இறைவன் படைப்பில் ஒவ்வொரு உயிர்க்கும் ஒவ்வொரு தனித்தன்மை உண்டு. அந்த தனித்தன்மையை உபயோகித்து ஆபத்துக் காலங்களில் தப்பிக்கலாம். இதுவே இறைவன் கருணை என்பதை உணர்ந்தது ஆமை.

**A.S.Govinda rajan**
Kodambakkam, Chennai.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்
whatsapp No
8122664699

## இஸ்ரேல் கடும் எச்சரிக்கை



அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் தளங்கள் மீது ஈரான் நடத்திய ஏவுகணை தாக்குதலை தொடர்ந்து, ஐரோப்பிய நாடுகளுக்கு இஸ்ரேல் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஈரானின் ஏவுகணைகள் தற்போது 4,000 கி.மீ தொலைவு வரை பாயும் திறன் கொண்டவை என்பதால் லண்டன், பாரிஸ் மற்றும் பெர்லின் நகரங்களுக்கு நேரடி அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. முன்னதாக தனது ஏவுகணை வீச்சு 2,000 கி.மீ மட்டுமே என ஈரான் கூறிவந்தது குறிப்பிடத்தக்கது.

## ஈரானுக்கு தங்கம், வெள்ளி மற்றும் பணத்தை நன்கொடை



மத்திய கிழக்கு போருக்கு மத்தியில், ஜம்மு-காஷ்மீரின் புட்காம் பகுதி மக்கள் ஈரானுக்கு ஆதரவாக தங்களது தங்கம், வெள்ளி மற்றும் பணத்தை நன்கொடையாக வழங்கும் வீடியோ சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

புட்காம் MLA முன்தாசிர் மெஹ்தி, ஈரானுக்கு தனது ஆதரவை வெளிப்படுத்தியதோடு, நிவாரண பணிகளுக்காக தனது ஒரு மாத சம்பளத்தை நன்கொடையாக வழங்குவதாகவும் அறிவித்துள்ளார்.

"மனிதாபிமானமே அனைத்திலும் முக்கியம்" என்று இது குறித்து மெஹ்தி தனது X பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## புதிய விதி ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வரும்.

திரும்பப் பெறும் நடைமுறையில் மாற்றங்களை அறிவித்துள்ளது.




இந்த புதிய விதி ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வரும். உறுதி செய்யப்பட்ட டிக்கெட்டை ரயில் புறப்படுவதற்கு 72 மணி நேரத்திற்கு முன் ரத்து செய்தால், குறைந்தபட்ச ரத்து கட்டணம் மட்டுமே பிடித்தம் செய்யப்பட்டு, மீதமுள்ள தொகை திரும்ப வழங்கப்படும். இதன் மூலம் காலியாகும் இருக்கைகளைக் குறைத்து, மற்ற பயணிகளுக்கு அவை கிடைக்கும் வாய்ப்பை அதிகரிக்க ரயில்வே நிர்வாகம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மார்ச் 30ஆம் தேதி வேட்பு மனு தாக்கல்




நாம் தமிழர் கட்சியின் 234 தொகுதி வேட்பாளர்கள் மற்றும் மாற்று வேட்பாளர்கள் வரும் மார்ச் 30ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் செய்யவுள்ளனர். சட்டப்பேரவை தேர்தலையொட்டி கடந்த பிப்ரவரி மாதமே நாதகவின் 234 வேட்பாளர்களும் திருச்சி மாநாட்டில் அறிமுகம் செய்யப்பட்டனர். 117 ஆண்கள், 117 பெண் வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில், தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்த சூழலில் வரும் 30ஆம் தேதி நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்பட 234 பேரும் வேட்பு மனு தாக்கல் செய்கின்றனர்.




## ஸ்ரீராமநவமி உற்சவம்



திருநின்றவூர் ஸ்ரீராமநவமி உற்சவம் ஐந்தாம் நாள் நிகழ்வு

## சிறப்பு அலங்காரத்தில் நம் வாசவி அம்மன்

**திருப்பூர் மார்ச் 25:**

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பங்குனி மாதம் மங்கள வாரம் நன்னாளில் நம் வாசவி அம்மன் சிறப்பு அலங்காரத்தில் மற்றும் ஆலயத்தில் அமைந்திருக்கும் முருகப்பெருமானுக்கு பங்குனி மாதம் வளர்பிறை சஷ்டியை முன்னிட்டு வள்ளி, தெய்வானை, முருகர் வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி.





தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்வு..!






சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மாணவர்கள் தேர்தல் விழிப்புணர்வு கோலம் வரைந்து பொது மக்களிடையே சட்டமன்ற பொதுத்தேர்தல் வாக்குப்பதிவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

மேலும் வாக்கு பதிவு, ஜனநாயக கடமை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஏற்பாடுகளை தலைமையாசிரியர் ச.கிறிஸ்து ஞான வள்ளுவன். இடைநிலை ஆசிரியை அ.தாஹிரா ஆகியோர் செய்திருந்தனர்.

## ஒப்பந்தம் கையெழுத்து



சட்டப்பேரவை தேர்தலையொட்டி திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று (மார்ச் 24) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா, பொருளாளர் சுதீஷ் எம்.பி., முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. ஏற்கனவே திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு 1 ராஜ்யசபா சீட் வழங்கப்பட்ட நிலையில், சுதீஷ் போட்டியின்றி தேர்வானது குறிப்பிடத்தக்கது.



மாநிலங்களின் தற்போதைய மக்களவை தொகுதி அளவு எந்த நிலையிலும் மாற்றப்படகூடாது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர், நாடாளுமன்றத்தில் மகளிருக்கு இடஒதுக்கீடு கொடுப்பதை எந்த நிபந்தனையுமின்றி முழுமையாக ஆதரிக்கிறேன். அதே வேலையில் நியாயமான தொகுதி மறுவரையறை என்னும் உரிமையை விட்டுத்தரமாட்டோம். தற்போதுள்ள விகிதாசாரத்திலேயே மாநிலங்களின் தொகுதி அளவு தொடர்வது, அது அடுத்த 30 ஆண்டுகளுக்கு மாற்றப்படாது என்ற உறுதிமொழி வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

## மாணவர்கள் சேர்க்கை புதிய சாதனை



மத்திய அரசின் (UDISE) அறிக்கையின்படி, தமிழக மேல்நிலை பள்ளிகளில் மாணவியர் சேர்க்கை 76 சதவீதமாகவும், மாணவர்கள் சேர்க்கை 71 சதவீதமாகவும் உயர்ந்து புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. இதர பெரிய மாநிலங்களை விட தமிழகம் முன்னிலை பெற்றுள்ள நிலையில், புதுமை பெண் மற்றும் தமிழ் புதல்வன் போன்ற அரசின் திட்டங்களே இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான், உயர் ரக எரிபொருள் விலையை 200 சதவீதம் உயர்த்தியுள்ளது



ஹோர்முஸ் நீரிணையில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலுக்கு மத்தியில் பாகிஸ்தான், உயர் ரக எரிபொருள் விலையை 200 சதவீதம் உயர்த்தியுள்ளது. அதன்படி, சொகுசு வாகனங்களில் பயன்படுத்தப்படும் ஒரு லிட்டர் உயர் ஆக்டேன் எரிபொருளின் விலை பாகிஸ்தான் ரூபாய் மதிப்பில் 100 ரூபாயில் இருந்து 200 ரூபாய் அதிகரித்து, 300 ரூபாயாக உயர்த்த பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் ஒப்புதல் அளித்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

ஆக்டேன் எரிபொருள் விலை உயர்வால் பொது போக்குவரத்து கட்டணங்கள் மற்றும் விமானப் பயண செலவுகள் பாதிக்கப்படாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## 151 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல்



தமிழகத்தில் இதுவரை தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய அதிரடி சோதனையில் 151 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஏப்ரல் மாதம் 23-ம் தேதி சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்வதை தடுக்க தமிழகம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினர் தீவிரமாக கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

## வள்ளி -தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியர் சர்வ அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலிப்பு!



**வேலூர், மார்ச் 25:**

வேலூர் மாவட்டம், காட்பாடி சித்தூர்- கடலூர் தேசிய நெடுஞ்சாலையில் ஓடைபிள்ளையார் கோயில் அருகில் வள்ளி-தேவசேனா சமேத சுப்பிரமணியர் ஆலயம் உள்ளது. இந்த ஆலயத்தில் சஷ்டி விரதத்தை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடந்தது.

இதை தொடர்ந்து வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் சர்வ அலங்காரத்தில், மலர் அலங்காரம் இணைத்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். பூஜைக்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகம் செய்திருந்தது.

பூஜையில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது.

## தபால் வாக்கு அளிக்க விண்ணப்ப படிவம் விநியோகம்



**திருவண்ணாமலை மார்ச் 25:**

திருவண்ணாமலை மாநகராட்சி வேங்கிக்கால் ஜெய்பீம் நகரில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு தபால் வாக்கு அளிக்க விண்ணப்ப படிவம் விநியோகம் செய்யும் பணியினை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் (ம) மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு க. தர்ப்பகராஜ் இ.ஆ.ப.அவர்கள் விண்ணப்ப படிவம் விநியோகம் செய்யும் பணியினை ஆய்வு மேற்கொண்டு விண்ணப்ப படிவத்தை வழங்கினார்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் மாணவிகள் அணிவகுப்பு




சென்னை ஆர் கே நகர் தண்டையார்பேட்டையில் அமைந்துள்ள அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் மாணவிகள் சுமார் 60 பேர் தண்டையார்பேட்டையில் உள்ள திருவள்ளுவர் நகர் குடியிருப்போர் சங்கத்துடன் இணைந்து திருவள்ளுவர் நகரில் என் எஸ் எஸ் கேம்ப் நடத்துவதற்காக நேற்று காலை10.30. மணி அளவில் கல்லூரி வளாகத்தில் இருந்து திருவள்ளுவர் நகர் வரை மாணவர்களின் அணிவகுப்பை துவக்கி வைத்தார்கள்.

அச்சமயம் திருவள்ளுவர் நகர் குடியிருப்போர் சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அணிவகுப்பை முன் நின்று நடத்திச் சென்று NSS கேம்ப் இன்று இனிதே துவங்கப்பட்டுள்ளது இந்த கேம்ப் 24 ஆம் தேதி முதல் 30 ம் தேதி வரை இந்த நகரில் தூய்மை பணி, கல்வி விழிப்புணர்வு தூய்மை விழிப்புணர்வு, மரம் நடுதல் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான நிகழ்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

## தேர்தல் காவல் பார்வையாளர் தேர்தல் பணிகள் குறித்து ஆய்வு!



**வேலூர், மார்ச் 25:**

வேலூர் மாவட்டம், காட்பாடி கல்புதூர் பகுதி, தமிழக ஆந்திர மாநில எல்லை பகுதி கிறிஸ்டியான் பேட்டை மற்றும் மாணவியர் சமூக நல விடுதி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் தேர்தல் காவல் பார்வையாளர் (POLICE OBSERVER) ADGP கவுஸ்துப் சர்மா தேர்தல் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அவருடன் பல அரசு அலுவலர்கள் உடனிருந்தனர். அப்போது அந்த வழியாக சென்ற வாகனங்களில் திடீர் சோதனையும் மேற்கொண்டனர்.

## பேசி தீர்வு காண கால அவகாசம்



**சென்னை, மார்ச் 25:**

தொகுதி பங்கீடு தொடர்பாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை மீண்டும் நேரடியாக சந்தித்து பேசி முடிவெடுப்பது என செயற்குழு கூட்டத்தில் தீர்மானித்துள்ளதாக சிபிஎம் மாநிலச் செயலாளர் சண்முகம் தெரிவித்தார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதல்வரை சந்தித்த பிறகுதான் தொகுதி ஒதுக்கீடு ஒப்பந்தம் எப்போது கையெழுத்தாகும் என்பதை சொல்ல முடியும் என்று கூறினார். மேலும், கூட்டணியில் நிறைய கட்சிகள் இருப்பதால் ஒவ்வொரு கட்சியுடனும் பேசி தீர்வு காண கால அவகாசம் தேவைப்படும் என்பதால், அதனை தாங்கள் இழுபறியாக நினைக்கவில்லை என்றும் சண்முகம் விளக்கம் அளித்தார்.



வரும் புதன்கிழமை முதல் தமிழ்நாட்டில் வெப்பநிலை அதிகரிக்கக்கூடும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

# சுற்றுலா: மிஸ் பண்ணக்கூடாத சுற்றுலா தலங்கள்

### 1. கேர்ன் ஹில் Cairn Hill Ooty

ஊட்டியில் இருக்கும் இந்த இடம் அடர்ந்த காடுகள் மற்றும் இயற்கை சூழலில் அமைந்த அமைதியான சுற்றுலாத் தளம். மரங்களுக்கு நடுவே அமைக்கப்பட்ட தொங்கும் பாலம் வித்தியாசமான அனுபவத்தை தரும். இயற்கையின் அழகு நிறைந்த இந்த இடத்தில் நடந்து சென்று அமைதியாக ரசிக்கலாம்.



### 2. வால்பாறை Valparai







பொள்ளாச்சிக்கு அருகில் உள்ள ஆனைமலை மலைத்தொடரில் அமைந்துள்ள வால்பாறை பசுமை நிறைந்த இடம். தேயிலை மற்றும் காபி தோட்டங்கள் நிறைந்த இந்த மலைப்பகுதியில் 40 கொண்டை ஊசி வளைவுகள் (HAIRPIN BENDS) உள்ள சாலை பயணம் செம்ம INTERESTING-ஆ இருக்கும்.

கடல் மட்டத்திலிருந்து உயரத்தில் இருப்பதால் வருடம் முழுவதும் கிளைமேட் சூப்பராக இருக்கும். வனப்பகுதி என்பதால் வனவிலங்குகளை இயற்கையாக காணும் வாய்ப்பும் கிடைக்கும்.

### 3. பூம்பாறை – Poombarai

கொடைக்கானலுக்கு அருகில் அமைந்துள்ள இந்த மலை கிராமம் இயற்கை எழிலால் மெய்சிலிர்க்க வைக்கும். கூட்ட நெரிசல் குறைவாக இருப்பதால் அமைதியாக சுற்றிப் பார்க்க விரும்புபவர்களுக்கு இது மிகச்சிறந்த இடம்.பசுமை மலைகள், மேகங்கள், வியூ பாயிண்ட்கள் என எங்க பார்த்தாலும் அழகு தான். புகைப்பட ஆர்வலர்களுக்கும் செல்ஃபி லவர்ஸ்க்கும் இது PERFECT SPOT.

### 4. மசினகுடி – Masinagudi

நீலகிரி மாவட்டத்தில், ஊட்டிக்கு அருகில் உள்ள அமைதியான வனவிலங்கு சுற்றுலாத் தளம். இது முதுமலை புலிகள் காப்பகத்தின் எல்லையில் உள்ளது. இயற்கை ஆர்வலர்கள், WILDLIFE PHOTOGRAPHERS மற்றும் TREKKING LOVERS-க்கு இது மிகவும் ஏற்ற இடம். ஜீப் சவாரி, பறவைகள் பார்ப்பது, யானை சவாரி போன்றவை இங்கு பிரபலமானவை. சாலை பயணத்தின்போது வனவிலங்குகளை காணும் வாய்ப்பும் கிடைக்கும்.

### 5. சிறுமலை – Sirumalai

நத்தம் சாலையில் அமைந்துள்ள இந்த மலைப்பகுதி கோடைக்காலத்தில் குளிர்ச்சியான சூழலை தரும் ஒரு HIDDEN GEM. கூட்டம் குறைவாக இருப்பது இதன் பெரிய PLUS POINT. மழைக்காலங்களில் இது இன்னும் பசுமையாக மாறி கண்களை கவரும். பேருந்து வசதி இருந்தாலும், நம்ம காரில் போனால் முழு அழகையும் ரசிக்க முடியும்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## தமிழ்நாடு முழுவதும் டி-சேவா மையங்கள் தொடங்குவதற்கான பயிற்சி: விண்ணப்பங்கள் வரவேற்பு!



டி-சேவா சென்டர் தமிழ்நாட்டின் அனைத்து நகரங்கள், மாவட்டங்கள், மண்டல்கள் மற்றும் ஊராட்சிகளில் டி-சேவா ஆன்லைன் மற்றும் திறன் மேம்பாட்டு மையங்களை நடத்துவதற்கான பயிற்சிக்கு ஆர்வமான தொழில்முனைவோர் மற்றும் வேலைவாய்ப்பின்மையினோரிடமிருந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பங்களை வரவேற்கப்படுகிறது.

புதிய பான் அட்டைகள் தொடர்பான விண்ணப்பங்கள் மற்றும் திருத்தங்கள், பேருந்து, ரயில் மற்றும் விமான டிக்கெட்டுகள், வங்கிப் பண பரிவர்த்தனைகள், ஆதார்ப் பாவனையால் பண பரிமாற்றம், மைக்ரோ ஏடிஎம் சேவைகள், பண வைப்பு, சுகாதாரம், இருசக்கர வாகனங்கள் மற்றும் கார் காப்பீடுகள், நிலுவை கட்டணங்கள், 1000-க்கும் மேற்பட்ட திறன் மேம்பாட்டு பாடநெறிகளில் ஆன்லைன் பயிற்சி வகுப்புகளுக்கான பதிவு, 500- க்கும் மேற்பட்ட திறன்களுக்கு திறன் சான்றிதழ் தேர்வுக்கான பதிவு, 100-க்கும் மேற்பட்ட அரசுத் தேர்வுகளுக்கான மாக் தேர்வு பதிவு மற்றும் பிற ஆன்லைன் சேவைகளை பயனாளர்களுக்கு வழங்கலாம்.

வேறுபட்ட ஆன்லைன் சேவைகள் வழங்குவதன் மூலம் பயிற்சி பெறுவோர் தனித்திறன் பெற்று தொழில் தொடங்கவும் முடியும். டி-சேவா சென்டர் தமிழ்நாட்டில் 5000 தொழில்முனைவோர் மற்றும் வேலைவாய்ப்பின்மையினருக்கு சுயத்தொழில் வாய்ப்புகளை வழங்கவும் மற்றும் 15 லட்சம் மாணவர்கள் மற்றும் வேலைவாய்ப்பின்மையினர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கவும்தான் இலக்கு வைத்துள்ளது. www.tsevaonline.com இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: 31.3.2026. தகவல் அரியவதற்கான தொலைபேசி எண்: 8179955744

# தேர்தல் செலவின பார்வையாளர்கள் வருகை




**புதுக்கோட்டை, மார்ச் 25:**

தமிழகசட்டமன்றத்தேர்தலை முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தேர்தல் செலவின பார்வையாளர்கள் வருகை புரிந்துள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான மு.அருணா தெரிவிக்கையில், "கந்தர்வகோட்டை (தனி) மற்றும் விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல் செலவின பார்வையாளரான அமிட்குமார் நிக்கல்ஜி-யை 9345301791 என்ற அலைபேசி எண்ணிலும், புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்கு வி.விவேகானந்தா ரெட்டியை 9345005278 என்ற எண்ணிலும், திருமயம் மற்றும் ஆலங்குடி தொகுதிக்கு எரிக் சி. லல்லாவாம்புயாவை 9361378750 என்ற எண்ணிலும், அறந்தாங்கி தொகுதிக்கு நகஹன்யுய் ஜிமிக்குவை 9345478824 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள், தேர்தல் நடத்தும் முறைகள், தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக ஏதேனும் புகார் இருப்பின் தேர்தல் ஆணை விதிமுறைகளுக்கு உட்பட்டு தேர்தல் பொதுப் பார்வையாளர்களிடம் புகார் அளிக்கலாம்" என்றார்.

# மரக்கன்றுகள் வழங்கி நூறு சதவீதம் வாக்களிக்க விழிப்புணர்வு



**பெரம்பலூர், மார்ச் 25:**

தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தலில் 18 வயது நிரம்பிய அனைவரும் தவறாது நூறு சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியில், மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான ந. மிருணாளினி, வாக்காளர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும், பழைய பேருந்து நிலையத்தில் பழக்கடைகள் வைத்திருக்கும் வியாபாரிகளிடமும் மரக்கன்றுகளை வழங்கி சட்டமன்ற தேர்தலில் தவறாது வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்தினார். பின்னர், வீடுகளுக்கு வழங்கப்படும் எரிவாயு உருளைகளில் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து விளக்கும் வாசகங்கள் மற்றும் தேர்தல் நாள் உள்ளிட்ட தகவல்கள் அடங்கிய ஒட்டுவில்லைகளை அவர் ஒட்டினார். பொதுமக்கள் 200-க்கும் மேற்பட்டோர் "100 சதவீதம் வாக்களிப்போம்", "எனது வாக்கு எனது உரிமை", "என் வாக்கு விற்பனைக்கு அல்ல" உள்ளிட்ட வாசகங்ளை அடங்கிய பாதகைகளை கையில் ஏந்தி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் க. கண்ணன் மற்றும் பெரம்பலூர் தேர்தல் நடத்தும் அலுவலர் மு. அனிதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# குலுக்கல் முறையில் வாக்குப்பதிவு இயந்திரங்கள்



**பெரம்பலூர், மார்ச் 25:**

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தலுக்காக, முதல்நிலை சரிபார்ப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு, மாவட்ட ஆட்சியரக மத்திய காப்பறையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள 1,416 வாக்குப்பதிவு கருவிகள், 930 கட்டுப்பாட்டு கருவிகள், 934 வாக்குப்பதிவை சரிபார்க்கும் இயந்திரங்கள் ஆகியவற்றை பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதிக்கும், குன்னம் சட்டமன்ற தொகுதிக்கும் கணினி குலுக்கல் முறையில் பிரித்தளிக்கும் நடவடிக்கை மார்ச் 23 அன்று முற்பகல் 11 மணிக்கு மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில், பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மேற்கண்டவாறு சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்தளிக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அவைகளின் பதிவெண் வாரியான பட்டியல், அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும். இவ்வாறு பிரித்தளிக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் உடனடியாக பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதிக்காக, பெரம்பலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலும், குன்னம் சட்டமன்ற தொகுதிக்காக, வேப்பூர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும் அமைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் காப்பறைகளுக்கு பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டு, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் கண்காணிப்பு மற்றும் காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் மூடி சீலிடப்படும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சட்டமன்ற தொகுதி வாரியாக கணினி வழியில் பிரித்தெடுப்பது குறித்து விரிவான வழிமுறைகள், இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் குறித்த கையேட்டில் https://www.eci.gov.in/evm-vvpat வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

# புதிய எதிர்காலத்தை எழுதிய முதல் கையெழுத்து: முதல்வர் பெருமிதம்

**சென்னை, மார்ச் 25:**

"விடியல் பயணம் திட்டம் புதிய எதிர்கா லத்தை எழுதிய முதல் கையெழுத்து" என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தனது 'எக்ஸ்' தளத்தில், "தமிழ் நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் விடியல் பயணத் திட்டம் மார்ச் 1 வரை மொத்தம் 897.82 கோடி பயணங்களை எட்டியுள் ளது. 7,712 விடியல் பேருந்துகளில் 2021-22 ஆண்டில் 95.86 கோடி பயணங்களாக தொடங்கி, 2025-26 ஆண்டில் 235.14 கோடி பயணங்களாக உயர்ந்துள்ளது. இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் செயல் படுத்தப்பட்ட இத்திட்டம் இப்போது பிற மாநிலங்களாலும் பின்பற்றப்படுகிறது. மகளிர் மட்டுமின்றி திருநர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளும் இத்திட்டத்தில் பயன்பெறுங்கள். திமுக ஆட்சியில் இத்திட்டம் மேலும் மேம்படுத்தப்படும்" என தெரிவித்துள்ளார்.

# தேமுதிகவுக்கு எத்தனை தொகுதிகள்?

**சென்னை, மார்ச் 25:**

தேமுதிக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் மார்ச் 23 அன்று நடைபெற உள்ளது. இதில் தேர்தல் தொடர்பாகவும், கூட்டணித் தொகுதிப் பங்கீடு தொடர்பாகவும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் ஆலோசிக்க உள்ளார். இந்த தேர்தலில் திமுக கூட்டணியில் தேமுதிக இடம்பெற்றுள்ளது. கூட்டணியில் தேமுதிகவுக் கான தொகுதிகளின் எண்ணிக்கை மற்றும் எந்தெந்தத் தொகுதிகள் ஒதுக்கப்படும் என்பது குறித்து திமுக-தேமுதிக பேச்சுவார்த்தைக்குப் பிறகு அறிவிக்கப்படவுள்ளது.

# சுகாதாரத் துறை அறிவுறுத்தல்

**சென்னை, மார்ச் 25:**

சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பறவை காய்ச்சல் பரவும் நிலையில் வழிமுறை களை பின்பற்ற சுகாதாரத் துறை ஆணையிட்டுள்ளது. கிண்டி சிறுவர் பூங்காவில் உயிரிழந்த பறவைகளை ஆய்வு செய்ததில் பறவை காய்ச்சல் இருந்தது உறுதி செய்யப்பட்டது. முழுமையாக சமைக்கப்படாத, சரிவர சமைக்கப்படாத முட்டை, இறைச்சி வகைகளை உண்பதை தவிர்க்க வேண்டும். இறைச்சிக் கழிவுகளை பொது வெளியில் கொட்டக் கூடாது என அறிவுறுத்தியுள்ளது.

# அரைவைக்காக ஓசூருக்கு 2000 டன் நெல் அனுப்பி வைப்பு

**தஞ்சாவூர், மார்ச் 25:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் விளைவிக்கப்படும் நெல், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் அரைவைக்காக அனுப்பப்பட்டு, பொது வினியோகத் திட்டத்தின் கீழ் அரிசி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இது தவிர, தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரைவை ஆலைகளுக்கும் அனுப்பப்படும். அதன்படி சனிக்கிழமை தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு கொள்முதல் நிலையங்கள், சேமிப்பு கிடங்குகளில் இருந்து 2,000 டன் நெல் மூட்டைகள் ஏராளமான லாரிகளில் தஞ்சை ரயில் நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டன. பின்னர் சரக்கு ரயிலில் 2,000 டன் நெல் ஏற்றப்பட்டு அரைவைக்காக ஓசூருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# போர் சூழலால் முட்டை ஏற்றுமதி பாதிப்பு: நாமக்கல்லில் பண்ணையாளர்களுக்கு ரூ.144 கோடி இழப்பு



நாமக்கல், மார்ச் 25:

நாமக்கல் மண்டலத்தில் 1,200-க்கும் மேற்பட்ட முட்டைக்கோழிப்பண்ணைகள் உள்ளன. இவற்றில் 8 கோடி முட்டையின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் தினசரி 6 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவற்றில் துபாய், குவைத், கத்தார், ஓமன், பக்ரைன் போன்ற வளைகுடா நாடுகள் மற்றும் ஆப்பிரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு கப்பல்களில் நாள் ஒன்றுக்கு 80 லட்சம் முட்டைகள் கன்டெய்னர்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

இதற்கிடையே கடந்த மாதம் 28-ந் தேதி முதல் அமெரிக்கா-ஈரான் இடையே போர் நடைபெற்று வருகிறது. இதையொட்டி குவைத், துபாய் உள்ளிட்ட நாடுகளில் உள்ள அமெரிக்க தூதரகங்கள் மற்றும் அமெரிக்க நிலைகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் அங்குள்ள விமான நிலையங்கள், துறைமுகங்கள் மூடப்பட்டு உள்ளன.

இதன் காரணமாக நாமக்கல் மண்டலத்தில் இருந்து முட்டை ஏற்றுமதி அடியோடு பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் தினசரி 80 லட்சம் வீதம் முட்டைகள் தேங்கி வருகின்றன. எனவே தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழு நிர்ணயம் செய்யும் விலையில் இருந்து வியாபாரிகள் பண்ணையாளர்களிடம் விலையை குறைத்து வாங்கி வருகின்றனர். எனவே கோழிப்பண்ணை தொழிலில் மீண்டும் மைனஸ் விலை தலைதூக்கி உள்ளது.

இது குறித்து பண்ணையாளர்கள் கூறியதாவது:- அமெரிக்கா-ஈரான் போரால் வெளிநாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் கடந்த 20 நாட்களுக்கு மேலாக முட்டை கொள்முதல் விலை 450 காசுகளுக்கு கீழே இருந்து வருகிறது. மேலும் இதை பயன்படுத்தி தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு நிர்ணயம் செய்யும் விலையில் இருந்து சுமார் 30 காசுகள் வரை குறைத்து வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.

அதேநேரத்தில் தற்போது ஒரு முட்டையின் உற்பத்தி செலவு 520 காசுகளாக இருப்பதால், ஒரு முட்டைக்கு தினசரி சராசரியாக ரூ.1 வீதம் இழப்பு ஏற்பட்டு வருகிறது. அந்த வகையில் தினசரி ரூ.6 கோடி இழப்பு ஏற்படுகிறது. கடந்த 24 நாட்களில் மட்டும் கோழிப்பண்ணையாளர்களுக்கு சுமார் ரூ.144 கோடி இழப்பு ஏற்பட்டு உள்ளது. கிறிஸ்தவர்களின் தவக்காலம், கடந்த சில நாட்களுக்கு முன்பு வரை ரம்ஜான் நோன்புக்காலம் போன்ற காரணங்களால் தமிழகம் மற்றும் கேரளாவில் நுகர்வு சரிந்து இருப்பதால் ஏற்றுமதியாகும் முட்டைகளை உள்ளூரிலும் விற்பனை செய்ய முடியவில்லை. எனவே தான் கொள்முதல் விலையை குறைத்து விற்பனையை அதிகரிக்க முயற்சி செய்து வருகிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## க்ரைம் கார்னர்

### ஏமாற்றி காரை ரூ.7 லட்சத்துக்கு விற்று விட்டதால் ஆத்திரம்: வியாபாரியை கடத்தி தாக்கிய இளைஞர் கைது

சென்னை, மார்ச் 25:

முகப்பேர், ரெட்டிப்பாளையத்தில் வசித்து வருபவர் சரவணன் (54). பழைய கார்களை விற்பனை செய்து வருகிறார். கடந்த 21-ம் தேதி மதியம் இவர், தனது மகனுடன் முகப்பேர் பகுதியில் உள்ள ஒரு ஓட்டலுக்கு சாப்பிட சென்றார். அப்போது, அங்கு காரில் வந்த கும்பல் ஒன்று, சரவணன் மற்றும் அவரது மகனை சரமாரியாக தாக்கியது. பின்னர், சரவணனை மட்டும் காரில் கடத்திச் சென்றது.

அவரை முகப்பேர் கிழக்கில், கோல்டன் ஜார்ஜ் நகர் அருகே வீடு ஒன்றில் அடைத்து வைத்தது. இதற்கிடையே, இந்த கடத்தல் விவகாரம் தொடர்பாக ஜெ.ஜெ.நகர் காவல் நிலையத்தில் சரவணன் குடும்பத்தினர் புகார் அளித்தனர்.

அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். பின்னர், இருப்பிடத்தை கண்டறிந்து சரவணனை மீட்டனர். கடத்தலில் ஈடுபட்ட திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை, வட மதுரையைச் சேர்ந்த மணிகண்டன் (29) என்பவரை போலீஸார் கைது செய்தனர். தலைமறைவாக உள்ள அவரது கூட்டாளிகளை தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட மணிகண்டன், சரவணனிடம் ரூ.7 லட்சத்துக்கு பழைய கார் ஒன்றை வாங்கி உள்ளார். இந்த காரை திருவள்ளூர் ஆர்டிஓ அலுவலக அதிகாரிகள் இரு தினங்களுக்கு முன்னர் பறிமுதல் செய்தனர்.

இதனால், சரவணன் தன்னை ஏமாற்றி அவரது காரை விற்பனை செய்துவிட்டதாக மணிகண்டன் கோபத்தில் இருந்துள்ளார். மேலும், காருக்காக கொடுத்த பணத்தையும் கொடுக்காததால், கூட்டாளிகளுடன் சேர்ந்து கடத்தலில் ஈடுபட்டதாக போலீஸார் தெரிவித்தனர்.

### ஐம்பொன் சிலை வாங்க ஆந்திராவிலிருந்து வந்த 4 பேரிடமிருந்து ரூ.1.90 லட்சம் பறிமுதல்

சென்னை, மார்ச் 25:

ஐம்பொன் சிலை வாங்க, ஆந்திராவிலிருந்து சென்னை வந்த 4 பேரிடமிருந்து உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டுவரப்பட்ட ரூ.1.90 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

சென்னை, மாதவரம் ரவுண்டானா அருகே நேற்றுமுன் தினம் இரவு தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அந்த வழியாக வந்த சொகுசு கார் ஒன்றை தடுத்து நிறுத்தி சோதனை நடத்தினர்.

அதில், உரிய ஆவணங்கள் இன்றி ரூ.1.90 லட்சம் இருந்தது தெரிந்தது. அதை பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். பின்னர், காரில் பயணம் செய்த 4 பேரை பிடித்து விசாரித்தனர். இதில், அவர்கள் ஆந்திர மாநிலம் கடப்பா மாவட்டத்தை சேர்ந்த நாகேஸ்வரராவ், சுதா, சுப்பாராவ், வெங்கடேஷ்வரராவ் என்பது தெரிந்தது. நாகேஸ்வரராவ் தனியார் பள்ளி ஒன்றில் பணியாற்றி வருகிறார். மேலும், இவர் தனது சொந்த ஊரில் கோயில் ஒன்று கட்டி வருவதும், கோயிலுக்காக ஐம்பொன் சிலை வாங்க சென்னை, பாரிமுனை, தேவராஜ் முதலி தெருவில் உள்ள கடை ஒன்றுக்கு பணத்துடன் வந்ததும் தெரிய வந்தது. அந்த பணத்துக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால், அதனை பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

### முன்விரோதத்தால் வாலிபர் சுட்டுக்கொலை: பதற்றத்தில் கிராம மக்கள்

முசாபர்நகர், மார்ச் 25:

உத்தரப்பிரதேச மாநிலம் முசாபர்நகர் மாவட்டத்தில் உள்ள சாத்ரா பங்கர் கிராமத்தில் அக்ஷய் குமார் 26) என்ற வாலிபர் வாழ்ந்து வந்தார். இவருக்கு அதே கிராமத்தை சேர்ந்த ஒருவரின் மனைவியுடன் கள்ளத்தொடர்பு இருந்து வந்ததாக கூறப்படுகிறது. அந்த பெண்ணின் கணவர் பலமுறை எச்சரித்தும் இருவருக்குமான உறவு தொடர்ந்து நீடித்து வந்துள்ளது. இந்த சூழலில் நேற்று, அக்ஷய் குமார் தனது வழக்கமான விவசாய பணிகளுக்காக வயலுக்கு சென்றிருந்தார். தனது வேலையை முடித்துவிட்டு அவர் வீடு திரும்பிக்கொண்டிருந்த போது அவரை மூன்று நபர்கள் கடுமையாக தாக்கினார். இந்த தாக்குதலில் இருந்து தப்பித்து செல்ல முயன்ற போது அவரை துப்பாக்கியால் சுட்டனர். இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதுகுறித்து மூன்று பேர் மீது வழக்குப்பதிவு செய்து, தலைமறைவாக உள்ள அவர்களை தீவிரமாக போலீசார் தேடி வருகின்றனர்.

## விளையாட்டு செய்திகள்

### ஆர்சிபி வெற்றிக் கொண்டாட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் நினைவாக மைதானத்தில் 11 காலி இருக்கைகள்

பெங்களூரு, மார்ச் 25:

கடந்த ஆண்டு ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி கோப்பையை வென்ற கொண்டாட்டத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 11 பேர் உயிரிழந்தனர். அதன் பின்னர், பாதுகாப்பு காரணங்களுக்காக மைதானத்தில் போட்டிகளை நடத்த தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து, கர்நாடக மாநில கிரிக்கெட் அசோசியேசன் தலைவர் வெங்கடேஷ் பிரசாத் மற்றும் அவரது குழுவினரின் தொடர் முயற்சியால் மைதானத்தில் போட்டிகள் நடத்த அனுமதி வழங்கப்பட்டது. தொடர்ந்து, மைதானத்தின் நுழைவுப்பகுதி அகலப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், ஆர்சிபி வெற்றிக் கொண்டாட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் நினைவாக சின்னசாமி மைதானத்தில் 11 காலி இருக்கைகள் காலியாக விட கர்நாடகா கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளது. மேலும் நினைவுக் கல்வெட்டு திறக்கவும் திட்டமிட்டுள்ளனர்.

### மியாமி ஓபன் டென்னிஸ்: அல்காரஸ் தோல்வி

சென்னை, மார்ச் 25:

மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதில் ஆண் கள் ஒற்றையர் பிரிவில் 3-வது சுற்று ஆட்டம் ஒன்றில் கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்), செபாஸ்டியன் கோர்டாவை (அமெ ரிக்கா) எதிர்கொண்டார். இந்த ஆட் டத்தில் அல்காரஸ் 3-6, 7-5, 4-6 என்ற செட் கணக்கில் செபாஸ்டியன் கோர்டாவிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். இந்த ஆண்டில் தொடர்ச்சியாக 15 ஆட்டங்களில் வெற்றி பெற்று இருந்த அல்காரஸ் சந்தித்த 2-வது தோல்வி இதுவாகும்.

### ஆகாஷ் தீப்புக்குப் பதிலாக கேகேஆர் அணியில் இணைந்த மாற்று வீரர்!

சென்னை, மார்ச் 25:

காயம் காரணமாக ஐபிஎல் தொடரிலிருந்து விலகியுள்ள ஆகாஷ் தீப்புக்குப் பதிலாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் மாற்று வீரர் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐபிஎல் தொடர் இன்னும் நான்கு நாள்களில் தொடங்கவுள்ள நிலையில், அணிகள் அனைத்தும் தீவிரமாக பேட்டிங் மற்றும் பந்துவீச்சு பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. வருகிற மார்ச் 28 ஆம் தேதி நடைபெறும் தொடரின் முதல் போட்டியில் நடப்பு சாம்பியன் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி, சன்ரைசர்ஸ் ஹைதராபாதை எதிர்கொள்கிறது. இந்த ஆண்டு ஐபிஎல் தொடர் தொடங்குவதற்கு முன்பாக வீரர்கள் பலரும் காயம் காரணமாக விலகியுள்ளனர். கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிலிருந்து ஹர்ஷித் ராணா மற்றும் ஆகாஷ் தீப் இருவரும் காயம் காரணமாக விலகியுள்ளனர். முதல் கட்ட போட்டிகளில் மதீஷா பதிரானாவும் விளையாடமாட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், காயம் காரணமாக ஐபிஎல் தொடரிலிருந்து விலகியுள்ள ஆகாஷ் தீப்புக்குப் பதிலாக இடதுகை வேகப் பந்துவீச்சாளரான சௌரப் துபே மாற்று வீரராக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# தேர்தலில் பயன்படுத்தப்படும் இவிஎம், விவிபாட் இயந்திரங்கள்: கணினி குலுக்கல் முறையில் தொகுதிவாரியாக பிரிப்பு

சென்னை, மார்ச் 25:



சட்டப்பேரவை தேர்தலில் பயன்படுத்தப்பட உள்ள இவிஎம், விவிபாட் இயந்திரங்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் கணினி குலுக்கல் முறையில் தொகுதி வாரியாக பிரிக்கப் பட்டது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் இடம்பெற்றுள்ள 75,032 வாக்குச்சாவடிகளில் அடிப்படை வசதிகளை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த தேர்தலில் பயன்படுத்த வேண்டிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகள், முதல்கட்ட பரிசோதனைக்குப் பிறகு, அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் கட்டுப்பாட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த தேர்தலில் மொத்தம் இவிஎம்-ல் தலா 90 ஆயிரம் கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் வாக்குப்பதிவு இயந்திரங்கள், 97,500 விவிபாட் கருவிகள் பயன்படுத்தப்பட உள்ளன. இதில் பயன்பாடு போக, பழுதாகும் போது மாற்றுவதற்கான 20 சதவீத இருப்பு வைப்பு இயந்திரங்களும் அடங்கும். மாவட்ட அளவில் வைக்கப்பட்டுள்ள இந்த இயந்திரங்களை, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் முன்னிலையில் கணினி குலுக்கல் முறையில் தொகுதி வாரியாக பிரிக்கும் பணி நேற்று நடைபெற்றது.

சென்னையில் மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் முன்னிலையில் இப்பணி நடைபெற்றது. பணிகள் நிறைவடைந்த பின்னர், தொகுதி வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட இவிஎம், விவிபாட் இயந்திரங்களின் பட்டியல்கள், மாவட்ட தலைமையிடங்களில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளுடன் பகிரப்பட்டது.

இந்த இயந்திரங்கள், தேர்தலில் பயன்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு வழங்கப்படும். அவை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அந்தந்த சட்டப்பேரவை தொகுதி காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இறுதி செய்த பின்னர், அந்த இயந்திரங்கள் பட்டியல் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுடனும் பகிரப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# மார்ச் 4-ல் விஜய் வாகனத்தை பின்தொடர்ந்தபோது விபத்தில் சிக்கிய மாணவர் மருத்துவமனையில் மரணம்

திருச்சி, மார்ச் 25:

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் நடைபெற்ற தவெக கூட்டத்துக்கு சென்ற தவெக தலைவர் விஜய் வாகனத்தை பின்தொடர்ந்து சென்றபோது, விபத்தில் சிக்கி காயமடைந்த கல்லூரி மாணவர் சிகிச்சை பலனின்றி நேற்று பரிதாபமாக உயிரிழந்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் கடந்த மார்ச் 4-ம் தேதி நடைபெற்ற தவெக நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்க தவெக தலைவர் விஜய், திருச்சிக்கு விமானத்தில் வந்து, அங்கிருந்து காரில் செங்கிப்பட்டி புறப்பட்டார்.

அப்போது, திருச்சி தேசிய கல்லூரியில் பி.காம்., 3-ம் ஆண்டு படித்து வந்த மேலகல்கண்டார் கோட்டை மகாலட்சுமி நகரைச் சேர்ந்த பாண்டியன் மகன் விக்னேஷ் (19), தனது நண்பர் ஹாரூனுடன் இருசக்கர வாகனத்தில் விஜய் சென்ற காரை பின்தொடர்ந்தார்.

அப்போது விஜய்யின் காருக்கு அருகில் செல்ல முயன்றபோது, அவர்களது இருசக்கர வாகனம் வளம்பக்குடி என்ற இடத்தில் சாலையில் நின்று கொண்டிருந்த போலீஸ் வாகனத்தின் மீது மோதியது.

அதில் விக்னேஷ் மற்றும் அவரது நண்பர் ஹாரூன் இருவரும் நிலைதடுமாறி சாலையில் சென்ற மற்ற இருசக்கர வாகனங்களின் மீது விழுந்தனர். இதன் காரணமாக அடுத்தடுத்த வாகனங்கள் விபத்துக்குள்ளாகின.

இந்தச் சம்பவத்தில் விக்னேஷுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதையடுத்து அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பினர்.

அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், மேல் சிகிச்சைக்காக திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் ஐசியூவில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இதனிடையே இந்த விபத்தில் கால் முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்ற ஹாரூன் வீடு திரும்பினார். இந்நிலையில், கடந்த 20 நாட்களாக தீவிர சிகிச்சை பிரிவில் இருந்த விக்னேஷ், நினைவு திரும்பாமலேயே நேற்று பரிதாபமாக உயிரிழந்தார். இதையடுத்து, அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த விபத்து குறித்து செங்கிப்பட்டி போாலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பேரவைத் தேர்தல் சிறப்பு பார்வையாளர் நியமனம்: பொதுமக்கள், அரசியல் கட்சிகள் தொடர்பு கொள்ளலாம்

சென்னை, மார்ச் 25:

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் சிறப்பு பார்வையாளராக பிரதாப் சிங் நியமிக்கப்பட்டார். தேர்தல்களில் அதிக செலவு செய்யும் மாநிலமாக தமிழகத்தை தேர்தல் ஆணையம் அடையாளம் கண்டுள்ளது.

கடந்த 2016 சட்டப்பேரவைத் தேர்தலின்போது, அரவக்குறிச்சி, திருப்பரங்குன்றம் ஆகிய தொகுதிகளில் அதிக செலவு செய்யப்படுவதை உறுதிசெய்து, தேர்தலையே தேர்தல் ஆணையம் நிறுத்தியது

அப்போது அரசியல்வாதிகளிடம் அதிகளவிலான ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, கடந்த 2017-ல் நடைபெற்ற சென்னை ஆர்.கே.நகர் இடைத்தேர்தலிலும், பணப் பட்டுவாடா நடைபெறுவதை உறுதி செய்து, அந்ததேர்தலையும் தேர்தல் ஆணையம் நிறுத்தியது.

இதற்கிடையே தமிழகத்தில் மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 108 தொகுதிகள் அதிக செலவு செய்யக் கூடிய தொகுதிகளாக தேர்தல் ஆணையம் அடையாளம் கண்டுள்ளது.

வழக்கமாக இரு தொகுதிகளுக்கு ஒரு செலவினப் பார்வையாளரை நியமிக்கும் தேர்தல் ஆணையம், இந்த முறை 151 செலவினப் பார்வையாளர்களை நியமித்துள்ளது.

தமிழகத்தில் தேர்தல் நேர்மையாக நடத்தப்பட வேண்டும் என்பதில் தேர்தல் ஆணையம் உறுதியாக உள்ளது.

அதை கருத்தில்கொண்டே மாநில அளவில் தேர்தல் சிறப்பு பார்வையாளராக பிரதாப் சிங் நியமிக்கப்பட்டுள்ளார். இவரை பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் தேர்தல் தொடர்பான விவகாரங்கள் குறித்து தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் படி, சென்னை ஆயகர் பவனில், இணைப்புக் கட்டிடம், அறை எண். 412-ல் அவரை சந்திக்கலாம்.

அவரது அலுவல தொலைபேசி எண். 044 28338378, கைபேசி எண் 784532 1461, மின் னஞ்சல் முகவரி SPLOBS.PELECD@TN.GOV.IN ஆகியவை மூலம் தொடர்புகொள்ளலாம்.

அதேபோல், அவரது தொடர்பு அலுவலர் ஜெகன் மோகனை 9551322999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## வணிகச் செய்திகள்

### மீண்டும் குறைந்த தங்கம் விலை

சென்னை, மார்ச் 25:

எதிர்கால எரிபொருள் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பல்வேறு நாடுகளும் கச்சா எண்ணெய் உள்ளிட்ட எரிபொருட்களை வாங்குவதில் தீவிரம் காட்டி வருகின்றன.

இதனால், டாலர் பயன்பாடு அதிகரித்து அதன் மதிப்பு உயர்ந்து வருகிறது. இதனால், முதலீட்டாளர்கள் பலரும் டாலரில் முதலீடு செய்வதை அதிகரித்து வருகின்றனர்.

இதன் காரணமாக தங்கத்தின் மீதான முதலீடு குறைந்து வருகிறது. தங்கத்தின் விலை சரிவதற்கு இது ஒரு முக்கிய காரணமாக சொல்லப்படுகிறது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, உலக பங்குச் சந்தை முதலீடுகள் உள்ளிட்ட பல்வேறு காரணிகள் காரணமாக, தங்கத்தின் விலை குறைந்து வருவதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

அதன்படி, சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.340 குறைந்து ஒரு கிராம் ரூ.13,000-க்கும், பவுனுக்கு ரூ.2,720 குறைந்து ஒரு பவுன் ரூ.1,04,000-க்கும் விற்பனையாகிறது.

அதேபோல் வெள்ளியின் விலையும் கிராமுக்கு ரூ.10 குறைந்துள்ளது. ஒரு கிராம் வெள்ளி ரூ.240-க்கும், கட்டி வெள்ளி ஒரு கிலோ ரூ.2,40,000-க்கும் விற்பனையாகிறது.

# சொமாட்டோவை தொடர்ந்து ஸ்விக்கியிலும் கட்டணம் உயர்வு: வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி

புதுடெல்லி, மார்ச் 25:

இந்தியாவில் உணவு டெலிவரி சேவையில் ஸ்விக்கி, சொமாட்டோ போன்ற நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. வாடிக்கையாளர்கள் தங்களுக்கு பிடித்த உணவுகளை, விருப்பமான ஹோட்டல்களில் இருந்து வீட்டிலிருந்தபடியே இந்த செயலிகள் மூலம் ஆர்டர் செய்யலாம்.




ஆர்டர் செய்த சில நிமிடங்களிலேயே, சுடச்சுட உணவை டெலிவரி பணியாளர்கள் வீட்டிற்கு கொண்டு வந்து கொடுத்துவிடுவார்கள். சென்னை, பெங்களூர், டெல்லி போன்ற பெருநகரங்களில் மட்டும் அல்லாமல், சிறிய நகரங்களிலும் தற்போது சொமாட்டோ, ஸ்விக்கி போன்ற நிறுவனங்கள் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தியுள்ளன.

இந்த நிலையில், சொமாட்டோ தனது லாப வரம்பை அதிகரிக்கும் நோக்கில் 'பிளாட்பார்ம் கட்டணத்தை' கடந்த சில தினங்களுக்கு முன்பு உயர்த்தியது.

ஒரு ஆர்டருக்கான பிளாட்பார்ம் கட்டணம் ரூ. 12.50-இல் இருந்து ரூ. 14.90 ஆக அதிகரிக்கப்படுவதாக சொமாட்டோ அறிவித்திருந்த நிலையில், தற்போது ஸ்விக்கி நிறுவனமும் கட்டணத்தை உயர்த்தி வாடிக்கையாளர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது. ரூ.14.99 ஆக இருந்த பிளாட்பார்ம் கட்டணத்தை ரூ.17.58 ஆக உயர்த்தியுள்ளது ஸ்விக்கி.

ஏற்கனவே சிலிண்டர் தட்டுப்பாட்டால் ஹோட்டல்கள் உணவு விலையை அதிகரித்துள்ள நிலையில், தற்போது டெலிவரி நிறுவனங்களும் அடுத்தடுத்து கட்டணத்தை உயர்த்தியுள்ளது வாடிக்கையாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்வதற்கான திட்டம் இல்லை: நிர்மலா சீதாராமன்

புதுடெல்லி, மார்ச் 25:



விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதற்கான எந்த திட்டமும் மத்திய அரசின் பரிசீலனையில் இல்லை என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து, மக்களவையில் பேசிய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், "விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்வதற்கான எந்த திட்டமும் மத்திய அரசிடம் இல்லை. இருப்பினும், விவசாயிகளின் பொருளாதார நிலையை வலுப்படுத்த அரசு பல்வேறு விதமான நடவடிக்கைகளை எடுத்துள்ளன. அதில் கிசான் கடன் அட்டை மூலம் சரியான நேரத்தில் போதுமான கடன் வழங்குவது. இந்த அட்டையின்கீழ், திருத்தப்பட்ட வட்டி மானியத் திட்டத்தின் அடிப்படையில், ரூ.3 லட்சம் வரையிலான பயிர்க்கடன் மானிய வட்டி விகிதங்களில் வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், சரியான நேரத்தில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு கூடுதல் சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. மேலும், இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள முன்னுரிமைத் துறை கடன் வழிகாட்டுதல்களின்படி, வேளாண்மை உள்ளிட்ட பொருளாதாரத்தின் முன்னுரிமைத் துறைகளுக்கு வங்கி அமைப்பிலிருந்து பிணையமில்லா குறுகிய கால விவசாயக் கடன்களை ரூ.1.60 லட்சத்திலிருந்து ரூ.2 லட்சமாக அரசு உயர்த்தியுள்ளது" எனத் தெரிவித்தார்.

## ஈரான் போர்! தொழில்நுட்பத் துறையில் நேரடித் தாக்கம் இல்லை: இன்ஃபோசிஸ்

புதுடெல்லி, மார்ச் 25:

மேற்கு ஆசிய மோதலின் காரணமாக தொழில்நுட்பத் துறையில் நேரடித் தாக்கம் இல்லை என இன்ஃபோசிஸ் இணை நிறுவனர் கிரிஸ் கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து கடந்த பிப்.28 ஆம் தேதி ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இதனைத் தொடர்ந்து ஈரானும் வளைகுடா நாடுகளில் உள்ள முக்கிய கட்டமைப்புகள் மீது பதில் தாக்குதல்களை நடத்தியது. போர் இருபக்கமும் தொடர்ந்த நிலையில், ஈரான் உலகளாவிய எண்ணெய் வழிப்போக்குவரத்தின் முக்கிய கடல்வழிப் பாதையான ஹோர்முஸ் நீரிணையை முடக்கியது. இதன்காரணமாக, இந்தியா உள்பட உலகின் பல்வேறு நாடுகளில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்தியா நடத்திய பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு ஹோர்முஸ் நீரிணை வழியாக ஒவ்வொரு கப்பலாக இந்தியா நோக்கி வந்து கொண்டிருக்கின்றது.

இதுகுறித்து பேசிய இன்ஃபோசிஸ் இணை நிறுவனர் கிரிஸ் கோபாலகிருஷ்ணன், "தொழில்நுட்பத் துறையில் நேரடித் தாக்கம் இல்லை. ஆனால் சாமானிய மக்கள் மற்றும் பொருளாதாரத்திற்கு நேரடி பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது கவலைக்குரிய விஷயம். போர் மேலும் தீவிரமடையாது என்று நம்புகிறேன். ஏனென்றால், போரால் நேரடியாக பாதிக்கப்பட்ட ஒரு பெரிய புலம்பெயர் சமூகம் உள்ளது" எனத் தெரிவித்தார்.

# 'ஏஐ'யால் வழக்கறிஞராக முடியாது: உச்ச நீதிமன்ற நீதிபதி கருத்து




பெங்களூரு, மார்ச் 25:

உச்ச நீதிமன்ற பார் கவுன்சில் சார்பில் கர்நாடக தலைநகர் பெங்களூருவில் நேற்று தேசிய மாநாடு நடைபெற்றது.

இதில் உச்சநீதிமன்ற நீதிபதி விக்ரம் நாத் பேசியதாவது: "செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில் நுட்பத்தால் நீதித் துறையின் சேவைகள், திறன்களை மேம்படுத்த உதவ முடியும்.

ஆனால் ஏஐ, வழக்கறிஞராகவோ, நீதிபதியாகவோ செயல்பட முடியாது. ஒரு வழக்கில் 10 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டால் சூழ்நிலைகளின் அடிப்படையில் 9 பேருக்கு ஜாமீன் வழங்கி, ஒருவருக்கு ஜாமீன் மறுக்க முடியும்.

ஆனால் ஏஐ தொழில் நுட்பம் இவ்வாறு செயல்படாது. இந்த தொழில் நுட்பத்தால் வழக்கறிஞராகவும் செயல்பட முடியாது. இவ்வாறு நீதிபதி விக்ரம் நாத் பேசினார்.

உச்ச நீதிமன்ற நீதிபதி என். கோடீஸ்வர் சிங் பேசும்போது, "நான் வழக்கறிஞராக இருந்தபோது ஆரோக்கியமாக இருந்தேன். ஆனால் நீதிபதியாக பதவியேற்ற பிறகு எனது உடல் நலன் பாதிக்கப்பட்டது.

பணி தொடர்பான மன அழுத்தம் காரணமாக பெரும்பாலான நீதிபதிகள் ரத்த அழுத்தம் மற்றும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். எங்களது பணி சூழல் குறித்து சிலருக்கு மட்டுமே நன்றாக தெரியும். கீழமை நீதிமன்ற நீதிபதிகளின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது" என்றார்.

உச்ச நீதிமன்ற நீதிபதி உஜ்ஜல் புயான் பேசும்போது, "பல்வேறு மாநிலங்களில் நீதித் துறைக்கான ஒதுக்கீடு ஒரு சதவீதத்துக்கும் குறைவாக உள்ளது. இதனால் நீதித் துறையின் செயல்பாடு பாதிக்கப்பட்டு உள்ளது.

ஒரு நீதிபதியின் பணி காலை 10 மணி முதல் மாலை 5 மணியோடு நிறைவடைந்து விடாது. அவர் 24 மணி நேரமும் பணியாற்றுகிறார். இதை அனைத்து தரப்பினரும் கவனத்தில் கொள்ள வேண்டும்" என்றார்.

# 'இஸ்ரேலில் உள்ள இந்தியர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர்' - மத்திய அரசு

புதுடெல்லலி, மார்ச் 25:

அரபு நாடுகளில் உள்ள அமெரிக்காவின் ராணுவ நிலைகள் மீது ஈரான் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது.

சுமார் 3 வாரங்களுக்குமேல் நீடித்து வரும் இந்த போரில், ஈரான் முற்றிலும் சீரழிந்து விட்டதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஈரானின் கடற்படை, விமானப்படை அனைத்தும் நிர்மூலமாக்கப்பட்டுள்ள தாக அமெரிக்கா அறிவித்துள்ளது. ஆனாலும் ஈரான் தொடர்ந்து ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகிறது.

குறிப்பாக இஸ்ரேலின் அரணாக விளங்கும் 'அயர்ன் டோம்' பாதுகாப்பு அம்சத்தை தாண்டி, ஈரானின் ஏவுகணைகள் மற்றும் கொத்துக்குண்டுகள் அந்த நாட்டை பதம் பார்த்து வருகின்றன.




இதில் ஜெருசலேம், டெல் அவிவ் நகரங்கள் பெரும் சேதத்தை சந்தித்து வருகின்றன. இந்த நிலையில், இஸ்ரேலில் வசித்து வரும் இந்தியர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் செய்தியாளர்களிடம் கூறியதாவது;-

"இஸ்ரேலில் உள்ள இந்திய குடிமக்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர். இந்தியர் ஒருவர் காயமடைந்ததாக தகவல்கள் உள்ளன. காயமடைந்த நபர் தற்போது பாதுகாப்பாக உள்ளார். இந்த மோதலில் இதுவரை இந்தியர்கள் 6 பேர் உயிரிழந்துள்ளனர், ஒருவர் காயமடைந்துள்ளார்.

மேலும் ஒருவர் மாயமாகியுள்ளார். இஸ்ரேலில் உள்ள இந்திய தூதரகம் நிலவரத்தை கண்காணித்து வருகிறது."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்வது இந்தியாவுக்கு பின்னடைவு: காங்கிரஸ்

புதுடெல்லி, மார்ச் 25:

மேற்காசியப் போர் தொடர்பான மத்தியஸ்தத்தில் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளதாக வந்துள்ள செய்திகள் உண்மையாக இருக்குமானால், அது இந்தியாவுக்கு ஒரு பின்னடைவு என்று காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.



இது தொடர்பாக காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், "அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கும், ஈரானுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்வதில் பாகிஸ்தானும் ஈடுபட்டுள்ளதாக முன்னணி சர்வதேச ஊடகங்கள் பலவும் தெரிவித்துள்ளன. இது உண்மை எனில், இந்தியாவுக்கு பின்னடைவும் நிராகரிப்பும் ஏற்பட்டுள்ளதையே உணர்த்துகிறது. தன்னைத்தானே விஸ்வகுரு என்று கூறிக்கொள்ளும் அந்த நபரே இதற்கெல்லாம் காரணம்.

ஆபரேஷன் சிந்தூரில் சந்தேகத்துக்கு இடமின்றி நமது ராணுவம் வெற்றி பெற்ற போதிலும், அதன் பிறகான பாகிஸ்தானின் ராஜதந்திர ஈடுபாடும், கதைகளை உருவாக்குவதில் வெளிப்படுத்திய நிர்வாக அணுகுமுறையும் மோடி அரசாங்கத்தைவிட குறிப்பிடத்தக்க அளவில் சிறப்பாகவே இருந்தது. இதன் காரணமாக, அரசியல், சமூகம், பொருளாதாரம் என அனைத்திலும் மிகவும் அபாயகரமான சூழ்நிலையை சந்தித்து வந்த பாகிஸ்தான், ஒரு புதிய வாழ்வை பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் 22-ம் தேதி பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதல்களுக்கு முக்கிய காரணமாக இருந்தது பாகிஸ்தான் ராணுவத் தளபதி அசிம் முனீரின், இந்தியாவுக்கு எதிரான ஆத்திரமூட்டும், தூண்டும் பேச்சுக்களே. ஆனால், அவரைத்தான் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், வெள்ளை மாளிகைக்கு பலமுறை அழைத்தார். முன் எப்போதும் இருந்திராத வகையில், அதிபர் ட்ரம்ப் அவருக்கு மதிய விருந்து உட்பட இரண்டு முறை உபசரித்தார். பாகிஸ்தானின் ஆளும் வர்க்கம், அதிபர் ட்ரம்ப்புடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டுள்ளது. அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது வான் தாக்குதலை நடத்துவதற்கு சரியாக இரண்டு நாட்களுக்கு முன்புதான் பிரதமர் மோடி இஸ்ரேலுக்கு சென்றார். விவேகமற்ற அவரது இந்த பயணம், இந்திய அரசியல் வரலாற்றில் மிக மோசமான நிகழ்வாகவே நினைவுகூரப்படும். நாம் நடுநிலையாளராகச் செயல்பட்டு மத்தியஸ்தம் செய்திருக்கக் கூடிய; செய்திருக்க வேண்டிய ஒரு வாய்ப்பை அந்த பயணம் பாழ்படுத்திவிட்டது. பிரதமரின் கட்டிப்பிடிக்கும் ராஜதந்திரம் இன்று மிகக் கடுமையாக அம்பலமாகியுள்ளது.

## திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.4.21 கோடி

திருமலை, மார்ச் 25:

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர். இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 86 ஆயிரத்து 91 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 29 ஆயிரத்து 664 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தானம் அறிவித்த ஒருநாள் உண் டியல் காணிக்கை ரூ.4 கோடியே 21 லட்சம் ஆகும்.

## பெண்களுக்கு ரூ.18,000 நிதியுதவி: அகிலேஷ் யாதவின் அதிரடி வாக்குறுதி

லக்னோ, மார்ச் 25:

உத்தர பிரதேச முன்னாள் முதல்-மந்திரியும், சமாஜ்வாடி கட்சி தலைவருமான அகிலேஷ் யாதவ் தனது எக்ஸ் வலை தளத்தில் கூறி இருப்பதாவது:- மக்கள் தொகையில் பெண்களின் முழுமையான சுதந்திரம் மற்றும் பாதுகாப்பிற்கும், அத்துடன் அவர்களின் உரிமைகள், அதிகாரமளித்தல் மற்றும் மேம்பாட்டிற்கும் நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம், இனியும் இருப்போம். குடும்பம், சமூகம் மற்றும் நாட்டை வலுப்படுத்துபவர்கள் மதிக்கப்படும்போது, அவர்களின் மரியாதையும் மன உறுதியும் அதிகரிக்கும். மக்கள் மேம்பாட்டு ஆணையத்தில் சேர்க்கப்பட்டுள்ள 'அ' என்ற எழுத்தை நாங்கள் அறிமுகப்படுத்துவோம். இதன் பொருள் 'அதி அபாதி' என்பதாகும். அதாவது, ஒவ்வொரு குழந்தை, இளம் பெண், பெண் ஆகியோருக்கும் சமூக-பொருளாதார ரீதியாக சம மரியாதை அளிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் சொந்த காலில் நின்று வளர வேண்டும். சமாஜ்வாதி ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் கொண்டு வருவதன் மூலம், உத்தரப் பிரதேசத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான தனது உறுதிப்பாட்டை நிறைவேற்றும் அதே வேளையில், பெண்களின் பொருளாதாரப் பாதுகாப்பைத் தனது கட்சி மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் கூறினார்.

## ஆந்திராவில் சோகம்: குரங்குகள் தாக்கியதில் 68 வயது மூதாட்டி உயிரிழப்பு

அமராவதி, மார்ச் 25:

ஆந்திர மாநிலம் காக்கிநாடா மாவட்டத்தில், உள்ள பெத்திபாலம் கிராமத்தை சேர்ந்த தானபோயின சின்ன புல்லி 68 வயது மூதாட்டி தனது மூன்று ஏக்கர் விவசாய நிலத்திற்கு அருகில் உள்ள ஒரு வீட்டில் தனது மகளின் குடும்பத்துடன் வசித்து வந்தார். இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை வழக்கம்போல தனது அன்றாட வேலைகளுக்காக தோட்டத்திற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்துகொண்டிருந்தார். அப்போது அங்கு இருந்த குரங்குகள் அவரை திடீரென சூழ்ந்து கொண்டது. குரங்குகள் அவரை ஆக்ரோஷமாக தாக்க தொடங்கின. குரங்குகளிடம் இருந்த தப்பிக்க ஓடினார். அந்த பதற்றத்தில் நிலைதடுமாறி கீழே விழுந்த அவருக்கு, தலையிலும் உடலிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன. ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் இந்த தாக்குதல் நடந்ததால், இதில் மூதாட்டி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக துடிதுடித்து உயிரிழந்தாக போலீசார் தெரிவித்தனர்.

## அன்புமணிக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கியது யார்? சுப்ரீம் கோர்ட்டு கேள்வி

புதுடெல்லி, மார்ச் 25:

பா.ம.க.வில் தந்தை ராமதாஸ் -மகன் அன்புமணி இடையே மோதல் ஏற்பட்டது. இதையடுத்து, இரு தரப்பும் கட்சிக்கு உரிமை கோரி வந்த நிலையில், ஆவணங்களின் அடிப்படையில் பா.ம.க.வின் சின்னம் மற்றும் கொடி அன்புமணி தரப்புக்கே சொந்தம் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்தது. இந்த விவகாரம் தொடர்பாக ராமதாஸ் தரப்பு சுப்ரீம் கோர்ட்டை அணுகியது. இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. அப்போது, "அன்புமணி தரப்புக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கியது யார்?" என்று கேள்வி எழுப்பிய சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி, சின்னம் தொடர்பான விவகாரத்தில் தேர்தல் ஆணையம் 'பிரண்ட்லி மேட்ச்' ஆடுகிறது என்றும் கருத்து தெரிவித்தார். அப்போது ஆவணங்களின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் சின்னத்தை ஒதுக்கியது என்று அன்புமணி தரப்பு கூறியது. இதையடுத்து, சின்னம் தொடர்பாக இரண்டு நாட்களுக்குள் சிவில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அந்த மனுவை மூன்று நாட்களுக்குள் உரிமையியல் நீதிமன்றம் விசாரித்து முடிவு எடுக்க வேண்டும் என்றும் தலைமை நீதிபதி உத்தரவிட்டார்.

## ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவராக பிகார் முதல்வர் நிதீஷ் குமார் மீண்டும் தேர்வு

புதுடெல்லி, மார்ச் 25:

ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவர் நிதீஷ் குமார், மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் பொருட்டு பிகார் முதல்வர் பதவியில் இருந்து விலகுவதாக சமீபத்தில் அறிவித்தார். அவர் கூறியபடியே பிகாரில் இருந்து மாநிலங்களவைக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். எனினும் பிகாரில் அடுத்த முதல்வர் யார் என்பது அறிவிக்கப்படாமல் உள்ளதால் அவர் இன்னும் தனது முதல்வர் பதவியை ராஜிநாமா செய்யவில்லை. சட்டப்பேரவை, சட்டப்பேரவை, மக்களவை என பல்வேறு பதவிகளில் இருந்து நான் மாநிலங்களவை உறுப்பினராக வேண்டும் என்று விரும்புவதாகவும் கூறியிருந்தார். இந்நிலையில் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் தலைவராக நிதீஷ் குமார் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்த்து யாரும் போட்டியிடாததால் நிதீஷ் குமார் ஒருமனதாகத் தேர்வாகியுள்ளதாக கட்சி அறிவித்துள்ளது. இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிதீஷ் குமாருக்கான சான்றிதழ் வழங்கப்படும் என்றும் கட்சி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கா உடன் பேச்சு நடத்த ஈரான் உச்ச தலைவர் தயாராக இருப்பதாக இஸ்ரேல் ஊடகம் தகவல்

**தெஹ்ரான், மார்ச் 25:**

ஈரானின் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா காமெனி, அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகஇருப்பதாகஇஸ்ரேலிய ஊடகமான யெடியோத் அஹ்ரோனூத்தை மேற்கோள் காட்டி அரப் நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.



ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சிக்கும், அமெரிக்கா மீடியேட்டர் ஸ்டீவ் விட்காஃப்புக்கும் இடையே நடந்த இருதரப்புக்கானபேச்சுவார்த்தை குறித்த உரையாடலுக்கு, ஈரானின் உச்ச தலைமை ஒப்புதல் அளித்துள்ளது என்று அஹ்ரோனூத் ஊடக செய்தியை மேற்கோள் காட்டி அரப் நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னதாக, ஈரான் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர், ஈரானுடனான பேச்சுவார்த்தைகள் குறித்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் கருத்துகளை நிராகரித்திருந்தார்.

ஈரானுக்கு எதிரான அமெரிக்க - இஸ்ரேல் போரின் கடந்த 24 நாட்களில், அமெரிக்காவுடன் எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்றும் அவர் கூறியிருந்தார்.

மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றத்துக்கு மத்தியில், உலகளாவிய முக்கிய கப்பல் போக்குவரத்து பாதையான ஹார்முஸ் ஜலசந்தி மிக விரைவில் திறக்கப்படும் என்றும், இந்த நீர்வழிப்பாதையை அமெரிக்காவும் ஈரானும் இணைந்து நிர்வகிக்க வேண்டும் என்றும் அவர் கருத்து தெரிவித்திருந்தார்.

நேற்று புளோரிடாவில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், "ஈரானுடன் தற்போதையபேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாகத் தொடர்ந்தால், அந்த ஜலசந்தி மிக விரைவில் திறக்கப்படும். இந்த ஜலசந்தி கூட்டாகக் கட்டுப்படுத்தப்படும். நானும் அயதுல்லாவும், அந்த அயதுல்லா யாராக இருந்தாலும் சரி, இணைந்து கட்டுப்படுத்துவோம்" என்றார்.

இதனைத் தொடர்ந்து இப்போது அமெரிக்காவுடன் ஈரான் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக ஒரு நாளைக்கு 15 மில்லியன் பீப்பாய்கள் கச்சா எண்ணெயையும், 5 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் பொருட்களையும் செல்கிறது. இது உலகளாவிய கடல்வழி எண்ணெய் வர்த்தகத்தில் சுமார் 25 சதவீதத்தைக் குறிக்கிறது.

## ஈரான் மீதான தாக்குதல் தொடரும்! இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு!



**லண்டன், மார்ச் 25:**

ஈரான் மீதான தாக்குதல் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திங்கள்கிழமை அறிவித்துள்ளார்.

அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் நாடுகளிடையே கடந்த மூன்று வாரங்களாக நடைபெற்றுவந்த போர், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அதிபர் டொனால்ட் டிரம்ப் திங்கள்கிழமை அறிவித்திருந்தார்.

அமெரிக்கா - ஈரான் இடையே போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும், ஈரானிய மின் நிலையங்கள் மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகளுக்கு எதிரான அனைத்து ராணுவத் தாக்குதல்களையும் ஐந்து நாள்களுக்கு ஒத்திவைக்குமாறு போர் அமைச்சகத்திற்கு அறிவுறுத்தியிருப்பதாகவும் டிரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், நாட்டு மக்களுக்கு உரையாற்றிய இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்ததாவது:

அதிபர் டொனால்ட் டிரம்ப்புடன் நான் பேசினேன்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ராணுவம் அடைந்துள்ள மகத்தான வெற்றியின் மூலம், நமது முக்கிய நலன்களைப் பாதுகாப்பும் ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற ஒரு வாய்ப்பு இருப்பதாக அதிபர் டிரம்ப் நம்புகிறார்.

இதனிடையே, ஈரான் மற்றும் லெபனான் ஆகிய நாடுகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவோம். அவர்களின் ஏவுகணைத் திட்டங்களையும், அணுசக்தித் திட்டங்களையும் நாம் நசுக்கி வருகிறோம். மேலும் ஹிஸ்புல்லா மீது கடுமையான தாக்குதலை தொடர்ந்து வருகிறோம்.

சில நாள்களுக்கு முன்பு, மேலும் இரண்டு அணு விஞ்ஞானிகளை கொன்றோம். மேலும், தாக்குதல் தொடரும். எந்தச் சூழ்நிலையிலும் நமது நலன்களை நாம் பாதுகாப்போம்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தீக்கிரையான அமெரிக்க வலேரோ எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்!



**நியூயார்க், மார்ச் 25:**

வலேரோ எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, டெக்சாஸ் வளைகுடா கடற்கரைக்கு அருகிலும், டெக்சாஸ் - லூசியானா எல்லையிலும் அமைந்திருக்கிறது. இந்த வலேரோ சுத்திகரிப்பு நிலையம், ஒருநாளைக்கு சுமார் 3,80,000 பீப்பாய்கள் அளவுக்கான கச்சா எண்ணெய்யை சுத்திகரிக்கும் திறன் கொண்டது எனத் தகவல் தெரிவிக்கின்றன.

இந்த ஆலையில் சுமார் 770 தொழிலாளர்கள் பணிபுரிவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், இது தினமும் 4,35,000 பீப்பாய்களுக்கும் அதிகமான பெட்ரோல், டீசல் மற்றும் ஜெட் விமானங்களுக்கான எரிபொருள் உற்பத்தி செய்கிறது. சுத்திகரிப்பு நிலையத்தில், ஹீட்டர் அதிக சூடானதால், தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இந்த விபத்தைத் தொடர்ந்து சுற்றுவட்டாரத்தில் வசிப்பவர்கள் வெளியே வரவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுவரை விபத்துக்கான காரணம் வெளியாகவில்லை. ஈரான் - அமெரிக்கா இடையேயான தாக்குதலில் ஈரானின் எரிசக்தி உள்கட்டமைப்புகள், குடியிருப்புகள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் கடுமையான பாதிப்புகளைச் சந்தித்துள்ளன. இதன்காரணமாக அமெரிக்காவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீது தாக்குதல் ஏதும் நடத்தப்பட்டதா? என்பது குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## "ஒரு கப்பலுக்கு ரூ.19 கோடி கட்டணம் வசூலிக்க முடிவு செய்திருப்பதாக வெளியானது ஈரான் அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு அல்ல"

**தெஹ்ரான், மார்ச் 25:**

மேற்கு ஆசிய போர் காரணமாக, நூற்றுக்கணக்கான கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் காத்துக் கிடக்கின்றன. இதனால் கச்சா எண்ணெய் விலை கடுமையாக உயர்ந்தது. இதை குறைக்க ஈரான் மீதான தடையை ஒரு மாத காலத்துக்கு அமெரிக்கா நீக்கியது.




தற்போது நட்பு நாடுகளின் எண்ணெய்க் கப்பல்களை மட்டும் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க ஈரான் அனுமதிக்கிறது. இதற்கு கட்டணமாக ரூ.18.8 கோடி வசூலிக்க ஈரான் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதேநேரம் ஈரானுக்கு எதிராக செயல்படும் நாடுகளின் கப்பல்களுக்கு இங்கு அனுமதி இல்லை.

இதுகுறித்து ஈரான் நாடாளுமன்ற பாதுகாப்பு குழுவின் உறுப்பினர் அலாதீன் போரோஜெர்தி கூறுகையில், "ஹார்முஸ் ஜலசந்தி பகுதி ஈரான் கட்டுப்பாட்டில் உள்ளது. போர் காரணமாக ஈரானுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் கப்பல்களிடம் போக்குவரத்து கட்டணம் வசூலிக்கப்படும்" என்றார்.

ஈரான் தூதரகம் மறுப்பு:

இதுகுறித்து டெல்லியில் உள்ள ஈரான் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில், "ஒரு கப்பலுக்கு ரூ.19 கோடி கட்டணம் வசூலிக்க முடிவு செய்திருப்பதாக வெளியானது ஈரான் அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு அல்ல" என கூறப்பட்டுள்ளது.

'வளைகுடா முழுவதும் கண்ணிவெடி வைப்போம்'

ஈரான் பாதுகாப்பு கவுன்சில் நேற்று வெளியிட்ட அறிக்கையில், "ஈரானின் கடலோரப் பகுதிகள் அல்லது தீவுகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் வளைகுடாவுக்கு வரும் அனைத்து வழிகளிலும், மிதக்கும் கண்ணிவெடிகள் உட்பட பல்வேறு வகையான கடல் கண்ணிவெடிகள் வைக்கப்படும்.

அவ்வாறு வைத்தால் ஹார்முஸ் ஜலசந்தியில் ஏற்பட்டுள்ளது போன்ற நிலை வளைகுடா முழுவதும் நீண்ட காலத்துக்கு ஏற்படும். 1980-களில் சில கடல் கண்ணிவெடிகளை அகற்றுவதில் 100-க்கும் மேற்பட்ட கண்ணிவெடி அகற்றும் கப்பல்கள் தோல்வி அடைந்ததை மறந்துவிடக் கூடாது" என்று கூறப்பட்டுள்ளது.

## ஈரானில் தொடரும் தாக்குதல்கள்... 1,500-ஐ கடந்த பலி எண்ணிக்கை!

**தெஹ்ரான், மார்ச் 25:**

ஈரானில் தொடரும் தாக்குதல்களில் இதுவரை உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 1,500-ஐ கடந்துவிட்டதாக ஈரான் சுகாதார அமைச்சகம் (மார்ச் 24) தெரிவித்துள்ளது.



கடந்த மாத இறுதியில் ஈரான் மீதான அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டுப்படைகளின் தாக்குதல்களால் ஈரான் ஆடிப்போனது. அந்நாட்டின் உச்ச தலைவரான கமேனி கொல்லப்பட்டார். அதன் தொடர்ச்சியாக, ஈரானுக்கும் அமெரிக்கா - இஸ்ரேலுக்கும் நீடிக்கும் தொடர் சண்டைக்கு மார்ச் 23-இல் தற்காலிக நிறுத்தம் ஏற்பட்டது. அடுத்த ஐந்து நாள்கள் ஈரான் மீது தாக்குதல்களை நடத்த வேண்டாமென டிரம்ப் தமது நாட்டின் படைகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதனைப்பொருட்படுத்தாமல், தாக்குதல்கள் இன்றும் (மார்ச் 24) தொடர்கின்றன. இந்தப் போரில் இதுவரை, ஈரானில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 1,500-ஐ கடந்துவிட்டதாக ஈரான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் உயிரிழப்பு 15 ஆகவும், அமெரிக்கராணுவத்தைச் சேர்ந்த 13 பேரும், வளைகுடா நாடுகள் மற்றும் மேற்கு கரையில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 12-ஐ கடந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரான் மீதான அமெரிக்க தாக்குதலை 5 நாட்கள் நிறுத்தி வைப்பதாக ட்ரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், மார்ச் 25:**

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது ராணுவ நடவடிக்கையை தொடங்கின. இதையடுத்து, ஈரானும் பதில் தாக்குதல்களை நடத்தி வருகிறது. மேலும், ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியுள்ளதால், அந்த பாதையில் கப்பல் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் உள்ளிட்ட எரிபொருள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் அவற்றின் விலை உயர்ந்து வருகிறது.

இது குறித்து ஆஸ்திரேலியாவின் கேன்பெரா நகரில் செய்தியாளர்களிடம் பேசிய சர்வதேச எரிசக்தி முகமையின் தலைவர் பாதிஹ் பிய்ரோல், "ஈரான் போர் காரணமாக உலக பொருளாதாரம் மிகப்பெரிய அச்சுறுத்தலை எதிர்கொள்கிறது. இந்த நெருக்கடி இதேபோல் தொடருமானால், எந்த நாடும் இதன் விளைவுகளிலிருந்து விடுபட முடியாது. மேற்காசியாவில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி, 1970-களில் ஏற்பட்ட இரு எண்ணெய் அதிர்ச்சிகளையும், ரஷ்யா உக்ரைன் போரின் எரிவாயு சந்தை தாக்கத்தையும் விட அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது" என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக ஊடக பதிவில், "அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் விரோதப் போக்குகளுக்கு ஒரு முழுமையான மற்றும் நிரந்தரமான தீர்வு காண்பது குறித்து, கடந்த இரண்டு நாட்களாக மிகச் சிறந்த மற்றும் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆழமான, விரிவான மற்றும் ஆக்கபூர்வமான இந்த பேச்சுவார்த்தைகள் இந்த வாரம் முழுவதும் தொடர இருக்கிறது. இந்த முயற்சி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, ஈரானிய மின் நிலையங்கள் மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீது மேற்கொள்ள இருந்த அனைத்து ராணுவத் தாக்குதல்களையும் ஐந்து நாட்களுக்கு ஒத்திவைக்குமாறு போர் துறைக்கு (DEPARTMENT OF WAR) நான் உத்தரவிட்டுள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப்பின் இந்த அறிவிப்பால் சர்வதேச சந்தையில் இன்று (திங்கள்கிழமை) எண்ணெய் விலை 10%-க்கும் மேல் சரிந்துள்ளது. சர்வதேச தரத்திலான பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை 14%-க்கும் மேல் குறைந்து, ஒரு பேரல் 96 டாலர் என்ற அளவில் விற்பனையானது.

## உலகின் மிகவும் மாசுபட்ட நாடுகள்: முதலிடத்தில் பாகிஸ்தான்!

**வாஷிங்டன், மார்ச் 25:**

காற்றில் உள்ள அபாயகரமான நுண்ணியத் துகள்கள் உலகளாவிய தரநிலையை விட மிகவும் அதிகமாக இருப்பதால் கடந்த 2025-ம் ஆண்டின் மிகவும் மாசுபட்ட நகரமாக பாகிஸ்தான் முதலிடத்தில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

சுவிஸ் காற்று தர கண்காணிப்பு நிறுவனமான ஐக்யூ ஏர் நிறுவனம் நடத்திய ஆய்வில், பாகிஸ்தானில் காற்றில் உள்ள நுண்ணிய துகள்களான பிஎம் 2.5 உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்த அளவைவிட 13 மடங்கு அதிகமாக இருப்பதாகவும் இதனால் உடல்நல அபாயங்கள் ஏற்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா, ஐஸ்லாந்து, எஸ்டோனியா மற்றும் பனாமா ஆகிய நாடுகள் உள்பட 2025-ல் மொத்தமாக 13 நாடுகள் மட்டுமே உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்தபடி, நுண்ணிய துகள்கள் பி.எம். 2.5 அளவில் 1 கன மீட்டருக்கு 5 மைக்ரோகிராமுக்கும் குறைவாக இருக்குமாறு பராமரித்து வருவதாக ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில், 2024 ஆம் ஆண்டைவிட அதிகமாக 7 நாடுகள் இணைந்துள்ளன.

ஆனால், அதிகபட்ச நாடுகள் காற்று மாசுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளன. ஆய்வில் கண்காணிக்கப்பட்ட 143 நாடுகளில் 130 நாடுகள் உலக சுகாதார நிறுவனம் குறிப்பிட்டுள்ள காற்று தர நிர்ணய அளவைப் பூர்த்திசெய்யத் தவறிவிட்டன.

மேலும், உலகின் 14% நகரங்கள் மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட காற்றுதர அளவைப்பூர்த்திசெய்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 2024-ஐ விட 17% குறைவு.

கனடாவில் ஏற்பட்ட காட்டுத்தீயின் காரணமாக அமெரிக்க மற்றும் ஐரோப்பாவில் கூட காற்று மாசு அளவு அதிகரித்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகம் மாசுபட்ட நாடுகளில் பாகிஸ்தானுக்கு அடுத்ததாக வங்கதேசம், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகள் 2 மற்றும் 3-ம் இடங்களில் உள்ளன.

## ஏர் கனடா விமானம் விபத்து: நியூயார்க் விமான நிலையத்தில் 2 விமானிகள் உயிரிழப்பு; 72 பயணிகள் தப்பினர்

**நியூயார்க், மார்ச் 25:**

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள லாகார்டியா சர்வதேச விமான நிலையத்தில், தரையிறங்கிய ஏர் கனடா எக்ஸ்பிரஸ் பயணிகள் விமானம் அங்கு நின்றிருந்த தீயணைப்பு வாகனத்தின் மீது மோதி விபத்துக் குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தின் முதன்மை விமானி மற்றும் துணை விமானி ஆகிய இருவர் உயிரிழந்தனர்.




இதுகுறித்து விமான நிலைய வட்டாரங்கள் கூறியதாவது: கனடாவின் மாண்ட்ரியல் நகரில் இருந்து 72 பயணிகள் மற்றும் 4 ஊழியர்களுடன் புறப்பட்ட 'ஏர் கனடா எக்ஸ்பிரஸ்' நிறுவனத்திற்குச் சொந்தமான சி.ஆர்.ஜே-900 ரக விமானம், ஞாயிற்றுக்கிழமை இரவு 11.37 மணியளவில் லாகார்டியா விமான நிலையத்தில் தரையிறங்கியது.

அப்போது ஓடுதளம் 4-ல் சுமார் 24 மைல் வேகத்தில் அந்த விமானம் சென்றுகொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக அங்கு நின்றிருந்த தீயணைப்பு வாகனத்தின் மீது பலமாக மோதியது. இந்த விபத்தில் விமானத்தின் முன் பகுதி பலத்த சேதமடைந்தது. இதில் விமானத்தை இயக்கிய முதன்மை விமானி மற்றும் துணை விமானி ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தீயணைப்பு வாகனத்தில் இருந்த ஒரு சார்ஜென்ட் மற்றும் ஒரு காவலர் ஆகிய இருவருக்கு பலத்த எலும்பு முறிவு ஏற்பட்டது. இதையடுத்து அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களின் நிலைமை தற்போது சீராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், விமானத்தில் இருந்த பயணிகளில் சிலருக்கு லேசான காயம் ஏற்பட்டதுடன் 72 பயணிகளும் உயிர்தப்பினர்.

விபத்தைத் தொடர்ந்து, லாகார்டியா விமான நிலையத்தை அமெரிக்க மத்திய விமானப்போக்குவரத்து ஆணையம் தற்காலிகமாக மூடியது. அவசரகால மீட்புப் பணிகள் மற்றும் முதற்கட்ட விசாரணையை முன்னிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் அங்கு தரையிறங்க வேண்டிய சுமார் 18-க்கும் மேற்பட்ட விமானங்கள் வேறு விமான நிலையங்களுக்குத் திருப்பி விடப்பட்டன. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.



# தேமுதிகவுக்கு 10 தொகுதிகள்! திமுகவுடன் ஒப்பந்தம் கையொப்பம்!

# தே.ஜ. கூட்டணியில் தமாகவுக்கு 5 தொகுதிகள்!

# குடும்ப தலைவிகளுக்கு விலையில்லா 'பிரிட்ஜ்'; அதிமுக தேர்தல் அறிக்கை



# ரெயில் டிக்கெட் ரத்து நடைமுறையில் மாற்றம் - ஏப்ரல் 1 முதல் அமல்

# போர் சூழலால் முட்டை ஏற்றுமதி பாதிப்பு: நாமக்கல்லில் பண்ணையாளர்களுக்கு ரூ.144 கோடி இழப்பு

# 'ஏஐ'யால் வழக்கறிஞராக முடியாது: உச்ச நீதிமன்ற நீதிபதி கருத்து


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 25.03.2026 புதன்கிழமை இலவச இ–பேப்பர்